விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

E-mail: valampurii@yahoo.com, valampurii@sltnet.lk

சங்கு 18 வள்ளுவர் ஆண்டு 2048 வைகாசி 11 வியாழக்கிழமை (25.05.2017) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 157

கல்யாண மாலை
(சர்வதேச திருமண சேவை)
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம் 1000/= மட்டுமே

## மகிந்தவுக்கு நடந்ததே நடக்கும்

# அரசாங்கம் மீது மக்கள் அதிருப்தி

## மனிதவுரிமை செயற்பாட்டாளர் சுட்டிக்காட்டு



(கொழும்பு)

நல்லாட்சி என்று கூறும் இந்த அரசாங்கம் தொடர்பில் மக்கள் மத்தியில் அதிருப்தி ஏற்பட்டுள்ளதென சுட்டிக்காட்டியுள்ள மனித உரிமை செயற்பாட்டாளர் காமினி வியான்கொட, கடந்த ஆட்சியில் மகிந்தவுக்கு ஏற்பட்ட நிலைமையே நல்லாட்சிக்கும் ஏற்படும் என எச்சரித்துள்ளார். (14-ம் பக்.)

## வவு.வில் மழையுடன் மினி சூறாவளி

(குருமன்காடு)

வவுனியாவில் நேற்று மதியம் ஏற்பட்ட திடீர் மழையுடன் கூடிய மினிசூறாவளியினால் மரங்கள் முறிந்து விழுந்து வாகனங்கள் பல சேதமடைந்துள்ளதுடன் 24☛

## 62,500 ஏக்கர் அமெரிக்காவுக்கு

(கொழும்பு)

நல்லாட்சி அரசாங்கம் பதுளை ஊவவெல்லசவிலுள்ள அறுபத்து இரண்டாயிரத்து ஐந்நூறு ஏக்கர் நிலப்பரப்பை சீனி தொழில் துறைக்காக அமெரிக்க நிறுவனம் 23☛

## நாடு தழுவிய ஹர்த்தால் ரத்து

(கொழும்பு)

அரசாங்கம் அளித்துள்ள வாக்குறுதிக்கு அமைய இன்று வியாழக்கிழமை மேற்கொள்ளப்படவிருந்த ஹர்த்தால் தற்கா 23☛

### ஜூன் 12-ம் திகதி

## வித்தியா கொலை வழக்கு; குற்றப்பத்திரிகை தாக்கல்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் புங்குடுதீவு பாடசாலை மாணவியான சிவலோகநாதன் வித்தியாவின் கூட்டு பாலியல் வல்லுறவு படுகொலை வழக்கானது எதிர்வரும் யூன் பன்னிரண்டாம் திகதி யாழ்.மேல் நீதிமன்றில், தமிழ் மொழி பேசும் மூன்று நீதிபதிகள் அடங்கிய ரயல் அட்பார் (நீதாய விளக்கமுறை) நீதிமன்றில் எடுத்துக்கொள்ளப்படவுள்ளது.

அன்றைய தினம் குறித்த மாணவியின் கூட்டு பாலியல் வல்லுறவு தொடர்பான குற்றச்சாட்டில் கைது செய்யப்ப 24☛

## வெடி பொருட்கள் மீட்பு



(யாழ்ப்பாணம்)

வலி.வடக்கு தையிட்டி பகுதியில் உள்ள கிணறு ஒன்றில் இருந்து பெருந்தொகையான வெடி பொருட்கள் மீட்கப்பட்டுள்ளதுடன் இன்றைய தினமும் மீட்பு நடவடிக்கைகள் நடைபெறவுள்ளது.

உயர் 23☛

### கிழக்கு மாகாணத்தில்

## 1700 பட்டதாரிகளுக்கு ஆசிரியர் நியமனங்கள்

(ஏறாவூர்)

கிழக்கு மாகாணத்தில் பட்டதாரிகளுக்கு நியமனம் வழங்கும் நடவடிக்கையில் முதற்கட்டமாக ஆயிரத்து 700 பட்டதாரிகளுக்கு ஆசிரியர் நியமனங்கள் வழங்கப்படவுள்ளதாக கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் அதிகாரியொருவர் நேற்றுத் தெரிவித்துள்ளார்.

அத்துடன் ஏனைய பட்டதாரிக 24☛

## அவு.இல் ஜனாதிபதி

(சிட்னி)

இலங்கை - அவுஸ்திரேலிய இருதரப்பு உறவுகளின் மைல்கல்லாக 23☛

### சம்பந்தனிடம் மன்னிப்புக் கோரி

## வடக்கு சபையில் அவசர பிரேரணை

(யாழ்ப்பாணம்)

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் தினத்தன்று முள்ளிவாய்க்காலில் நாடாளுமன்ற உறுப்பினரும் எதிர்க்கட்சி தலைவருமான இரா.சம்பந்தனுக்கு எதிராக கருத்துக்கள் வெளியிடப்பட்டமையை கண்டித்து வடமாகாண சபையின் இன்றைய 93 ஆவது அமர்வில் அவசர பிரேரணை ஒன்று கொண்டு வரப்படவுள்ளது.

வடமாகாண சபை 23☛

### இலங்கைக்கான அமெரிக்காவின்

## நிதி ஒதுக்கீட்டில் கணிசமான வெட்டு

(வாஷிங்டன்)

இலங்கை அரசாங்கத்தின் கண்ணிவெடி அகற்றும் திட்டங்களுக்கும், எல்லை கட்டுப்பாட்டுத் திட்டங்களுக்கும் ஆதரவளிப்பதற்காக, 2018ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில், 2.88 மில்லியன் டொலரை ஒதுக்குமாறு அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம் கோரியுள்ளது.

டொனால்ட் ட்ரம்ப் தலைமையிலான அமெரிக்காவின் புதிய அரசாங்கம், அமெரிக்காவுக்கு முதலிடம் என்ற கொள்கைளை நடைமுறைப்படுத்தியுள்ளது. இதன் கீழ் வெளிநாடுக 23☛

## வாள்வெட்டு; அடையாளம் காண்பிப்பு

(சாவகச்சேரி)

வாள்வெட்டுடன் தொடர்புடையவர்கள் என கொடிகாமம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டவர்கள் நேற்று அடையாளம் காணப்பட் 23☛

## கிறீஸ் மனிதன்

(கொழும்பு)

அமைச்சரவையில் மாற்றம் ஏற்பட்டு சில தினங்களே கடந்துள்ள 23☛

## அரசை வீழ்த்த பெரும் சூழ்ச்சி

(கொழும்பு)

அடிப்படைவாத இனவாத கருத்துக்களை பரப்பி நாட்டில் குழப்பங்களை ஏற்படுத்தி 23☛

### நாவற்குழி # விகாரை # தாதுகோபுரம்

## தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்ட நிலையில் 300 பிக்குகளின் சர்ச்சைக்குரிய வருகை

(யாழ்ப்பாணம்)

நாவற்குழி சமுத்தி சுமண விகாரையில் நிர்மாணிக்க முயற்சிக்கப்படும் தாது கோபுரத்துக்கு சாவகச்சேரி நகரசபையால் தடை விதிக்கப்பட்டுள்ள நிலையில் ராவண பலய அமைப்பை சேர்ந்த பௌத்த பிக்குகள் அடங்கிய 300 பேர் கொண்ட குழுவினர் இன்றைய தினம் குறித்த விகாரைக்கு வருகை தந்து ஆசீர்வாத பூஜை நிகழ்வில் ஈடுபடவுள்ளனர்.

இதனால் அப்பகுதியில் குழப்ப நிலைகள் உருவாகலாம் எனவும் அச்சம் தெரிவிக்கப்படுகிறது.

யாழ்ப்பாணம் நாவற்குழி சிங்கள மக்கள் குடியிருப்பு பகுதியில் அமைந்துள்ள பௌத்த விகாரையிலேயே மேற்படி அமைப்பினால் ஏற்பாடு செய்யப்பட்ட ஆசீர் 24☛

## 51 கிலோ கஞ்சா மீட்பு



24☛

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# மரண அறிவித்தல்

பிறப்பு
1956
-
07
-
28



இறப்பு
2017
-
05
-
22

## கோணேசன் தங்கராசா

துன்னாலை தெற்கு கரவெட்டியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கோணேசன் தங்கராசா அவர்கள் கடந்த 22.05.2017 அன்று காலமானார்.

அன்னார் கோணேசன் - இராமசி தம்பதியரின் அன்பு மகனும் கமலா தேவியின் அன்புக் கணவரும் ராகவன், சிறிதேவி, கட்டி ஆகியோரின் பாசமிகு தந்தையும் காலஞ்சென்ற கனகனுடைய சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (25.05.2017) வியாழக்கிழமை காலை 10 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக புட்டுத்தூர் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

(C-8679)

துன்னாலை தெற்கு,
கரவெட்டி.

தகவல்: த.ராகவன்
சுமிதா
077 740 1890


**தேவை**

முல்லைத்தீவு அளம்பில் பகுதியில் தென்னந்தோட்டத்தை பொறுப்பாக பராமரிப்பதற்கு வயதான ஒருவர் தேவை. தங்குமிட வசதி உண்டு. ஆரம்ப சம்பளம் ஒரு நாளைக்கு (C-8674)

ரூபா.800 0771681697


## திருடப்பட்ட பொருட்களுடன் ஒருவர் கைது

பருத்தித்துறை வராத்துப்பளைப் பகுதியில் 2016ஆம் ஆண்டு வீடு ஒன்றினை உடைத்து தொலைபேசி மற்றும் மடிக்கணனி என்பவற்றை திருடிய சம்பவம் தொடர்பில் சந்தேக நபரை கைது செய்ததுடன் பொருட்களும் மீட்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

மேற்படி பகுதியில் திருடப்பட்டமை தொடர்பில் வீட்டாரினால் செய்யப்பட்ட முறைப்பாட்டின் அடிப்படையில்விசாரணை மேற்கொண்டுவந்த பருத்தித்துறை பொலிஸார் நேற்று சேந்தாவத்தை தும்பளையைச் சேர்ந்த 26 வயதுடைய நபரைக் கைது செய்ததுடன் பொருட்களையும் மீட்டனர்.

சந்தேக நபருடன் மீட்கப்பட்ட பொருட்களை விரைவில் நீதிமன்றில் முற்படுத்தவுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (செ - 60)


**வலம்புரி** விளம்பரத் தொடர்புகளுக்கு 021 221 7603, 021 567 1532

**விற்பனைக்கு/வாடகைக்கு**

முல்லைத்தீவு நகருக்கு அண்மையில் கடற்கரை ஓரத்தில் ஹோட்டல் அமைக்கக்கூடிய விசாலமுடைய காணி விற்பனைக்கு உண்டு.

முல்லைத்தீவு நகரில் 12X30 அடி விசாலமுடைய கடை வாடகைக்கு உண்டு.

077 536 0958 (C-8675)

**ALLIANCE FRANÇAISE DE JAFFNA-**

பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்

af பிரெஞ்சு மொழி (9C14)



- பிரெஞ்சு கற்பதற்கு வடமாகாணத்தில் FRENCH EMBASSYயின்கீழ் இயங்கும் சர்வதேச நிறுவனம் ALLIANCE FRANÇAISE மட்டுமே
- அங்கிகரிக்கப்பட்ட CERTIFICATES & INTERNATIONAL DIPLOMAS (DELF, DALF)
- யாரும் படிக்கலாம்.www.ambafrance-lk.org

ஆரம்பம் : 27.05.2017 - நேரம் : 8.30 a.m

021 222 8093 61,கச்சேரி-நல்லூர் வீதி,யாழ்ப்பாணம்

**மீண்டும் சங்கானையில்!**

- **Dr. Mrs. S. நாகேந்திரா** அவர்கள்
  ஓய்வுபெற்ற வைத்திய நிபுணர், யாழ்ப்பாணம்
  திங்கள், புதன், வெள்ளி பி.பகல் 3 மணி
- **Dr. S. கருணாகரன் MBBS**
  தினம் காலை மாலை (OPD) வெளிநோயாளர் சேவை
- யாழ்.போதனா வைத்தியசாலை வைத்திய நிபுணர்கள் சேவை.
- ஆசிரி, டேடன்ஸ், சீமெட் ஆய்வுகூட சேவைகள்

**சம்பந்தர்**

மொடேர்ன் வைத்திய நிலையம்

சங்கானை மக்கள் வங்கி முன் வீதி
(நாகநாதன் வைத்தியசாலை அருகே) சங்கானை.
தொ.பேசி இல.0778730129 (9019)


# 2ம் ஆண்டு நினைவஞ்சலி / 1ம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு
31
10
1933

இறப்பு
18
05
2015





பிறப்பு
31
05
1941

இறப்பு
11
05
2016

அமரர் **கிருஸ்ணசாமி பாலசுப்பிரமணியம்** அமரர் **பாலசுப்பிரமணியம் சுந்தரவதனா**

திதி-பிரதமை 26.05.2017

காலங்கள் கடந்து செல்லச் செல்ல
உங்கள் இருப்பு தேவை உணர்ந்து
உள்ளூர உடைந்து இரண்டு, ஓராண்டுகள்
சென்றாலும் எம்மை விட்டகலாது உங்கள் நினைவுகள்


26.05.2017 முற்பகல் 11 மணியளவில் ஆத்மா சாந்திப் பிரார்த்தனையில் அனைவரையும் கலந்து கொண்டு அதனை தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் கேட்டுக் கொள்கின்றோம்

பா.கிருஸ்ணகுமார்
(கிஷாந் ரவல்ஸ் உரிமையாளர்) நெடியகாடு, வல்வெட்டித்துறை. (C-8653)

தகவல்
குடும்பத்தினர், மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், துரையப்பா

# இன மதக் கலவரங்களுக்கு இலங்கையில் இடமில்லை

## பிரதமர் ரணில் உறுதி




இனம் மற்றும் மதக்கலவரங்கள் இனிமேலும் இலங்கையில் தலையெடுக்க இடமளிக்கப்படமாட்டாது என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க உறுதியாக தெரிவித்தார்.

தேசிய இளைஞர்பேரவையின் விருது வழங்கும் நிகழ்வில் பிரதமர் உரையாற்றினார். இந்த வைபவம் அலரி மாளிகையில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இந்த நிகழ்வின் போது 2016ஆம் ஆண்டு இளைஞர் கொடித்தினத்தில் 3இலட்சத்து 74 ஆயிரத்து 580 ரூபாவுக்கு மேற்பட்ட வருமானத்தை பெற்ற இளைஞர் கழக பிரதேச சபையான யாழ்ப்பாணம் இளைஞர் மன்ற பிரதேச சபைக்கு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க விருதினை வழங்கினார்.

பிரதமர் இங்கு தொடர்ந்து உரையாற்றுகையில், சட்டத்தை மீறி கலவரங்களை தோற்றுவிப்போருக்கு எதிராக உடனடி நடவடிக்கை எடுக்கும் பொறுப்பு பொலிஸாருக்கு இருப்பதாக கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், இனவாதப் பிரசாரங்கள் மூலம் நாட்டின் ஸ்திரத்தன்மையை சீர்குலைக்க முயற்சித்து தோல்வி கண்டுள்ளனர். இவ்வாறானோர் தற்பொழுது மதக்கலவரம் மூலம் தமது நோக்கத்தை நிறைவேற்றுவதற்கு முயற்சிக்கின்றனர்.

இத்தகைய சம்பவங்களை நாம் அனைவரும் ஒன்றிணைந்து கண்டிக்க வேண்டும்.

சமாதானம் இல்லாமல் எதனையும் சாதிக்க முடியாது. 1985ஆம் ஆண்டுக்கு பின்னர் மக்களின் வாழ்க்கை முறை சீர்குலைந்தது.

வடக்கில் வாழ்ந்த இளைஞர்கள் நாட்டை விட்டு வெளியேறினர். வடக்கு மற்றும் கிழக்கில் வாழும் மக்கள் இன்று சமாதானத்தின் பயனை அனுபவிக்கின்றனர்.

இளைஞர்களுக்கு சிறப்பான எதிர்காலத்தை உருவாக்குவதற்காக சமகால அரசாங்கம் அர்ப்பணிப்புடன் செயற்படுகின்றது. நாட்டில் இனிமேலும் எவரும் ஆயுதம் ஏந்தக்கூடாது. அவ்வாறான ஒரு நிலை மீண்டும் ஏற்படுமாயின் நாட்டிற்கு துன்பநிலையே ஏற்படும் என்று பிரதமர் சுட்டிக்காட்டினார்.

நல்லாட்சி அரசாங்கத்தின் கீழ் தயாரிக்கப்பட்டு வரும் புதிய அரசியல் யாப்பு நாட்டின் சமாதானத்தையும் ஸ்திரத்தன்மையையும் உறுதி செய்யும்.

இலங்கையுடனான சர்வதேச உறவு தற்பொழுது மேம்பட்டுள்ளது. பல நாடுகள் இலங்கைக்கு உதவ முன்வந்துள்ளன. இந்தியாவும் சீனாவும் மின்சக்தி உற்பத்தி உள்ளிட்ட பல்வேறு துறைகளில் உதவ முன்வந்துள்ளன என்றும் பிரதமர் மேலும் தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் சட்டம் ஒழுங்கு தெற்கு அபிவிருத்தி அமைச்சர் சாகல ரத்நாயக்க, தேசிய இளைஞர்கள் சேவைகள் மன்றத்தின் பணிப்பாளர் நாயகம் சட்டத்தரணி எரந்திக்க வெலியங்கே அமைச்சின் செயலாளர்கள், இளைஞர் பாராளுமன்ற பிரதமர் மற்றும் உறுப்பினர்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். (இ-7)

## தேசிய நல்லிணக்கத்தை பாதிக்கும் சம்பவங்களை தவிர்க்க வேண்டும்

### பதில் பொலிஸ்மா அதிபர் பணிப்பு

(கொழும்பு)

தேசிய நல்லிணக்கத்திற்கு பாதிப்பு ஏற்படும் வகையிலான சம்பவங்களை தவிர்க்க நடவடிக்கை எடுக்குமாறு பதில் பொலிஸ்மா அதிபர் சீ.டி.விக்ரமரத்ன அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர்கள், மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர்கள், பொலிஸ் அதிகாரிகள், பிரதேசங்களுக்கு பொறுப்பான உதவிப் பொலிஸ் அத்தியட்சகர்கள் மற்றும் அனைத்து பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிகளுக்கும் எழுத்து மூலம் இந்த பணிப்புரை வழங்கப்பட்டுள்ளதாக, பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரியந்த ஜெயக்கொடி தெரிவித்தார்.

பிரதேசங்களில் சட்டம், அமைதியை உரிய முறையில் பேணுவதோடு, மத, வர்க்க மற்றும் இன நல்லிணக்கத்திற்கு பாதிப்பை ஏற்படுத்தும் சம்பவங்களை தவிர்க்க நடவடிக்கை எடுக்குமாறும் சீ.டி.விக்ரமரத்ன கூறியுள்ளார்.

மேலும், இதுபோன்ற சம்பவங்கள் ஏற்படின் சட்டத்தை கடுமையான முறையில் நடைமுறைப்படுத்துமாறும் பதில் பொலிஸ்மா அதிபர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அத்துடன், அவ்வாறு சட்டத்தை உரிய முறையில் செயற்படுத்தாத பொலிஸாருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

தேசிய நல்லிணக்கத்திற்கு பாதிப்பை ஏற்படுத்தும் செயற்பாடுகள் சில, அண்மைக் காலங்களாக பல இடங்களில் பதிவாகியுள்ளதாகவும், இதுபோன்ற செயற்பாடுகள் மீள ஏற்படாது இருக்க பதில் பொலிஸ்மா அதிபர் விக்ரமரத்ன பணிப்புரை விடுத்துள்ளதாகவும் பிரியந்த ஜெயக்கொடி மேலும் கூறியுள்ளார். (இ-7)

## இடிந்த கட்டடம் குறித்து அமைச்சரவையில் ஆராய்வு

வெள்ளவத்தையில் கட்டடமொன்று இடிந்து விழுந்தமையினால் ஏற்பட்ட பாதிப்புக்கள் தொடர்பிலும், அவ்வாறான அனர்த்தங்கள் எதிர்காலத்தில் ஏற்படாதிருக்கும் என உறுதிப்படுத்துவதற்கு உகந்த நடவடிக்கைகளின் தேவை தொடர்பிலும் அமைச்சரவையில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது. நேற்று முன்தினம் இடம்பெற்ற அமைச்சரவை கூட்டத்தின் போதே இது தொடர்பில் ஆராயப்பட்டுள்ளது.

குறித்த கட்டடத்தின் நிர்மாணப்பணிகளுக்குரிய அனுமதி பெற்றுக் கொள்ளப்படவில்லை எனவும் இதன் போது தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, சட்ட விரோதமாக அக்கட்டடத்தை நிர்மாணிப்பதற்கு அனுமதி வழங்கிய பொறுப்பான அதிகாரிகள் தொடர்பிலும் உரிய விசாரணை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும், அவ்விசாரணைகளின் முடிவுகளின் படி குறித்த பொறுப்புள்ள அதிகாரிகளுக்கு எதிராக சட்ட ரீதியான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் எனவும் இதன்போது அமைச்சர் சம்பிக்க ரணவக்க அமைச்சரவையின் கவனத்துக்கு கொண்டு வந்தார்.

எதிர்காலத்தில் இவ்வாறான சம்பவங்கள் ஏற்படாது இருக்கும் வகையில் குறித்த பொறுப்புள்ள அதிகாரிகளுக்கு ஏற்கனவே ஆலோசனை வழங்கப்பட்டுள்ளதாகவும் பாரிய நகரம் மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்க இதன்போது சுட்டிக்காட்டியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## இலங்கையில் தற்கொலை தொடர்பில் ஒரு நல்ல செய்தி, ஒரு கெட்ட செய்தி

இலங்கையில் தற்கொலை செய்துகொள்பவர்களின் எண்ணிக்கை கணிசமாகக் குறைந்திருப்பதாகவும், அதேவேளை தற்கொலை முயற்சியில் ஈடுபடுபவர்களின் எண்ணிக்கை தொடர்ந்து அதிகரித்து வருவதாகவும் சுமித்ரயோ அமைப்பு தெரிவித்துள்ளது.

மனநல ஆலோசனைகள் மற்றும் மறுவாழ்வு உதவிகளைச் செய்துவரும் சுமித்ரயோ அமைப்பு விடுத்துள்ள அறிக்கையில் உலகில் அதிகளவானோர் தற்கொலை செய்து கொள்ளும் நாடுகளில் 1995 ஆம் ஆண்டு இலங்கை முதலிடத்தில் இருந்தது.

இதன் பேரில் நடவடிக்கை எடுத்த அப்போதைய அரசாங்கம், தற்கொலைகளைத் தடுக்கும் நோக்கில் விசேட தேசியக் கொள்கையை அறிமுகப்படுத்தியது. இதன் அடிப்படையில் மனநலக் கோளாறுகள், மது, போதை மருந்துப் பாவனை மற்றும் ஒத்துழைப்புப் பண்புக் குறைபாடு என்பனவே தற்கொலைகளுக்கான முக்கிய காரணங்கள் என்று கண்டறியப்பட்டது.

இந்த ஆய்வின் அடிப்படையில் ஜனாதிபதிக்கான சிறப்பு அதிரடிப்படையும் நடவடிக்கை எடுத்து வந்தது. அது முதல் தற்கொலை செய்து கொள்பவர்களின் எண்ணிக்கை படிப்படியாகக் குறைய ஆரம்பித்தது. தற்போது தற்கொலை செய்துகொள்பவர்களின் எண்ணிக்கை குறைந்திருக்கும் போதும், தற்கொலை முயற்சியில் ஈடுபடுபவர்களின் எண்ணிக்கை அதிகரித்துச் செல்வது அச்சுறுத்துவதாக இருப்பதாக சுமித்ரயோ அமைப்பு குறிப்பிட்டுள்ளது. (இ-7)

## நீதிமன்றை அவமதித்த ஞானசாரர் வழக்கு 31ம் திகதிக்கு ஒத்திவைப்பு

(கொழும்பு)

பொதுபல சேனா அமைப்பின் பொதுச் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் மீதான, நீதிமன்ற அவமதிப்பு வழக்கு நேற்று மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.



எனினும் நேற்று கலகொட அத்தே ஞானசார தேரர் நீதிமன்றத்தில் ஆஜராகி இருக்கவில்லை. சுகயீனம் காரணமாக ஞானசார தேரர் நீதிமன்றத்தில் ஆஜராகவில்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த வழக்கு இம்மாதம் 31 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது. (இ-7)

# உமர் அக்மல் நீக்கப்பட்ட விவகாரம் பயிற்சியாளர் - இன்சமாம் மோதல்

சம்பியன்ஸ் டிராபி கிரிக்கெட் போட்டிக் கான பாகிஸ்தான் அணியில் இருந்து உமர் அக்மல் நீக்கப்பட்ட விவகாரத்தில் பயிற்சியாளர் - இன்சமாம் இடையே மோதல் ஏற்பட்டுள்ளது.

சம்பியன்ஸ் டிராபி கிரிக்கெட் போட்டிக் கான பாகிஸ்தான் அணியில் இருந்து உமர் அக்மல் நீக்கப்பட்டார்.

2 முறை நடத்தப்பட்ட உடல் தகுதி சோதனையில் அவர் தோல்வி அடைந்தார். இதை தொடர்ந்து உமர் அக்மலை இங்கிலாந்தில் இருந்து உடனடியாக திரும்புமாறு பாகிஸ்தான் கிரிக்கெட் வாரியம் உத்தரவிட்டது. அவருக்கு பதிலாக ஹாரிஸ் சோகைல் பாகிஸ்தான் அணியில் சேர்க்கப்பட்டுள்ளார்.



இந்த நிலையில் உமர் அக்மல் விவகாரத்தில் பாகிஸ்தான் தேர்வு குழு தலைவர் இன்சமாம் - பயிற்சியாளர் மிக்சி ஆர்தர் இடையே மோதல் பிளவு ஏற்பட்டு இருக்கிறது. உமல் அக்மலுக்கு முதலில் தேசிய கிரிக்கெட் அக்கடமியில் இன்சமாம் மேற்பார்வையில் உடல் தகுதி சோதனை நடத்தப்பட்டது. இதில் அவர் உடல் தகுதியுடன் இருப்பதாக தெரிவிக்கப்பட்டது. இதை தொடர்ந்து அவரை சம்பியன்ஸ் டிராபி அணியில் தேர்வு குழு தேர்வு செய்தது.

ஆனால் இந்த உடல் தகுதி தேர்வில் பயிற்சியாளர் ஆர்தருக்கு திருப்தி அளிக்கவில்லை. இதை தொடர்ந்து இங்கிலாந்து சென்ற பிறகு உமர் அக்மலுக்கு 2-வது முறையாக உடல் தகுதி சோதனை செய்ய அவர் உத்தரவிட்டார். இந்த உடல் தகுதி சோதனையில் அவர் உடல் தகுதியுடன் இல்லை என்பது தெரியவந்தது. இதைத் தொடர்ந்து உமர் அக்மலை நீக்கியது. இந்த விவகாரத்தில் இன்சமாம்- ஆர்தர் இடையே மோதல் உருவாகி இருக்கிறது.

## இந்தியா - பாகிஸ்தான் போட்டி எங்கள் கட்டுப்பாட்டில் இல்லை

### ஹோலி கருத்து



சம்பியன்ஸ் டிராபி கோப்பை தொடரில் இந்தியா - பாகிஸ்தான் போட்டி குறித்த ஹைப் தங்கள் கட்டுப்பாட்டில் இல்லை என்று விராட் ஹோலி கூறியுள்ளார்.

சம்பியன்ஸ் டிராபி கிரிக்கெட் போட்டி அடுத்த மாதம் (ஜூன்) 1ஆம் திகதி முதல் 18ஆம் திகதி வரை இங்கிலாந்தில் நடக்கிறது. இப்போட்டித் தொடரில் பங்கேற்பதற்காக விராட் ஹோலி தலைமையிலான இந்திய அணி நேற்று இங்கிலாந்து புறப்பட்டு சென்றது.

முன்னதாக இப்போட்டி குறித்து விராட் ஹோலி செய்தியாளர்களை சந்தித்தார். அப்போது அவர் கூறியதாவது,

வலுவான அணிகள் இருந்தால் மட்டுமே போட்டி அதிகமாக இருக்கும். தோனி மற்றும் யுவராஜ் சிங் ஆகியோர் அணிக்கு வலுவான இரு தூண்கள் போன்றவர்கள்.

பாகிஸ்தானுடனான போட்டி குறித்து எந்த அழுத்தமும் எங்களுக்கு கிடையாது. கிரிக்கெட் வீரர்கள் என்ற முறையில், மைதானத்திற்கு வெளியே நடக்கும் விஷயங்களை கட்டுப்படு த்த எங்களால் முடியாது. பாகிஸ்தானு டனான போட்டி முக்கியமான போட்டி என்பது எங்களுக்கு தெரியும். ஆனால், எங்களுக்கு எந்த வித்தியாசமும் தெரியவில்லை.

இந்தியா-பாகிஸ்தான் போட்டி தொடர்பான ஹைப் மற்றும் சூழல் எங்களுக்கு அப்பாற்பட்டது. ஆனால், எங்களைப் பொருத்தவரை பிற அணிகளுடனான போட்டியைப் போன்றே பாகிஸ்தானுடனான போட்டியையும் பார்க்கிறோம் என்றார்.

நடப்பு சம்பியனான இந்திய அணி தொடக்க ஆட்டத்தில் பாகிஸ்தானை 4ஆம் திகதியும், 2-வது ஆட்டத்தில் இலங்கையை 8ஆம் திகதியும், கடைசி லீக் ஆட்டத்தில் தென்னாபிரிக்காவை 11ஆம் திகதியும் சந்திக்கிறது.

## விஞ்ஞான பீட மாணவர்கள் வகுப்பு புறக்கணிப்பு

யாழ். பல்கலைக்கழக விஞ்ஞான பீட சிங்கள மாணவர்கள் 9 பேருக்கு வகுப்புத்தடை விதிக்கப்பட்டமைக்கு எதிர்ப்பு தெரிவித்து விஞ்ஞான பீட மாணவர்கள் வகுப்பு புறக்கணிப்பை நேற்றைய தினம் ஆரம்பித்துள்ளனர்.

கடந்த பெப்ரவரி மாதம் விஞ்ஞான பீட முதலாம் வருட மாணவர்களுக்கும் இரண்டாம் வருட மாணவர்களுக்கும் இடையில் மோதல் இடம்பெற்று முதலாம் வருட மாணவர்கள் காயமடைந்திருந்தனர்.

அதில் மோதலில் ஈடுபட்டதாக இரண்டாம் வருட சிங்கள மாணவர்கள் 8 பேரும் 3 ஆம் வருட சிங்கள மாணவர் ஒருவருக்கும் எதிராக கடந்த மார்ச் மாதம் 9 ஆம் திகதி ஒருவருட கால வகுப்புத்தடை விதிக்கப்பட்டது. ஆனால் அன்றைய தினம் பரீட்சைகள் இடம்பெற்று வந்தமையால் குறித்த வகுப்புத்தடை தற்காலிகமாக நிறுத்தப்பட்டிருந்தது.

தற்போது மேற்படி மாணவர்கள் மூன்றாம் வருடத்தில் கல்வியை ஆரம்பித்துள்ளனர்.

இந்த நிலையில் இம் மாணவர்களுக்கான ஒருவருட வகுப்புத்தடை கடந்த 15 ஆம் திகதி நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

இதையடுத்தே இச் செயற்பாடு மாணவர்கள் மத்தியில் பிரச்சினைகளை. மனக்கசப்பை உருவாக்கும் என தெரிவித்து குறித்த வகுப்புத் தடையை நீக்குமாறு கோரி நேற்றைய தினம் விஞ்ஞான பீட மாணவர்கள் வகுப்பு புறக்கணிப்பை ஆரம்பித்துள்ளனர். (செ-9)


**வேலையாள் தேவை**

நல்லூர் கோவில் வீதியில் இயங்கும் சைவ உணவகத்திற்கு றொட்டி தயாரிப்பாளர் தேவை.

தொடர்புகளுக்கு : 0772479723

(9018)


## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இலங்கை

**அழைப்பின் பேரில் வான் (Van) குளிரூட்டல் வசதியுடன் வாடகைக்கு வழங்கக்கூடியவர்களிடமிருந்து கேள்விப் பத்திரங்கள் கோரல்**

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் உத்தியோகபூர்வ தேவைக்காகவும், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் கிளிநொச்சி அறிவியல் நகரில் அமைந்துள்ள பொறியியல், விவசாய மற்றும் தொழில்நுட்ப பீடங்களின் உத்தியோகபூர்வ தேவைக்காகவும் தேவையான நேரங்களில் பயன்படுத்துவதற்கு (On call basis) ஆங்கில இலக்கப் பதிவுடைய மேற் குறிப்பிட்ட வாகனங்களின் சேவையை அவ்வாகனத்திற்கான சாரதி, எரிபொருள், காப்புறுதி மற்றும் திருத்தவேலைகள் போன்றவற்றுடன், கிலோமீற்றர் அடிப்படையில் வாடகைக்கு வழங்கக்கூடிய வாகன உரிமையாளரிடமிருந்து விலைமனு கோரப்படுகின்றது.

மேற்படி வாகனங்களின் பயண ஆரம்ப கிலோமீற்றர் கணிப்பீடுகள் யாவும் பல்கலைக் கழக பிரதான வளாகத்தின் தேவைக்கான வாகனங்களாயின் பிரதான வளாகத்திலிருந்தும், கிளிநொச்சி அறிவியல் நகரில் உள்ள பீடங்களின் தேவைக்கான வாகனங்களாயின் அறிவியல் நகரில் அமைந்துள்ள பீடங்களில் இருந்தும் கணிப்பீடு செய்யப்படும். மேலும் வாகனத்தின் முதற்பதிவு ஆனது 2014ஆம் ஆண்டுக்கு பிற்பட்டதாகவும் வாகனத்தின் உற்பத்திக்காலம் 2011ஆம் ஆண்டுக்கு பிற்பட்டதாகவும் இருக்கவேண்டும்

மேற்படி வாகனங்களின் விண்ணப்பப் படிவம் மற்றும் விலை ஆவணங்களையும் மேலதிக விபரங்களையும் 05.06.2017 மதியம் 12.00 மணிவரை மீளளிப்புச் செய்யப்படாத வைப்புப்பணமாக தனித்தனியாக வாகனம் ஒன்றிற்கு ரூபா. 1000.00 என்ற வகையில் பல்கலைக்கழகக் காசாளர் கருமபீடத்தில் செலுத்திப் பெற்ற பற்றுச்சீட்டை உதவிப்பதிவாளர் / நிர்வாகம், திருநெல்வேலி, யாழ்ப்பாணம் அவர்களிடம் சமர்ப்பித்து கேள்விப்பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளலாம். மேலும் கிளிநொச்சி அறிவியல் நகரில் அமைந்துள்ள பொறியியல், விவசாய மற்றும் தொழில்நுட்பபீடங்களினது கேள்விப் பத்திரங்களை கிளிநொச்சி அறிவியல் நகரில் அமைந்துள்ள கிளிநொச்சி வளாகப் பிரதிப் பதிவாளர் அலுவலகத்திலும் மேற்படி பணத்தினைச் செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம்.

முறையாகப் பூர்த்திசெய்யப்பட்டு அரக்கிடப்பட்ட ஆவணங்களை தனித்தனியாக உறையிலிட்டு கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம் திருநெல்வேலிக்கு வான் வழங்குவதற்கான விண்ணப்பமாயின் "வான் ஒன்றை வாடகைக்கு வழங்குவதற்கான கேள்வி" எனவும் கிளிநொச்சி அறிவியல் நகரில் அமைந்துள்ள அனைத்து பீடங்களுக்கும் வான் வழங்குவதாயின் "கிளிநொச்சியிலுள்ள அனைத்து பீடங்களுக்கும் வான் வழங்குதல்" எனவும் அடையாளமிட்டு 2017.06.12 பிற்பகல் 2.30 மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாகப் பதிவுத்தபாலில் தலைவர், கேள்விச் சபை, த.பெ.எண் 57, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், திருநெல்வேலி என்னும் முகவரிக்கு அனுப்பி வைக்கலாம். நேரடியாகச் சமர்ப்பிக்க விரும்புவோர் மேற்குறித்த காலவரையறைக்குள் பதிவாளர் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியினுள் இடலாம்.

கேள்வி விண்ணப்பங்கள் 2017.06.12 அன்று பி.ப 3.00 மணிக்கு பரிசீலிக்கப்படும். மனுதாரர்கள் அல்லது அவர்களால் அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதிகள் ஆவணங்கள் பரிசீலிக்கப்படும் இடமான சபா மண்டபத்திற்கு சமுகமளிக்கலாம். பல்கலைக்கழக கேள்விச் சபையின் முடிவே இறுதியானது.

தலைவர்,
கேள்விச்சபை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம். (C-8676)

## மரண அறிவித்தல்

# அமரர் முத்தையா வடிவேலு (செட்டியார்)

| தோற்றம் | | மறைவு |
|---|---|---|
| 25 - 04 - 1939 |  | 23 - 05 - 2017 |

நீலாட்சி பகுதி கலைமகள் வீதி, இமையாணன் கிழக்கு, உடுப்பிட்டியை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட அமரர் முத்தையா-வடிவேலு (செட்டியார்) அவர்கள் 23.05.2017 செவ்வாய்க்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற முத்தையா-ஆனந்தியின் அன்பு மகனும், காலஞ்சென்ற தம்பு-சித்திரம் அவர்களின் மருமகனும், சிவக்கொழுந்தின் அன்புக் கணவரும், நிர்மலா, சசிகலா (UK), சசிதரன் (UK) அவர்களின் அன்பு தந்தையாரும், காலஞ்சென்ற கற்பகம் (கற்கண்டு), சீனிப்பிள்ளை அவர்களின் பாசமிகு சகோதரனும், உதயகுமார், ஜெயகாந்தன் (UK), சர்மிலா (UK), தெய்வேந்திரன் (ஓய்வுநிலை விசாரணை அதிகாரி-இ.போ.ச), தர்மரத்தினம் (நவிண்டில்), குணசேகரம், அருந்தவராணி, அருந்தவச்செல்வம், சாந்தி அவர்களின் மாமனாரும், மகேஸ்வரி, மனோன்மணி, ஈஸ்வரி, யோகேஸ்வரி, அமரர் இராசன், அமரர் செல்வச்சந்திரன், ரவிச்சந்திரன் ஆகியோரின் மைத்துனனும், அப்பையா, பொன்னம்பலம், பஞ்சவர்ணம், தங்கவேலாயுதம், கமலாதேவி, அரசம்மா, இலங்கேஸ்வரி ஆகியோரின் உடன் பிறவா சகோதரனும், செந்தூரன், சரிதா, சுபாங்கி, சுபாநந், லஷானா ஆகியோரின் பேரனும் தாரங்கியின் அன்பு பூட்டனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் அவரின் இல்லத்தில் 25.05.2017 இன்று காலை 10.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வல்லை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கரணவாய் மத்தி, கரவெட்டி

தகவல்:- குடும்பத்தினர்.

(சி-8678)

# வீதி ஒழுங்கு விதிகள், விபத்துக்களை தடுத்தல் தொடர்பில் வடமாகாணத்திலுள்ள சாரதிகளுக்கு பயிற்சி செயலமர்வு

வடமாகாணத்திலுள்ள அனைத்து பிரதேச செயலர் பிரிவுகளிலும் பதிவு செய்யப்பட்டுள்ள கனரக வாகனங்கள், பாரவூர்திகள், டிப்பர் வகையான வாகனங்கள், நான்கு சில்லுஉழவுஇயந்திரம், இரண்டு சில்லு உழவு இயந்திரம் என்பவற்றின் சாரதிகளுக்கான வீதி ஒழுங்கு விதிகள், விபத்துக்கள் தடுத்தல் மற்றும் வாகனப்பராமரிப்பு தொடர்பான சாரதிகளுக்கான பயிற்சி செயலமர்வு வடமாகாண போக்குவரத்து அமைச்சு மற்றும் வடமாகாண மோட்டார் போக்குவரத்து திணைக்களம் என்பவற்றின் அனுசரணையுடன் பிரதேச செயலாளர்களின் ஒழுங்குபடுத்தலுடன் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது

இக் கருத்தரங்கில் யாழ். மாவட்ட ஓய்வுநிலை மோட்டார் போக்குவரத்து உதவி ஆணையாளர் வ.பத்மநாதன் மற்றும் வடமாகாண வீதி அபிவிருத்தி திணைக்களத்தின் இயந்திரப் பொறியியலாளர் ம.ரவீந்திரன் குரூஸ் ஆகியோர் வளவாளர்களாக கலந்து இப்பயிற்சியினை வழங்குவதுடன் போக்குவரத்து விதிமுறைகள் மற்றும் போக்குவரத்தின் போது கடைப்பிடிக்க வேண்டிய நடைமுறைகள் உள்ளடங்கிய நூல்களும் பயிற்சியாளர்களுக்கு இலவசமாக வழங்கப்படுவதுடன் பயிற்சியின் முடிவில் பங்குபற்றியதற்கான சான்றிதழும் வழங்கப்படும். பயிற்சியில் பங்குபற்றுவர்களிற்கான் அழைப்பிதழ் கடிதங்கள் பிரதேச செயலாளர்களினால் சம்பந்தப்பட்டவர்களிற்கு உரிய காலத்தில் அனுப்பி வைக்கப்படும்

இப் பயனுள்ள கருத்தரங்கில் உரிய வாகன சாரதிகள் தவறாது கலந்து கொள்ளுமாறு வடமாகாண போக்குவரத்து அமைச்சின் செயலாளர் சி.சத்தியசீலன் அறிவித்துள்ளார்.(இ

# நல்லூர் செயலகத்தால் தொழிற்சந்தை ஏற்பாடு


(யாழ்ப்பாணம்)

மனிதவலு வேலை வாய்ப்புத் திணைக்களத்தின் அனுசரணையுடன் நல்லூர் பிரதேச செயலகத்தினால் ஒழுங்கு செய்யப்பட்ட பிரதேச தொழிற்சந்தை -2017 (வேலை வாய்ப்பிற்கான நேர்முகத் தேர்வு) நாளை மறுதினம் 27 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணி முதல் பிற்பகல் 2 மணி வரை நல்லூர் பிரதேச செயலகத்தில் இடம்பெறும். தொழில் வாய்ப்பிற்காகக் காத்திருக்கும் இளைஞர் யுவதிகள் அன்றைய தினம் தேசிய அடையாள அட்டை, கல்விச் சான்றிதழ் மற்றும் சுயவிபரக் கோவையுடன் சமூகம் தந்து இந்த அரிய வாய்ப்பினைப் பயன்படுத்திக் கொள்ளுமாறு பிரதேச செயலர் ஆழ்வாப்பிள்ளை சிறி அறிவித்துள்ளார். (இ-3)

# மரணஅறிவித்தல்

## திருமதி சிவலோகநாயகி சிதம்பரநாதன்

தோற்றம் - 01.03.1944 மறைவு - 23.05.2017



மந்திகையை பிறப்பிடமாகவும் சாவகச்சேரி கல்வயல், சொய்சா புரத்தை வதிவிடமாகவும் கொண்ட திருமதி.சிவலோகநாயகி சிதம்பரநாதன் அவர்கள் 23.05.2017 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் மந்திகை கண்ணகி அம்மன் கோவிலடியைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான நடராசா-யோகம்மா தம்பதியரின் புதல்வியும் சாவகச்சேரி இந்துக் கல்லூரியின் முன்னாள் ஆசிரியரும் தேசிய கல்வி நிறுவக முன்னாள் தமிழ் பிரிவு பணிப்பாளருமான நடராசா சிதம்பரநாதன் அவர்களின் அன்பு மனை வியும் காலஞ்சென்ற இரத்தினசபாபதி, பரிபூரணம், அன்னபூரணம், மகாதே வன், காலஞ்சென்ற சிவானந்தவல்லி, பூரணச்சந்திரன் ஆகியோரின் சகோதரி யும் அருட்செல்வன் (உதவித் திட்டமிடல் பணிப்பாளர்), செந்திற்செல்வன் (உதவிப் பதிவாளர்), உமாநிதி (ஜேர்மன்), சிவச்செல்வன் (களஞ்சிய காப்பாளர்), திருச்செல்வன் (மருந்தகவியலாளர்), தயாநிதி (லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயாரும் ஜெகதாம்பாள், கோமதி, சத்தியா, காயத்திரி, ரஜனி ஆகியோரின் மாமியாரும் உஷாந்தினி, லோஜிகா, வேதினி, யுகேஷ், அருணன், கஸ்தூரி, கலாகரன், சேதுசன், அர்ச்சயன், அபிரதன், தனேந்திரன், லதுமிதா, கயல்விழி, துலாஞ்சலி, கவினி ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் 25.05.2017 இன்று வியாழக்கிழமை பிற்பகல் 3.00 மணியளவில் பொலிகண்டி கந்தவனக் கடவையில் உள்ள அவரது இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் வல்வெட்டித்துறை ஊறணி மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

கந்தவனக் கடவை,
பொலிகண்டி.

தகவல் : குடும்பத்தினர்.
077 907 3802, 077 851 9765,
077 647 8729

(9011)

# அமைச்சர்களுக்கு புதிய வாகனங்களை கொள்வனவு செய்வதை நிறுத்துங்கள்

## அரச நிதி தெரிவுக்குழு அறிவிப்பு

அரசாங்கத்தின் அமைச்சர்களுக்கு வாகனங்களை இறக்குமதி செய்ய முன்வைக்கப்பட்ட குறை மதிப்பீட்டுக்கு அனுமதி வழங்க முடியாது என அரச நிதி நாடாளுமன்ற தெரிவுக்குழு, சபாநாயகர் கரு ஜயசூரியவுக்கு அறிவித்துள்ளது.

அமைச்சர்கள் தற்போது பயன்படுத்தும் வாகனங்கள் தொடர்பான அறிக்கையை வழங்கும் வரை அமைச்சர்களுக்கு புதிய வாகனங்களை கொள்வனவு செய்வதை நிறுத்துமாறு நிதி தெரிவுக்குழு, வரவு செலவு தொடர்பான திணைக்களத்திடம் கோரியுள்ளது. அரச நிதி தெரிவுக்குழுவின் அறிக்கையை நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்த அதன் தலைவர் எம். ஏ.சுமந்திரன் இதனை சபாநாயகருக்கு அறிவித்துள்ளார்.

அமைச்சர்கள் சிலருக்கு புதிய வாகனங்களை கொள்வனவு செய்வதற்காக நாடாளுமன்றத்தின் அனுமதி பெற அரசாங்கம் இரண்டு குறை மதிப்பீடுகளை சமர்ப்பித்திருந்தது.

அதற்கு நாடாளுமன்றம் அனுமதி வழங்கியிருந்தது. எனினும் அரச நிதி தொடர்பான நாடாளுமன்ற தெரிவுக்குழு அதனை தற்காலிகமாக நிறுத்தியுள்ளது. கடந்த 2015ஆம் ஆண்டு முதல் அமைச்சர்களுக்கு கொள்வனவு செய்த வாகனங்கள் அவற்றின் தற்போதைய நிலைமை தொடர்பாக அறிக்கையை வழங்குமாறு தெரிவுக்குழு, வரவு செலவு தொடர்பான திணைக்களத்தின் பணிப்பாளருக்கு அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# பளையில் பொலிஸார் மீது துப்பாக்கிச் சூடு விசாரணை அறிக்கை நாடாளுமன்றம் வரும்



பளை பகுதியில் பொலிஸாரின் ரோந்து வாகனத்தின் மீது துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்ட சம்பவம் தொடர்பாக நடத்தப்படும் விசாரணைகள் முடிவுக்கு வந்ததும், அதுபற்றிய விபரங்கள் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் என்று அரசாங்கம் தெரிவித்துள்ளது.

நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் கூட்டு எதிரணியின் உறுப்பினர் பத்ம உதய சாந்த குணசேகர, பளை பொலிஸ் நிலையம் மீது நடத்தப்பட்ட தாக்குதல் தொடர்பாக அரசாங்கம் என்ன நடவடிக்கைகளை எடுத்துள்ளது என்று கேள்வி எழுப்பியிருந்தார். இதற்குப் பதிலளித்த சட்டம் ஒழுங்கு அமைச்சர் சாகல ரத்நாயக்க "மே 19ஆம் திகதி அதிகாலை நடந்த துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் தொடர்பாக விசாரணைகள் நடத்தப்படுகின்றன.

இந்தச் சம்பவம் தொடர்பான விசாரணையில் ஐந்து பொலிஸ் குழுக்களும் இராணுவ குழு ஒன்றும் ஈடுபடுத்தப்பட்டுள்ளன.

பளை பொலிஸ் நிலையம் தாக்கப்படவில்லை. ரோந்து வாகனம் மீதே சுடப்பட்டது. விசாரணைகள் முடிவுக்கு வந்ததும், அதன் கண்டறிவுகள் தொடர்பான விபரங்கள் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்" என்று தெரிவித்தார். (இ-7)

# இராசி பலன்

25.05.2017
(வைகாசி 11, வியாழக்கிழமை)
சூரிய உதயம் காலை 5.52 மணிக்கு
அமாவாசை பின்னிரவு 2.09 மணிவரை
கார்த்திகை பின்னிரவு 1.00 மணிவரை
சுபநேரம் 7.22-8.52 மணிவரை
இராகுகாலம் 1.22-2.52 மணிவரை
கார்த்திகை விரதம், அமாவாசை விரதம்

வளவன்

| | | | |
|---|---|---|---|
| சுக் | புத | சூரி செவ் சந் | |
| கேது | கிரகநிலை<br>சந்திராஷ்டமம்<br>சித்திரை, சுவாதி<br>காலை 8.15 மணிக்கு<br>இட-சந் | | |
| | | | ராகு |
| | சனி | | குரு |

**மீனம்:** பெரிய மனிதர்களின் சந்திப்பால் உள்ளம் மகிழ்வீர்கள், முத்தான வாய்ப்புக்கள் உங்களைத் தேடி வரலாம், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையலாம்.

**மேடம்:** யோசிக்காமல் செய்த காரியங்களில் கூட வெற்றி கிடைக்கும், கொடுத்த வாக்கை காப்பாற்றும் எண்ணம் உருவாகும், கலகலப்பான தகவல்கள் வந்து சேரலாம்.

**இடபம்:** உள்ளொன்று வைத்து புறமொன்று பேசுபவர்களை இனங்கண்டு கொள்வீர்கள், விரதம், வழிபாடுகளில் நம்பிக்கை கூடும், கற்பனை மிகுதியான நாள்.

**மிதுனம்:** அன்பு நண்பர்களின் சந்திப்பு இடம்பெறலாம், எடுத்த செயலை முடிக்க ஒரு முறைக்கு பலமுறை அலைய நேரிடலாம், சுப செலவுகள் கூடும்.

**கும்பம்:** வளர்ச்சிப் பாதைக்கு நண்பர்களின் ஒத்துழைப்புக் கிடைக்கும், நீங்கள் தேடிச் சென்று பார்க்க நினைத்த நபர் உங்களைத் தேடி வரலாம், சுப செலவுகள் கூடும்.

**கடகம்:** மற்றவர்கள் கடுமையாக நினைக்கும் வேலை யொன்றை நீங்கள் எளிதாகச் செய்து முடிப்பீர்கள், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காண்பீர்கள்.

**மகரம்:** எதிர்கால நலனில் அக்கறை காட்டுவீர்கள், போட்டியாக செயற்பட்டவர்கள் மனம் மாறுவர், பிள்ளைகளின் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள்

**சிம்மம்:** குடும்பத்தில் மங்கல ஓசை கேட்பதற்கான வாய்ப்புண்டு, செய்தொழிலில் மேன்மையும் உயர்வும் கிடைக்கும், தூர தேசத்திலிருந்து மகிழ்ச்சி தரும் தகவல்கள் வந்து சேரலாம்.

**தனுசு:** கடன்சுமை குறைந்து கவலைகள் தீரும் நாள், வியாபார விரோதம் விலகும், அரசியல் செல்வாக்கு மேலோங்கும் நாள், குடும்பத்தில் மகிழ்ச்சி கூடும்.

**விருச்சிகம்:** தெய்வீக சிந்தனை மேலோங்கும் நாள், நண்பர்கள் நம்பிக்கைக்குரியவர்களாக நடந்து கொள்வர், எண்ணங்கள் எளிதில் கைகூடும்.

**துலாம்:** எதிர்பாராத வகையில் சில மனஸ்தாபங்கள் ஏற்பட்டு உற்சாகம் குறையலாம், புதிய விடயங்களை யோசித்து ஏற்பது நல்லது, வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள்.

**கன்னி:** அதிகம் செலவாகும் என நினைத்த காரியமொன்று குறைந்த செலவில் முடியலாம், தித்திக்கும் பயணமொன்று இடம்பெறும் வாய்ப்புண்டு.

# வீதியைப் புனரமையுங்கள்

(வரணி)

வரணி. மாசேரி ஊடாகக் குடத்தனை செல்லும் 2 கிலோமீற்றர் நீள வீதியானது பல வருடங்களாக செப்பனிடப்படாது குன்றும் குழியுமாகக் காணப்படுகிறது. வீதி அபிவிருத்தி அதிகார சபைக்குச் சொந்தமான இவ் வீதியானது பலவருடங்களாகச் செப்பனிடப்படாமையால் இவ் வீதியால் பயணிக்கும் விவசாயிகள், மீன் வியாபாரிகள், பொதுமக்கள் எனப் பலரும் அசௌகரியத்திற்கு உள்ளாகின்றனர். தென்மராட்சியையும், வடமராட்சிகிழக்கையும் இணைக்கும் தூரம் குறுகிய வீதியாகவும் காணப்படுகின்றமையால் இந்த வீதியை அதிகளவான மக்கள் பயன்படுத்துகின்றனர். மழை காலத்தில் இந்த வீதிக்கு மேலாக தண்ணீர் பாய்ந்து செல்வதனால் மக்கள் இவ் வீதியைப் பயன்படுத்தாமல் மிகவும் நீண்ட தூரம் பயணித்து கொடிகாமம்- பருத்தித்துறை வீதியின் ஊடாக தென்மராட்சி பிரதேசத்தை அடைந்து தமது தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்கின்றனர்.

எனவே மழைகாலம் தொடங்குவதற்கு முன்பாக இவ் வீதியைப் புனரமைத்து விவசாயிகள், மீன் வியாபாரிகள், பொதுமக்கள் போன்றோரின் சௌகரியமான பயணத்திற்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறு அதிகாரிகள் மற்றும் அரசியல்வாதிகளுக்கு மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (இ-103)

# கரப்பந்தாட்ட சுற்றுப் போட்டியின் இறுதிப் போட்டி இன்று திக்கத்தில்

யா/திக்கம் மத்திய சனசமூக நிலையத்தின் வைர விழாவினை முன்னிட்டு நடத்தப்பட்ட கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இறுதிப் போட்டி இன்று 25ஆம் திகதி வியாழக்கிழமை மாலை 6.30 மணிக்கு திக்கம் இளைஞர் விளையாட்டுக் கழக மைதானத்தில் திக்கம் மத்திய சனசமூக நிலைய உப தலைவர் க.சுதேஸ் தலைமையில் இடம்பெறும். இறுதிப்போட்டியில் ஆவரங்கால் மத்தி வி.க.அணியும் புத்தூர் கலைமதி வி.க. அணியும் மூன்றாம் இடத்திற்கான போட்டியில்ஆவரங்கால் இந்து இளைஞர் வி.க.அணியும் இளவாலை மத்தி வி.க. அணியும் மோதவுள்ளன. இதில் பிரதம விருந்தினராக வடமாகாண உடற் கல்வி பிரதிப் பணிப்பாளர் க.சத்தியபாலன், சிறப்பு விருந்தினர்களாக திக்கம் நலன்புரிச் சங்கத் தலைவர் (கனடா) சி.கணேசமூர்த்தி, பருத்தித்துறை மின் அத்தியட்சகர் ரி.கமலகோபன் ஆகியோர் கலந்து கொள்வர்.(இ-7)






யாழ். கைதடி வீட்டுத்திட்ட சங்க தலைமை காரியாலயத்திற்கு அண்மையில் பிரதி சுகாதார அமைச்சர் பைசல் ஹாசிம் வந்த போது சங்கத் தலைவர் புலவர் செ.து.தட்சணாமூர்த்தி பொன்னாடை போர்த்தி வரவேற்பதையும், அருகில் செயலாளர் எம். நடேசலிங்கம், நிர்வாக உறுப்பினர் விக்னேஸ்வரலிங்கம் ஆகியோர் நிற்பதையும் படத்தில் காணலாம்.

# புதிய வகுப்பறைத்தொகுதியும் கேட்போர்கூடத் திறப்பு விழாவும்

(யாழ்ப்பாணம்)

யாழ். புற்றளை மகா வித்தியாலய புதிய வகுப்பறைத் தொகுதி, கேட்போர்கூடத் திறப்பு விழா என்பன நாளை மறுதினம் 27ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு பாடசாலை அதிபர் ஆறுமுகம் சிவநாதன் தலைமையில் இடம்பெறும். இந் நிகழ்விற்கு பிரதம விருந்தினராக வடமாகாண கல்வி பண்பாட்ட லுவல்கள் மற்றும் இளைஞர் விவகார அமைச்சர் தம்பிராசா குருகுலராசா, சிறப்பு விருந்தினர்களாக வடமாகாண சபை உறுப்பினர்களான ச.சுகிர்தன், வே.சிவயோகன். க.தர்மலிங்கம், எம்.கே.சிவாஜிலிங்கம், சி.அகிலதாஸ் மற்றும் வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் செயலாளர் இ.ரவீந்திரன், வடமாகாண கல்விப் பணிப்பாளர் செ.உதயகுமார், வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சி.புஸ்பலிங்கம் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (இ-3)

# துவிச்சக்கரவண்டி அன்பளிப்பு



வட்டுக்கோட்டை இந்து வாலிபர் சங்கத்தின் ஊடாக இறுதி யுத்தத்தின் போது இரு கைகளையும் மணிக்கட்டுடன் இழந்துள்ளதுடன் ஒரு கண்ணும் முற்றாக பார்வையிழந்த புன்னை நீராவியடியைச் சேர்ந்த சந்திரன் அஜித்குமாரின் பிள்ளைகளின் கற்றல் செயற்பாட்டை ஊக்குவிக்கும் முகமாக துவிச்சக்கரவண்டி ஒன்று அன்பளிப்பாக வழங்கப்பட்டது. (இ-3)

# உயர்தர மாணவர்களுக்கான தமிழ்ப்பாட செயலமர்வு

யாழ். பொதுசன நூலக வாசகர் வட்டம் நடத்தும் க. பொ.த். உயர்தர -2017 மாணவர்களுக்கான தமிழ்ப்பாட ( நவீன இலக்கியம்) செயலமர்வு நாளை மறுதினம் 27 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9.15 மணிக்கு பொதுசன நூலகக் கேட்போர் கூடத்தில் இடம்பெறும். (இ-3)

# சாயி சமர்ப்பணம் தொடர்-4

யாழ்ப்பாணம் சத்திய சாயி சேவா நிறுவனத்தின் பொன் விழா ஆண்டையொட்டி இடம்பெறும் சாயி சமர்ப்பணம் தொடர்- 4 நாளை மறுதினம் 27 ஆம் திகதி சனிக்கிழமை மாலை 5 மணி முதல் 6 மணி வரை யாழ்ப்பாணம் இராமநாதன் வீதி, திருநெல்வேலியில் அமைந்துள்ள யாழ்ப்பாணம் சத்திய சாயி சேவா நிலையத்தல் இடம்பெறும் . இந் நிகழ்வில் இலங்கை சத்திய சாயி சர்வதேச நிறுவனத்தின் வட பிராந்தியத் தலைவர் ஸ்ரீ.கே.வி.சிவநேசனின் (ஓய்வுபெற்ற அத்தியட்சகர் சமூக சேவைத் திணைக்களம்)

சாயியுடனான அனுபவப் பகிர்வு இடம்பெறும். (இ-3)

# மஹாகும்பாபிஷேகம்

யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணை காட்டுத்துறை ஸ்ரீ அம்பலவாண விக்னேஸ்வரப் பிள்ளையார் ஆலய புனராவர்த்தன நவகுண்ட பட்ஷ மஹா கும்பாபிஷேகம் எதிர்வரும் 29 ஆம் திகதி திங்கட்கிழமை முற்பகல் 9.30 மணிமுதல் இடம்பெறவுள்ளது. இதனை முன்னிட்டு 28.05.2017 ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணி முதல் மாலை 5 மணி வரை எண்ணெய்க்காப்பு சாத்துதல் இடம்பெறவுள்ளது. (இ-3)

◆◆◆◆◆◆◆◆◆◆◆

வண்ணை-கில்னர் ஒழுங்கை ஸ்ரீ மஹாமாரி அம்மன் ஆலய புனராவர்த்தன பிரதிஷ்டா மஹாகும்பாபிஷேகம் எதிர்வரும் 29 ஆம் திகதி திங்கட்கிழமை காலை6மணிமுதல் இடம்பெறவுள்ளது. கும்பாபிஷேகத்தை முன்னிட்டு 28.05. 2017 ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணி முதல் மாலை 4 மணிவரை பால்காப்புச் சாத்துதல் இடம்பெறும். (இ-3)

# வைகாசிப் பொங்கல் நாளை

யாழ். பிரதேச கலாசார அதிகாரசபையன் வைகாசிப் பொங்கல் (பத்தினிப் பூசை) நாளை 26 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 8 மணிக்கு யாழ். கேட்டை மீனாட்சி அம்மன் கோவிலில் இடம்பெறும். (இ-7)

# அலங்கார உற்சவம்

யாழ்ப்பாணம்- நல்லூர் பண்டாரக்குளம் ஸ்ரீகௌரி அம்பாள் ஆலய அலங்கார உற்சவம் எதிர்வரும் 30 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை நண்பகல் 12 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது. 7.6.2017 புதன்கிழமை காலை 8 மணிக்கு தேர்த் திருவிழாவும் 08.06.2017 காலை 9 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறவுள்ளது. (இ-3)

# விளையாட்டுப் போட்டியும் பரிசளிப்பு விழாவும் இன்று

(யாழ்ப்பாணம்)

மதி ஒளி சனசமூக நிலையத்தின் 45 ஆவது ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு மதிஒளி விளையாட்டுக்கழகம் நடத்தும் கிராமமட்ட விளையாட்டுப் போட்டியும் பரிசளிப்பு விழாவும் இன்று வியாழக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு வரணி, கரம்பைக் குறிஞ்சி மதிஒளி மைதானத்தில் சனசமூக நிலையத் தலைவர் இ.சுதாகர் தலைமையில் இடம்பெறும்.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண மீன்பிடி போக்குவரத்து மற்றும் வர்த்தக வாணிப அமைச்சர் பா. டெனீஸ்வரன், சிறப்பு விருந்தினர்களாக வடமாகாண சபை உறுப்பினர்களான அ.பரஞ்சோதி, வே.சிவயோகன், க.தர்மலிங்கம் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.(இ-103-3)



யாழ் . கோண்டாவில் இராமகிருஷ்ண மகா வித்தியாசாலையின் மாணவர் பாராளுமன்ற கன்னியமர்வு கடந்த 23 ஆம் திகதி நடைபெற்ற போது...


# பொம்மலாட்டம் இறுவெட்டுகள் வெளியீடு

(யாழ்ப்பாணம்)

யாழ். மட்டுவில் அளவெட்டி நாடகக் கலைஞர், கலைச் சாகரம் இளைப்பாறிய அதிபர் சி.நாகராஜாவின் பொம்மலாட்டம் இறுவெட்டுக்கள் வெளியீடு நாளை மறுதினம் 27 ஆம் திகதி சனிக்கிழமை யா/மட்டுவில் தெற்கு சரஸ்வதி வித்தியாலயத்தில் பிற்பகல் 3.30 மணிக்கு இடம்பெறும் என வெளியீட்டுக்குழு சார்பில் கலாபூஷணம் கெ.எஸ். சிவஞானராஜா அறிவித்துள்ளார். (இ-7)







இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ்.மாவட்ட கிளையின் வருடாந்த பொதுக்கூட்டமும் ஆளுநர் தெரிவும் யாழ்.வை.எம்.சி.ஏ. மண்டபத்தில் அண்மையில் நடைபெற்ற போது யாழ்.மாவட்ட கிளையின் தலைவர் கு.பாலகிருஷ்ணன் தலைமையுரை நிகழ்த்துவதையும் ஆளுநர் சபைக்கு தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்களும் கூட்டத்தில் பங்குபற்றிய ஏனைய உறுப்பினர்களையும் படங்களில் காணலாம் (படங்கள்:- இ.மயில்வாகனம்)

50

# தமிழரின் தலைவிதி எப்படியாகும்?



*தீக்குளிப்பதற்கு முன்னதாக முத்துக்குமார் எழுதி வைத்த மரணத்தின் வாக்குமூலம்.*

நேற்றைய தொடர்ச்சி...

பட்டினிப் போராட்டத்தின் மூலம் களம் இறங்கியிருக்கும் சட்டக்கல்லூரி மாணவர்களே! உங்கள் போராட்டம் வெற்றிபெற சக தமிழனாக நின்று வாழ்த்துகிறேன். உங்களோடு களம் இறங்க முடியாமைக்கும் வருந்துகிறேன். ஈழத் தமிழர் பிரச்சினை என்றில்லை, காவிரியில் தண்ணீர் விடச் சொல்லும் போராட்டமென்றாலும் சரி, தமிழ்நாட்டிற்கு ஆதவரான போராட்டம் எதுவாக இருந்தாலும் சரி, முதலில் களம் காண்பவர்கள் நீங்கள், வழக்கறிஞர்களும்தான். இந்த முறையும் நான்கு மாதங்களுக்கு முன்பாகவே களத்தில் இறங்கியவர்கள் இந்த இரண்டு தரப்பும்தான். உங்களுடைய இந்த உணர்வை மழுங்கடிக்கவே திட்டமிட்டு இந்திய உளவுத்துறை சாதிய உணர்வைத் தூண்டிவிட்டு, அம்பேத்கர் சட்டக்கல்லூரி அனர்த்தத்திற்கு வழி வகுத்திருக்கலாம் என்பது என் சந்தேகம். உலகம் முழுக்க மக்களுக்கான புரட்சிகரப் போராட்டங்களில் முன் கையெடுப்பவர்களாக இருந்தது மாணவர்கள் என்கிற சாதிதான். அதேபோல், தமிழ்நாட்டிலும் உங்களுக்கு முந்திய தலைமுறையொன்று இதுபோன்ற ஒரு சூழலில், இதுபோல் குடியரசு தினத்திற்கு முன்பு களம் கண்டுதான் காங்கிரஸ் உள்ளிட்ட தேசியக்கட்சிகளைத்தமிழ் மண்ணிலிருந்து விரட்டியடித்தது.

ஆக, வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த ஒரு தருணம் உங்கள் கைகளுக்கு மறுபடியும் வந்து சேர்ந்திருக்கிறது. பொதுவாக உலக சரித்திரத்தில் இப்படியெல்லாம் நடப்பதில்லை. கடந்த முறை நடந்ததுபோல், உங்கள் போராட்டத்தின் பலன்களை சுயநலமிகள் திருடிக்கொள்ள விட்டு விடாதீர்கள். போராட்டத்தின் பலன்களை அபகரித்து ஆட்சிக்கு வந்த தி.மு.க. முதலில் செய்த விடயம் மாணவர்கள் அரசியல் ஈடுபாடு கொள்ளக்கூடாது என சட்டம் போட்டதுதான். ஆட்சிக்கு வந்த அது, தமிழின உணர்வுகளை மழுங்கடித்து, ஒட்டுமொத்த தமிழினத்தையும் மகஜர் கொடுக்கும் சாதியாக மாற்றியது. அந்த மரபை அடித்து உடையுங்கள். மனு கொடுக்கச் சொல்பவன் எவனாக இருந்தாலும், அவனை நம்பாதீர்கள். நமக்குள்ளிருக்கும் சாதி, மதம் போன்ற வேறுபாடுகளை எரித்துக்கொள்ள இதுதான் தருணம். உண்ணாவிரதத்தையெல்லாம் தூக்கியெறிந்து விட்டு களம் காணுங்கள். உண்மையில், இலங்கையில் இந்திய இராணுவ நடவடிக்கை என்பது தமிழர்களுக்கெதிரானது மட்டுமல்ல. ஒட்டுமொத்த இந்தியர்களுக்குமே எதிரானது. சிங்களச் சிப்பாய்களிடம் கற்றுக்கொள்கிற பாலியல் நுணுக்கங்களைத்தானே அவர்கள் அசாமில் அப்பாவிப் பெண்களிடம் பரிசோதித்துப் பார்த்தார்கள்! விடுதலைப் புலிகளை ஒடுக்குவதற்கான சிங்கள வன்முறை நுணுக்கங்களைக் கற்றுக் கொண்டு வடகிழக்கு மாநிலப் போராளிகளிடம் பயன்படுத்திக் கூர் பார்த்தர்ர்கள்! போதாதற்கு, ஹைட்டியில் சமாதானப் பணிக்காக அனுப்பப்பட்ட ஐ.நாவின் இராணுவத்திலிருந்து இந்திய மற்றும் இலங்கைஇராணுவம்அவரவர்களு

## ஈழத் தமிழர்களுக்கான முத்துக்குமாரின் வாக்குமூலம்

டைய பாலியல் நடவடிக்கைகளுக்காக அடித்துத் துரத்தப்பட்டிருப்பதிலிருந்து என்ன தெரிகிறது! இந்தக் கூட்டணி கொள்கைக் கூட்டணியல்ல, பாலியல் கூட்டணி என்றல்லவா!, ஆக இந்திய - இலங்கை இராணுவக் கூட்டு என்பது இந்தியர்களின் அடிப்படை மனித உரிமைகளுக்கும் கூட எதிரானதாக இருப்பதால், அகில இந்திய அளவில் மாணவர்கள், ஜனநாயக அமைப்புகளையும் உங்கள் பின்னால் திரட்டுங்கள்.

இதையெல்லாம் மக்களே செய்ய முடியும். ஆனால், அவர்கள் சரியான தலைமை இல்லாமல் இருக்கிறார்கள். உங்கள் மத்தியிலிருந்து தலைவர்களை உருவாக்குகள். உங்கள் போராட்டத்தை சட்டக்கல்லூரி மாணவர்கள் என்ற இடத்திலிருந்து அனைத்து மாணவர்கள் என்று மாற்றுங்கள். உங்களிடமிருக்கும் வேகமும், மக்களிடமிருக்கும் கோபமும் இணைந்து தமிழக வரலாற்றை அடியோடு மாற்றட்டும். ஆள்பலம், பணபலம், அதிகார வெற்றியை உடைத்து எறியுங்கள். உங்களால் மட்டுமே இது முடியும். 'நாங்கள் தமிழ் மாணவர்கள், தமிழ்நாட்டின் உயிரானவர்கள், இங்கு தமிழினம்அமைதிகொண்டிருந்தால்ஏடுகள் தூக்கிப்" படிப்போம். எங்கள் தமிழர்க்கின்னல் விளைந்தால் எரிமலையாகி வெடிப்போம்' என்ற காசி ஆனந்தனின் பாடலை ஓர் அறிவாயுதமாக ஏந்துங்கள்.. என் உடலை காவல்துறை அடக்கம் செய்துவிட முயலும். விடாதீர்கள். என் பிணத்தைக் கைப்பற்றி, அதை புதைக்காமல் ஒரு துருப்புச் சீட்டாக வைத்திருந்து போராட்டத்தைக் கூர்மைப்படுத்துங்கள். எனக்கு சிகிச்சையோ, போஸ்ட் மார்டமோ செய்யப் போகும் தமிழ்நாடு மருத்துவக் கல்லூரி மாணவர்களே.. உங்கள் கையால் அறுபட நான் புண்ணியம் செய்திருக்க வேண்டும். காரணம், அகில இந்திய அளவில், மருத்துவக் கல்வியில் இட ஒதுக்கீட்டுக்கு எதிராக உயர்சாதி மாணவர்கள் போராடிக்கொண்டிருக்க, தன்னந்தனியாக நின்று, மருத்துவக் கல்வியில் இடஒதுக்கீட்டுக்கு ஆதரவாகப் போராடியவர்களல்லவா நீங்கள்? எனக்கு செய்வதெல்லாம் இருக்கட்டும். நம் சகோதரர்களான ஈழத்தமிழர்களுக்கு உங்கள் பங்குக்கு என்ன செய்யப் போகிறீர்கள்?

தமிழீழம் என்பது தமீழத்தின் தேவை மட்டுமே அல்ல, அது தமிழகத்தின் தேவையும் கூட. காரணம், இராமேஸ்வரம் மீனவர்கள். உலகில் ஆடு, மாடுகளைப் பாதுகாப்பதற்குக் கூட சட்டமும், அமைப்புகளும் இருக்கின்றன. இராமேஸ்வரம் தமிழனும், ஈழத்தமிழனும் மாட்டைவிட, ஆட்டைவிடக் கேவலமானவர்கள்? எல்லை தாண்டி போகும் மீனவர்கள், புலிகள் என்ற சந்தேகத்தின் பேரில் தாக்கப்பட்டு வருவதாக இந்திய மீடியா திட்டமிட்டு பிரசாரம் செய்து வருகிறது. இவர்களெல்லாம் செய்தித்தாளே படிப்பதில்லையா? சென்னையின் கடற்கரைகளில் அடிக்கடி தாய்வான் நாட்டை சேர்ந்த மீனவர்கள் வழிதெரியாமல் வந்தவர்கள் என்று கைது செய்யப்படுகிறார்கள். பல ஆயிரக்கணக்கான கிலோமீற்றர்கள் தூரத்திலிருக்கும் தாய்வான் மீனவன் வழிதவற முடியுமென்றால், வெறும் பன்னிரெண்டு மைல் தூரத்திற்குள் இராமேஸ்வரம் தமிழன் வழிதவறுவது நம்புவது மாதிரியில்லையாமா?

தமிழ்நாட்டில் வாழ்ந்து வரும் வெளிமாநிலங்களைச் சேர்ந்த சகோதர்களே!

உங்கள் சொந்த மாநிலத்தில் கூட இல்லாத நிம்மதியோடும், பாதுகாப்போடும் வாழக்கூடிய மாநிலம் தமிழ்நாடு தான் என்பது உங்களுக்கு அனுபவத்தால் தெரிந்திருக்கும். நாங்கள் இன்று பெரும் இக்கட்டை எதிர்நோக்கியிருக்கிறோம். ஈழத்திலிருந்துக்கும் எங்கள் சகோதரர்கள் இந்தியர் என்னும், நம் பெயரைப் பயன்படுத்தித்தான் நம் அரசால் கொலை செய்யப்படுகிறார்கள். இந்தப் போராட்டத்தில் நாங்கள் தனித்து விடப்படுவதை இந்திய அரசு விரும்புகிறது. அப்படி ஆக்கக்கூடாதென நாங்கள் விரும்புகிறோம். ஆகவே, போராடிக் கொண்டிருக்கும் எங்கள் சகோதரர்களுக்கு உங்கள் ஆதரவும் உள்ளதென மத்திய அரசுக்குத் தெரியப்படுத்துங்கள். அரசுகளில் அங்கம் வகிக்கக்கூடிய உங்கள் தேசிய இனங்களைச் சேர்ந்தவர்களை எம் கரத்தை பலப்படுத்துவதோடு, எதிர்காலத்தில், ஒரு நவநிர்மாண் சேனாவோ, ஸ்ரீராம் சேனாவோ தமிழ்நாட்டில் உருவாகவிருக்கும் ஆபத்தைத் தவிர்க்கும் என்பது என் கருத்து.

தமிழ்நாடு காவல்துறையிலிருக்கும் இளைஞர்களே!

உங்கள் மீது எனக்கு இருக்கும் மதிப்பு கொஞ்சம் நஞ்சமல்ல. காரணம், தமிழுக்காக மற்றவர்கள் என்ன செய்தார்களோ, அலுவலர்களை ஐயா என அழைப்பது போன்ற நடைமுறை ரீதியில் தமிழை வாழ வைத்துக் கொண்டிருப்பவர்கள் நீங்கள்தான். மக்களுக்காகப் பாடுபட வேண்டும், சமூக விரோதிகளை ஒழித்துக்கட்ட வேண்டும் என்பது போன்ற உன்னத நோக்கங்களுக்காகத்தான் நீங்கள் காவல் துறையில் இணைந்திருப்பீர்கள் என்று நம்புகிறேன்.

(வளரும்)

-புருசோத்தமன்-

# 27 ஆயிரத்து 230 ஏக்கர் நிலப்பரப்பு படையினர் வசம் 33 ஆயிரத்து 145 ஏக்கர் தொடர்பில் தகவல் மறைப்பு

(மல்லாவி)

வட பகுதியில் உள்ள ஐந்து மாவட்டங்களிலும் இன்னமும் 65 ஆயிரம் ஏக்கர் நிலப்பரப்பில் படையினர் நிலை கொண்டுள்ள நிலையில், அரச மற்றும் தனியாருக்குச் சொந்தமான 27 ஆயிரத்து 230 ஏக்கர் நிலப்பரப்பில் மட்டுமே படையினர் நிலை கொண்டுள்ளதாக "தேசிய நல்லிணக்க செயலணியின் அலுவலக தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது. படையினர் நிலை கொண்டுள்ள வனவளத் திணைக்களத்திற்கும் வனவள, ஜீவராசிகள் திணைக்களத்திற்கும் சொந்தமான 33 ஆயிரத்து 145 ஏக்கர் காணி தொடர்பில் எதுவிதமான தகவல்களையும் வெளியிடாது மறைத்துள்ளதாக முல்லைத்தீவு மாவட்டத்தை பிரநிதித்துவப்படுத்தும் அரசியல் தலைவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

வடக்கு மாகாணத்தில் முப்படையினரின் வசம் தற்சமயம் 27 ஆயிரத்து 230 ஏக்கர் தனியார் மற்றும் அரச காணிகள் உள்ளதாக தேசிய நல்லிணக்க செயலணியின் செயலகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந் நிலையில்,வடக்கின் 5 மாவட்டங்களிலும் காணப்படுகின்ற படையினர் இரண்டு வகையான காணிகளில்நிலை கொண்டுள்ளனர்.

இதனை வகைப்படுத்தும் போது, தனியாருக்குச் சொந்தமான காணிகள் மற்றையது, அரச காணிகள் இதனை பிரதேச செயலாளரின் ஆளுகையின் கீழ் உள்ளவை.

வனவளத் திணைக்களத்தின் ஆளுகைக்குள் உள்ளவை, வன ஜீவராசிகள் திணைக்களத்தின் ஆளுகைக்குள் உள்ளவை.

ஏனைய அரச திணைக்களங்களின் ஆளுகையின் கீழ் உள்ளவை என ஐந்து வகையாக வகைப்படுத்தலாம். இவ்வாறான நிலையில், சமாதான நல்லிணக்க செயலணியின் செயலகத் தகவலின் போது, அரச திணைக்களங்களுக்குச் சொந்தமானவை என்று குறிப்பிடப்பட்டதில் வனவளத் திணைக்களத்தின் ஆளுகைக்குள் உள்ளவையும் மற்றும் வன விலங்குகள் ஜீவராசிகள் திணைக்களத்தின் ஆளுகைக்குட்பட்ட நிலங்களில் படையினர் நிலை கொண்டுள்ள விபரங்களை வெளியிடாது மறைத்துள்ளதாக அரசியல் பிரமுகர்கள் தெரிவித்துள்ளார்கள்.

இதில் குறிப்பாக, முல்லைத்தீவு மாவட்டத்தில் முப்படையினர் வசமுள்ள தனியார் காணிகள் ஆயிரத்து 211.29 ஏக்கரும் அரச காணிகள் 7 ஆயிரத்து 937.18 ஏக்கருமாக மொத்தம் 9 ஆயிரத்து 148.47 ஏக்கர் நிலங்கள் மட்டுமே படையினர் வசம் உள்ளன என்று தவறான தகவலே காட்டப்பட்டுள்ளது.

வடக்கு மாகாணத்தில் அதிக நிலம் படையினரால் கையகப்படுத்தப்பட்ட மாவட்டமாக விளங்குவது முல்லைத்தீவு மாவட்டமாகும்.

இங்கு வனவளத் திணைக்களம் , வனவள ஜீவராசிகள் திணைக்களம் ஆகியவற்றுக்குச் சொந்தமான ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்களின் அளவு பட்டியலிடப்படவில்லை. முல்லைத்தீவு மாவட் டத்தில் அம்பகாமம் பகுதியில் 8ஆயிரத்து 500 ஏக்கர் வனப் பகுதியும், கரிப்பட்டமுறிப்பு முதல் இரணைமடுக்குளம் வரையிலான 3 ஆயிரத்து 500 ஏக்கர் வனப்பகுதியும் கேப்பாப்பிலவில் 2 ஆயிரத்து 200 ஏக்கரும் விமானப்படையினர் வசம் உள்ளதோடு ஏ-9 வீதிக்கு அண்மையாக முறிகண்டிப்பகுதியில் ஆயிரத்து 750 ஏக்கரும் கொக்கிளாயில் 520 ஏக்கரும் கோட்டைகட்டிய குளம், அம்பலப்பெருமாள்குளம், அமைதிபுரம் ஆகியவற்றில் தலா 50 ஏக்கரும், தேறாங்கண்டலில் 120 ஏக்கருமாக மொத்தம் இராணுவத்தினர் வசமும் என மொத்தம் 16 ஆயிரத்து 720 ஏக்கர் வனவளத் திணைக்களத்திற்குச் சொந்தமான காணிகள் படையினர் வசமுள்ளன. ஒட்டுமொத்தமாக முல்லைத்தீவு மாவட்டத்தில் இராணுவத்திடம் அனைத்து வகையான காணிகளுமாக முல்லைத்தீவு மாவட்டத்தில் இராணுவத்தின் கட்டுப்பாட்டில் 25 ஆயிரத்து 868.47 ஏக்கர் காணிக்கு மேல் உள்ளதாக அவர்கள் இது தொடர்பில் மேலும் தெரிவித்துள்ளார்கள். (2-5-15)




# குடிநீருக்கு தட்டுப்பாடு; பூநகரி மக்கள் பெரும் அவதி

கிளிநொச்சி - பூநகரி பிரதேசத்தில் பல்வேறு பகுதிகளில் தொடர்ந்தும் குடிநீருக்கான தட்டுப்பாடு நிலவி வருவதாக பாதிக்கப்பட்ட பொதுமக்களால் தெரிவிக்கப்படுகின்றது.

குறித்த பகுதியில் வாழும் மக்கள் தங்களுக்கான குடிநீரைப் பெற்றுக் கொள்வதில் அன்றாடம் பல்வேறு சிரமங்களை எதிர்கொண்டு வருவதாக குறிப்பிடப்படுகின்றது.

இந்த நிலையில், பூநகரி பிரதேசத்தில் உள்ள 19 கிராம அலுவலர் பிரிவுகளில் மீள்குடியேறியுள்ள 7ஆயிரத்து 335 குடும்பங்களில் 10 கிராம அலுவலர் பிரிவுகளில் வாழும் சுமார் 3ஆயிரத்து 112 குடும்பங்களுக்கு வருடம் முழுவதும் குடிநீர் விநியோகிக்க வேண்டிய நிலைமை காணப்படுகின்றது.

அத்துடன், ஒன்பது பாடசாலைகளுக்கும் குடிநீர் தட்டுப்பாடு நிலவி வருகின்றதுடன், மறவன்குறிச்சி, கொல்லக்குறிச்சி, இராமலிங்கம் வீதி, பரமன்கிராய், கறுக்காய் தீவு, செட்டியகுறிச்சி, ஞானிமடம், சித்தங்கேணி, நல்லூர் உள்ளிட்ட பகுதிகளில் தற்போது குடிநீர் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாக கூறப்படுகின்றது. மேலும், இந்த பகுதிகளில் போதிய குடிநீர் வசதிகள் கிடைப்பதில்லை எனவும் இதனால் தமக்கான குடிநீர் பெறுவதில் சிரமங்களை எதிர்கொள்வதாக மக்கள் குறிப்பிட்டுள்ளனர்.(2-5)

# மணலைக் கடத்திய குற்றச்சாட்டில் இரு சந்தேக நபர்களுக்கு விளக்கமறியல்

போலி அனுமதிப்பத்திரத்தை தயாரித்து மணலைக் கடத்திய இரு சந்தேகநபர்களையும் டிப்பருடன் மணலையும் கைப்பற்றிய பூநகரி பொலிஸார் கடந்த 16ஆம் திகதி கிளிநொச்சி நீதவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தினர்.

இரு சந்தேக நபர்களையும் இன்று வியாழக்கிழமை வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டது.

ஒரேவாரத்தில் பூநகரிப் பகுதியில் இருந்து யாழ்ப்பாணத்துக்கு கடத்தப்படவிருந்த நிலையில் மூன்றாவது டிப்பர் வாகனமும் பூநகரி பொலிஸாரினால் கைப்பற்றப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இது சம்பந்தமாக பொலிஸாரின் விசாரணை தொடர்வதாக பூநகரி பொலிஸ் நிலையத் தகவல் தெரிவிக்கின்றது. (2-5-84)

# முகமாலையில் காவலரண்கள், மண் அணைகள் அருகில் ஆபத்தான வெடிபொருட்கள் புதைப்பு

## டாஸ் நிறுவன பிரதிநிதி தெரிவிப்பு



கிளிநொச்சி - முகமாலைப் பகுதியில் வெடிபொருட்களை அகற்றுவதில் பாரிய சவால்களை எதிர்கொள்வதாக கண்ணிவெடி அகற்றும் நிறுவனத்தினர் தெரிவித்துள்ளனர்.

யுத்தத்தின் பின்னர் இதுவரை மீள்குடியமர்விற்கு அனுமதிக்கப்படாத பகுதியாகவும் அதிகளவு வெடிபொருள், ஆபத்தான பகுதியாக முகமாலை காணப்படுவதாக கூறப்படுகின்றது.

கடந்த கால யுத்தத்தின் போது அதிகளவான வெடிபொருட்கள் புதைக்கப்பட்டதாகவும், இரு தரப்புக்களும் தொடர்ச்சியாக யுத்தத்தில் ஈடுபட்டதாகவும் காணப்படும் இந்த பகுதியில் வகைதொகையின்றி வெடிபொருட்கள் புதைக்கப்பட்டுள்ளதுடன் நீண்ட காலம் காத்திருந்து உயிர்களை காவு கொள்ளும் ஆபத்தான பகுதியாகவும் காணப்படுகின்றது.

அத்துடன், 2000ஆம் ஆண்டு காலப் பகுதியிலும் அதன் பின்னர் கடந்த 2006 ஆம் ஆண்டு முதல் 2008 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் வரை யுத்தத்தில் ஈடுபட்ட இரு தரப்புக்களும் பரஸ்பரம் மோதிக் கொண்ட பகுதியாக காணப்படும் கிளிநொச்சி, கிளாலி முதல் யாழ். வடமராட்சி கிழக்கு, நாகர் கோவில் வரைக்குமான ஏறத்தாள ஏழு கிலோ மீற்றர் நீளமான பகுதிகளில் அதிகளவான நிலக்கண்ணி வெடிகளும் ஆபத்தான வெடிபொருட்களும் புதைக்கப்பட்டதாக தெரியவந்துள்ளது.

இந்நிலையில், தினமும் இரு தரப்புக்களும் மோதிக் கொள்ளும் இந்த பகுதிகளில் கடந்த ஏழு ஆண்டுகளுக்கு மேலாக வெடிபொருட்கள் அகற்றும் பணிகள் முன்னெடுத்து வருகின்றன.

இதில் குறிப்பிட்ட சில பகுதிகளில் மீள்குடியேற்றத்திற்கு அனுமதிக்கப்பட்ட போதும் பல இடங்கள் இன்றும் ஆபத்தானதாகவே காணப்படுகின்றது.

இது தொடர்பில் டாஸ் நிறுவனத்தின் முக்கிய பிரதிநிதி ஒருவர் கருத்துத் தெரிக்கையில்,

குறித்த பகுதியில் அதிகளவான நிலக்கண்ணி வெடிகள், வாகன கண்ணி வெடிகள் என்பன மிகவும் ஆபத்தான நிலையில் புதைக்கப்பட்டுள்ளன.

வெடிக்காத நிலையில் காணப்படுகின்ற வெடிபொருட்களும் அதிகளவில் உள்ளன. அத்துடன் இராணுவ மண் அணைகள், கைவிடப்பட்ட காவலரண்கள் ஆகியவற்றின் அருகில் மிக ஆபத்தான வகையில் இந்த வெடிபொருட்கள் புதைக்கப்பட்டுள்ளன.

இதனை அகற்றுவதில் பாரிய சவால்கள் காணப்படுகின்றதாகவும் இவ்வாறான பகுதிகளுக்குள் பொதுமக்கள் பலர் நுழைந்து உயிரிழப்புக்கள் மற்றும் காயங்களுக்கு உள்ளாகியுள்ளனர் எனவும் டாஸ் நிறுவனத்தின் முக்கிய பிரதிநிதி ஒருவர் கூறியுள்ளார். (2-5)

# காலநிலை மாற்றங்களினால் விவசாய நடவடிக்கை பாதிப்பு

## முழங்காவில் விவசாயிகள் கவலை

(மல்லாவி )

கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள பூநகரி பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட முழங்காவில் பகுதியில் நிலவும் கால நிலை மாற்றங்களால் தாங்கள் பாதிப்புக்களை எதிர்நோக்கி வருவதாக இப் பகுதி விவசாயிகள் கவலை வெளியிட்டுள்ளனர்.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

கிளிநொச்சி மாவட்டத்தின் பூநகரி பிரதேச செயலாளர் பிரிவின் கீழ் அதிக தோட்ட நிலப்பரப்பைக் கொண்டுள்ள பிரதேசமாக முழங்காவில் பகுதி காணப்படுகின்றது.

இங்கு, கடந்த மாதங்களில் கடுமையான வரட்சியை எதிர்கொண்டிருந்தோம். தற்போது அதிகரித்துள்ள காற்று விவசாய நடவடிக்கைகளை பாதிப்படையச் செய்கின்றது.

குறிப்பாக முழங்காவில் பகுதியில் அதிகளவில் வாழை மற்றும் பப்பாசி பயிரிடப்பட்டுள்ளது. இந்த இரண்டு பயிர்களுமே தற்போது வீசி வரும் காற்றினால் பாதிப்படைகின்றது.

இதன் காரணமாக தற்போது இந்த இரண்டு பயிர்களின் உற்பத்திப் பொருட்களும் சந்தையில் விலை வீழ்ச்சியைக் கண்டுள்ளது.

கடந்த மாதம் ஒரு கிலோ பப்பாசிப் பழம் 30 ரூபாவிற்கும் வாழைப்பழங்கள் கிலோ 35 முதல் 50 ரூபா விற்கும் இப்பகுதிகளுக்கு வருகை தரும் வியாபாரிகளால் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன.

இந் நிலையில்,தற்போது முழங்காவில் பகுதிகளில் பப்பாசிப்பழம் கிலோ 15 ரூபா விற்கும் கதலி , இதரை இன வாழைப்பழங்களும் 15 ரூபா விற்கே கொள்வனவு செய்யப்படுகின்றது. இதனால் உற்பத்திச் செலவைக் கூட பெற முடியாது விவசாயிகளாகிய நாம் நட்டமடைகின்றோம்.

இவ்வாறு ஒருபுறம் விலை வீழ்ச்சி அடைந்துள்ள நிலையில் மறுபுறம் இயற்கையின் சீற்றத்தினால் இவை அழிவடையும் நிலைமையும் காணப்படுகின்றன.

எனவே, இத்துறை சார்ந்த அதிகாரிகள், தற்போதைய நிலைமையைக் கருத்தில் கொண்டு இழப்பீட்டை பெற்றுக் கொள்ள நடவடிக்கை மேற் கொண்டு உதவ வேண்டும் என கோரிக்கை ஒன்றை முன்வைத்துள்ளனர். (2-5-15)

கலை கலாசார பேரவையின்

# பொதுக் கூட்டமும் நிர்வாகிகள் தெரிவும்

பூநகரி பிரதேச சபை கலாசார பேரவையின் பொதுக் கூட்டம் நாளை 26 ஆம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணியளவில் பூநகரி பிரதேச செயலர் கிருஸ்ணேந்திரன் தலைமையில் பூநகரி பிரதேச செயலக மகாநாட்டு மண்ட பத்தில் நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இக் கூட்டத்தில் அங்கத்தவர்கள் அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்கப்பட்டது.

ஆர்வமுள்ள கலைஞர்கள், படைப்பாளிகள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

அன்றைய தினம் 2017 அபிவிருத்திச் செயற்பாடுகள் பற்றி ஆராயப்படுவதுடன் இவ்வாண்டுக்கான கலை கலாசார பேரவையின் நிர்வாகிகள் தெரிவும் இடம் பெறும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-5-84)

# கருத்தரங்கு

ஐரோப்பிய ஒன்றியத்தின் நிதிஅனுசரணையில் வட மாகாண ஊடகவியலாளருக்காக நடத்தும் தகவல் அறியும் சட்டம் மற்றும் ஊடக சுதந்திரம் சம்பந்தமான விழிப்புணர்வுக் கருத்தரங்கு எதிர்வரும் 27,28 ஆகிய இருதினங்களில் இடம் பெறவுள்ளது.

இக் கருத்தரங்கு கிளிநொச்சியில் உள்ள பிறன்ஸ் இன் விருந்தினர் விடுதியில் காலை 9.30 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறவுள்ளது. இக் கருத்தரங்கிற்கான ஒழுங்கை அக்ரெட், சொண்ட், இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் ஆகிய நிறுவனங்கள் இணைந்து நடத்தவுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். (2-5-91)

# தாழ்வுபாடு மீனவர்களின் கரைவலைப்பாட்டில் கடற்படையின் அத்துமீறி முகாம் அமைக்கும் பணி



(பனிக்கன்குளம்)

மன்னார் - தாழ்வுபாடு மீனவர்களின் கரைவலைப் பாடு பகுதியில் கடற்படையினர் அடாத்தாக முகாம் அமைக்கும் பணிகளை முன்னெடுத்துள்ளனர்.

சுமார் அரை கிலோமீற்றர் அகலமும் ஒரு கிலோ மீற்றர் நீளமும் கொண்ட மீனவர்களின் கரைவலைப்பாட்டு தொழிலுக்கு பயன்படுத்தப்பட்ட பிரதேசத்தையே இவ்வாறு கடற்படையினர் கையகப்படுத்தி முகாம் அமைக்கும் பணிகளை தீவிரப்படுத்தியுள்ளனர்.

கடற்படையினரின் அந்த செயற்பாடு தொடர்பாக மன்னார் - தாழ்வுபாடு பங்குத் தந்தை சுகுணராஜ் குருசிடம் தாழ்வுபாடு மீனவர்கள் முறையிட்டனர்.

மீனவர்களின் முறைப்பாடு தொடர்பாக தாழ்வுபாடு கடற்படை அதிகாரியிடம் தாழ்வுபாடு பங்குத்தந்தை தெரிவித்த போது, தேசிய பாதுகாப்பை கருத்தில் கொண்டு இந்த நடவடிக்கையை மேற்கொள்வதாக கடற்படையினர் தெரிவித்துள்ளனர்.

தமிழக மீனவர்களின் அத்துமீறி மீன்பிடிக்கும் செயற்பாட்டை கட்டுப்படுத் துவதற்கும் அந்தப் பகுதியில் முகாம் அமைக்கவேண்டிய தேவைப்பாடு உள்ளதாகவும் கடற்படை கூறியுள்ளது.

மீன்பிடியை வாழ்வாதாரமாகக் கொண்ட தாழ்வுபாடு கிராமத்தில் 650 மீனவ குடும்பங்கள் உள்ளன.

தேசிய பாதுகாப்பை காரணம் காட்டும் கடற்படையினர் யுத்தத்தின் பின்னரும் மக்கள் குடியிருப்புக்களுக்கு அருகில் முகாம்களை அமைப்பது பொதுமக்கள் மத்தியில் அச்சத்தையும் சந்தேகத்தையும் தோற்றுவித்துள்ளது. (2-5-281)




# வித்தியாலயத்தின் புதிய கட்டடமும் நுழைவாயில் வளைவும் திறப்பு

(மன்னார்)

மன்னார் மாவட்ட மடு கல்வி வலயத்திற்குட்பட்ட தட்சணாமருதமடு மகா வித்தியாலயத்தில் நேற்று முன்தினம் செவ்வாய்க் கிழமை முற்பகல் 11 மணியளவில் 4 திறப்பு விழா நடைபெற்றது.

குறித்த நிகழ்வில் விருந்தினராக தட்சணா மருத மடு ஸ்ரீமுருகன் ஆலய குருக்கள் சிவஸ்ரீ பன்னீர்ச்செல்வம் சர்மாவும், பிரதம விருந்தினராக வடக்கு மாகாண கிராம அபிவிருத்தி அமைச்சர் பா.டெனிஸ்வரன், சிறப்பு விருந்தினர்களாக மடு கல்வி வலய பணிப்பாளர் டி.ஜோன் குயின்ரஸ், மடு பிரதேச செயலகத்தின் உதவித் திட்டமிடல் பணிப்பாளர் ஏ.றொகான் குருஸ் ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர்.

தட்சணா மருதமடு மகா வித்தியாலயத்தில் "அருகிலுள்ள பாடசாலை சிறந்த பாடசாலை நிகழ்ச்சித்திட்டத்தின்கீழ்" புனரமைக்கப்பட்ட கட்டடத்தொகுதியும், புதிதாக அமைக்கப்பட்ட நீர்த்தாங்கி, ஆண்கள் மற்றும் பெண்களுக்கான துவிச்சக்கரவண்டி நிறுத்தகம் மற்றும் பாடசாலை பிரதான நுழைவாயில் வளைவு ஆகிய நான்கு பிரதான விடயங்கள் சுமார் 10.05 மில்லியன் செலவில் அமைக்கப்பட்டு அவை உத்தியோகபூர்வமாக திறந்து வைக்கப்பட்டது. (2-5)

# வெளிச்சவீடு இன்றி ஆழ்கடல் சென்று கரை திரும்புகையில் அவதியுறுகிறோம்

## முல்லை. கடற்றொழிலாளர்கள் கவலை

முல்லைத்தீவு கடற்கரையோரப் பகுதியில் வெளிச்ச வீடுகள் இன்மையால் கடற்றொழிலாளர்கள் இரவு வேளைகளில் பல்வேறு அசௌகரியங்களை எதிர்கொள்வதாக தெரிவித்துள்ளனர்.

குறித்த மாவட்டத்தில் உள்ள சுமார் 4 ஆயிரத்து 700 வரையான கடற்றொழிலாளர்கள் 73 கிலோமீற்றர் நீளமான கடற்கரையோரம் மற்றும் ஆழ்கடல் பகுதிகளில் தொழிலில் ஈடுபட்டு வருகின்றனர்.

இது தொடர்பில் அவர்கள் தெரிவிக்கையில்,

கரையோரப்பகுதிகளில் வெளிச்சமின்மை மற்றும் வெளிச்சவீடுகள் அமைக்கப்படாமையினால் ஆழ்கடல் தொழில்களுக்குச் சென்று கரை திரும்புவதில் பல்வேறு சிரமங்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளது.

அத்துடன், தொழிலுக்கு பயன்படுத்தும் படகுகளை கரை சேர்ப்பதிலும் பிரச்சினைகளை எதிர்கொள்ள வேண்டியுள்ளது.

இதனால், கரையோரப் பகுதிகளில் வெளிச்ச வீடுகளையும், படகுகளை பாதுகாக்கக்கூடிய வகையில் இறங்கு துறைகளையும் அமைத்துத் தருமாறும் கோரிக்கை விடுக்கிறோம் என தெரிவித்துள்ளனர். (2-5)

## துப்பாக்கி, வாள்கள், பொல்லுகள் சகிதம்

# வீடுகளினுள் நுழைந்து பணம், நகைகள் திருட்டு

## சாமிபுலம் கிராமத்தில் சம்பவம்

(பூநகரி)

பூநகரி நல்லூர் கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த சாமிபுலம் கிராமத்தில் துப்பாக்கி, வாள்கள், பொல்லுகள் சகிதம் 10 பேருக்கு மேற்பட்ட கும்பலொன்று முகமூடிகள், கையுறைகள் அணிந்த நிலையில் மூன்று வீடுகளினுள் நுழைந்து அங்கிருந்தவர்களை அடித்தும் துன்புறுத்தியும் வற்புறுத்தியும் அமரச் செய்து பல இலட்சம் ரூபா பெறுமதியான நகைகள், பணம் என்பவற்றை திருடி தப்பிச் சென்றுள்ளனர்.

இச் சம்பவம் நேற்று முன்தினம் நள்ளிரவு 12 மணியளவில் நடைபெற்றுள்ளது.

இது தொடர்பில் தெரிய வருவதாவது,

பூநகரி நல்லூர் சாமிபுலம் கிராமத்தில் உள்ள 3 வீடுகளினுள் நுழைந்த திருட்டுக் கும்பல் அங்கிருந்தவர்களின் கையடக்கத் தொலைபேசிகளை பறித்தெடுத்து அவற்றை சேதப்படுத்தியதுடன் மின்சாரத்தையும் துண்டித்தனர்.

இதேவேளை வீட்டில் இருந்தவர்களை பொல்லுகளினால் அடித்து துன்புறுத்தி துப்பாக்கியைக் காட்டி மிரட்டி ஓரிடத்தில் அமருமாறு எச்சரித்துள்ளனர்.

இதேவேளை பிறிதொரு வீட்டின் குடும்பத் தலைவரின் கழுத்தில் கத்தியை வைத்து மிரட்டி நகைகள், பணம் ஆகியவற்றை வைத்திருக்கும் இடத்தைக் காண்பிக்குமாறு மிரட்டியுள்ளனர்.

இதன் பின்னர் 3 வீடுகளினுள் இருந்த நகைகள், பணம் என்பவற்றை திருட்டுக் கும்பல் திருடிச் சென்றுள்ளனர்.

இது தொடர்பில் வீடுகளின் உரிமையாளர்களினால் பூநகரி பொலிஸ் நிலையத்தில் மறுநாள் காலை முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

இதனை அடுத்து சம்பவம் நடைபெற்ற வீடுகளுக்கு விரைந்த பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்தனர். (2-5-84)

# நூறாவது எரிபொருள் நிரப்பு நிலையம் பூநகரி வாடியடியில் நேற்று திறந்து வைப்பு




(பூநகரி)

வடக்கின் நூறாவது எரிபொருள் நிரப்பு நிலையம் பூநகரி வாடியடியில் திறந்து வைக்கப்பட்டுள்ளது. பூநகரி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்திற்குச் சொந்தமான எரிபொருள் நிரப்பு நிலையம் 22 மில்லியன் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

இதனை வடக்கு கூட்டுறவு அமைச்சர் பொ.ஐங்கரநேசன் நேற்று புதன்கிழமை திறந்து வைத்துள்ளார்.

இந்த எரிபொருள் நிரப்பு நிலையம் பூநகரி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் இரண்டாவது எரிபொருள் நிரப்பு நிலையம் என்பதோடு, கிளிநொச்சி மாவட்டத்தில் அமைக்கப்பட்டுள்ள ஐந்தாவது எரிபொருள் நிரப்பு நிலையமும் ஆகும்.

புதிதாகத் திறந்து வைக்கப்பட்டுள்ள இந்த எரிபொருள் நிலையத்தையும் சேர்த்து வடக்கு மாகாணத்தில் கூட்டுறவு அமைப்புகளுக்குச் சொந்தமான 53 எரிபொருள் நிரப்பு நிலையங்கள் இயங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

திறப்பு விழா நிகழ்வில் வடக்கு மாகாணசபை உறுப்பினர் பசுபதி அரியரட்ணம், முன்னாள் அரசாங்க அதிபர் தி.இராசநாயகம், கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் க.சிவகரன், கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் கனகம்மா நல்லதம்பி, பூநகரி பிரதேச செயலாளர் சி.க.கிருஷ்ணேந்திரன், பிரதேச சபைச் செயலாளர் மு.இராசகோபால், இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் பிராந்திய முகாமையாளர் வீ.சண்முகநாதன், பூநகரி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் தலைவர் து.இரத்தினசிங்கம் ஆகியோரும் கலந்து கொண்டிருந்தனர். (2-5)

# பாலியாற்றைப் பாதுகாப்பதற்கு ஒதுக்கப்பட்ட காணிகளை அத்துமீறி கையகப்படுத்த முயற்சி

வரலாற்றுச் சிறப்புமிக்க பாலியாற்றினை, பாதுகாப்பதற்காக அரசாங்கத்தால் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள காணிகளை அத்துமீறி கையகப் படுத்த வரும் நபர்களிடம் இருந்து பாலியாற்றை பாதுகாத்துத் தருமாறு துணுக்காய், மாந்தைக் கிழக்கு ஆகிய பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் பொதுமக்கள், சமூக ஆர்வலர்கள், சூழலியலாளர்கள் எனப்பலரும் பிரதேச மட்டத்திலான அபிவிருத்தி குழுக் கூட்டத்திலும் மற்றும் மாவட்ட மட்டத்திலான அபிவிருத்தி குழுக் கூட்டத்திலும் கோரிக்கையை முன் வைத்துள்ளனர்.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

பாலியாறு எல்லாள மன்னர் காலத்தில் இருந்து சிறப்பு பெற்ற ஒரு ஆறு ஆகும்.

இவ்வாறான நிலையில், பாலியாற்றினை பாதுகாக்கும் வகையில் அதன் இரு மருங்கிலும் பல மைல்கள் நீளத்திற்கு அரசாங்கத்தினால் நிலம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இப் பகுதியில் பாரியளவில் முதிரை, பாலை, கருங்காலி, மருதம் போன்ற பயன்தரு மரங்கள் உட்பட காட்டு மரங்கள் வளர்ந்து இயற்கை சுற்றுச்சூழலைப் பாதுகாத்து வருவதுடன், ஆற்று நீரினால் மண்ணரிப்பு ஏற்படாதும் பாதுகாத்து வருகின்றது.

இந் நிலையில், இதனை சீர்குலைக்கும் வகையில் மக்கள் பிரதிநிதிகள் உட்பட அரசாங்க உத்தியோகத்தர்கள் மற்றும் பலரும் அத்துமீறி உள்ள நுழைந்து நிலங்களை கையகப்படுத்தி, காட்டு மரங்களை வெட்டி வீழ்த்தியதுடன், பாலியாற்றின் கரையோரங்களை சேதப்படுத்தி ஆற்று நீரைப் பயன்படுத்தி விவசாயத் தோட் டங்களையும், விவசாயப் பண்ணைகளையும் மேற்கொண்டு வருகின்றனர்.

இந்த நிலங்கள் வவுனிக்குளம் நீர்ப்பாசனத் திணைக்களத்திற்குட்பட்டது என்பதை அடையாளப்படுத்தும் வகையில் நீர்ப்பாசனத் திணைக்களத்தினால் எல்லைக் கற்கள் நடப்பட்டுள்ள போதும், அதனை அலட்சியம் செய்து அந்த எல்லைக் கல்லுக்கு அப்பாலும் காணிபிடித்து கையகப்படுத்தியுள்ளதை காண முடிகின்றது.

எனவே, இந்த சமூக விரோத நடவடிக்கைக்ளை தடுத்து நிறுத்துவதுடன், இயற்கை சூழலை பாதிப்படையச் செய்பவர்களை சட்டத்தின் முன் நிறுத்த வேண்டும் என அபிவிருத்திக் குழுக் கூட்டங்களின் போது கோரிக்கைகளை முன் வைத்துள்ளனர். (2-5-15)

# IELTS
PREPARATION COURSE
IELTS Registration & Exam Preparation Classes
@ ICBT Jaffna Campus



- All material used are updated and directly from UK.
- Conducted by experienced and qualified lecturers.
- Free Gift Pack with a CD for listening.

**Why Study ICBT ?**

- Qualified Lecturer Panel
- High Quality Learning Experience
- Cafeteria/Library/Computer Laboratory/Recreation Area/ Modern Lecture Halls.
- Easy Payment schemes

Batch #2
Saturday, Sunday- 2.30 PM-5.30 PM (Starts June, 10th)
Duration: 04 Weeks

0770 746 553

ICBT CAMPUS JAFFNA 580, Hospital Rd., Jaffna Tel: (+94)214 777 888 Fax: (+94)654 777 890 Email : jaffna@icbtcampus.edu.lk
EQAA
National Business Excellence 2016 | 2015 | 2014 | 2013 Gold Award Winner Education Service Sector
www.icbt.lk



# Improve your English Skills
@ ICBT Jaffna Campus



## SPOKEN ENGLISH

Course Contents
- Grammar & writing skills.
- Speaking & Listening pronunciation, fluency & key features of spoken English.
- Roleplay, reading & adaptation of modern method of communication.

Batch #1 | Saturday, Sunday - 2.00 PM - 5.00 PM (Starts July 1st) | Duration: 4 Weeks

0770 746 553

ICBT CAMPUS JAFFNA 580, Hospital Rd., Jaffna Tel: (+94)214 777 888 Fax: (+94)654 777 890 Email : jaffna@icbtcampus.edu.lk
EQAA
National Business Excellence 2016 | 2015 | 2014 | 2013 Gold Award Winner Education Service Sector
www.icbt.lk



# Improve your English Skills
@ ICBT Jaffna Campus



## DIPLOMA IN ENGLISH
Level 01 & Level 02 (2- 4 Months)

A General English course designed to cover and improve the four main language skills of Reading, Writing, Listening & Speaking.

| | | |
|---|---|---|
| Batch #6 | Monday, Wednesday 2.30 PM – 4.30 PM (Starts May, 22nd) | Duration: 4 Months |
| Batch #7 | Friday 6.00 PM – 8.00 PM (Starts May, 26th) | Duration: 6 Months |
| Batch #8 | Saturday, Sunday - 10.00 AM - 1.00 PM (Starts June, 24th) | Duration: 10 Weeks |
| Batch #9 | Saturday, Sunday - 2.30 PM-5.00 PM (Starts June, 24th) | Duration: 12 Weeks |

0770 746 553

ICBT CAMPUS JAFFNA 580, Hospital Rd., Jaffna Tel: (+94)214 777 888 Fax: (+94)654 777 890 Email : jaffna@icbtcampus.edu.lk
EQAA
National Business Excellence 2016 | 2015 | 2014 | 2013 Gold Award Winner Education Service Sector
www.icbt.lk



# DIPLOMA IN MARKETING & MANAGEMENT

After Exams, Invest your time and money on a recognized qualification which can support you in your future studies and employment.



BSc (Hons)
HND
Business (Management)
Diploma in Marketing Management
O/L or A/L

Batch #3 | Saturday, Sunday - 10.00 AM - 02.00 PM (Starts June, 24th) | Duration: 3 Months

0770 746 553

C-8667

ICBT CAMPUS JAFFNA 580, Hospital Rd., Jaffna Tel: (+94)214 777 888 Fax: (+94)654 777 890 Email : jaffna@icbtcampus.edu.lk
EQAA
National Business Excellence 2016 | 2015 | 2014 | 2013 Gold Award Winner Education Service Sector
www.icbt.lk

# மார்க்கண்டு சுவாமிகள்



ஈழநாடு செய்த தவப்பயனாக அவதரித்த சித்தர் பரம்பரையின் கடையிற் சுவாமிகளுக்கு அடுத்த படியாக கருதப்படுபவர் செல்லப்பா சுவாமிகள். இவரை தேரடி சுவாமிகள் என்றும் அழைப்பர். செல்லப்பா சுவாமிகள் சீடராக யோகர் சுவாமிகள் விளங்கினார். இவரது முதன்மைச் சீடராக மார்க்கண்டு சுவாமிகள் இருந்தார்.

மார்க்கண்டு சுவாமிகள் யாழ்ப்பாணத்திலே பிரான்பற்று எனும் ஊரில் விளம்பி வருடம் தைத் திங்கள் 17ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை (29.01.1899) பூர நட்சத்திரத்தில் அவதரித்தார். இவரது தந்தையார் பெயர் சரவணமுத்து. தாயார் பெயர் சின்னக்குட்டி அம்மையார். மார்க்கண்டு சுவாமிகளுக்கு மூன்று பெண் சகோதரிகள் இருந்தனர். சுவாமிகள் ஆரம்பக் கல்வியைப் பிரான்பற்று சிறுவர் பாடசாலையிலும், வடலியடைப்பு சைவ வித்தியாலயத்திலும் கற்று பின்னர் சுன்னாகத்தைச் சேர்ந்த கந்தரோடை இந்துக் கல்லூரியில் கற்று கேம்பிறிட்ஸ் சீனியர் தேர்வில் சித்தியடைந்ததுடன் அவரது பாடசாலைப்படிப்பு முற்றுப் பெற்றது.

மார்க்கண்டு சுவாமிகள் தனது ஊரில் அமைந்துள்ள முருகமூர்த்தி ஆலயத்தில் சிவத்தொண்டுகள் செய்து திருமுறைப் பாடல்களைப்பாடி பிரார்த்தனைகளில் ஈடுபட்டார். இக்காலப் பகுதியில் சுவாமிகளுக்கு தியத்தலாவை நில அளவைத் திணைக்களத்தில் எழுதுவினைஞர் தொழில் கிடைத்தது.

சுவாமிகள் நேரத்திற்கு அலுவலகத்திற்குச் செல்லுதல், அன்றாட வேலைகளை அன்றன்றே செய்தல், செவ்வனே செய்தல் ஆகிய தொழில் சீர்த்துவம் தொடக்கத்திலேயே அவரிடம் தெரியலாயிற்று. சத்தியம், சாந்தம், இன்முகம், பரோபகாரம் எனும் பண்புகளால் ஒரு நல்லவராக மற்றையோரால் மதிக்கப்பட்டார். சுவாமி பணத்தைப் பெரிதாக மதிக்கமாட்டார். உத்தியோக உயர்வுகளையும் பெரிதாக மதியாது பிரமச்சரிய விரதத்தின் பெருமை பெரிது எனும் திடசித்தம் வாய்ந்தவர்.

விடுமுறை நாட்களில் தனது சொந்த ஊரான பிரான்பற்றுக்கு வருகைதந்து பெற்றோரைப் பேணினார். சகோதரிகளின் திருமணச் சடங்கினை நிறைவேற்றினார்.

கோயில் திருப்பணி, பாடசாலை, வாசிகசாலை அபிவிருத்தி வேலைகளில் ஈடுபட்டார். மறுபக்கத்தில் உத்தியோகம் உட்பட சகலவற்றையும் இறைவனை அடைவதற்காக உபயோகிக்கும் உறுதியையும் உடையவரானார். காலையிலும், மாலையிலும் தியானம் செய்தல் வேண்டும் என்ற ஒழுங்கினைத் தவறாது மேற்கொண்டார்.

இக்காலப்பகுதியில்தான் யோகர் சுவாமிகளின் தொடர்பு மார்க்கண்டு சுவாமிகளுக்கு கிடைத்தது. தெய்வசித்தம் எவ்வித சிவத்தொண்டுக்காக அவரைத் தோற்றுவித்ததோ அத்தொண்டினை நிறைவு செய்வதற்குரிய பயிற்சிகள் அவருக்குக் கிடைத்தன. குருநாதரான யோகர் சுவாமிகள் தனது சீடரான மார்க்கண்டு சுவாமிக்ளுக்கு ஆன்மீகப் பயணம் தொடர்பானவற்றை தாயினும் இனிய பரிவுடன் சொல்லாலும் செயலாலும் இடை இடையே திருமுகங்கள் மூலமாக உணர்த்திய பின்னர் அவரை சுயமாக இயங்க விட்டார்.

மார்க்கண்டு சுவாமிகள் தியத்தலாவையில் இருந்து இடமாற்றம் பெற்று கொழும்பு மாநகரில் சிறுது காலம் தொழில் புரிந்தார். இக்காலப்பகுதியில் கல்விமான்கள் நடத்திய சைவசித்தாந்த வகுப்புக்களுக்கும் சென்று வந்தார். சுவாமிகள் 50 ஆவது வயதில் தனது உத்தியோகத்திற்கு முற்றுப்புள்ளி வைத்து கொழும்பில் இருந்து நேரே கொழும்புத்துறையில் யோகர் சுவாமிகள் குடிகொண்டிருந்த கொட்டிலை வந்தடைந்தார்.

குருநாதரான யோகர் சுவாமிகள் அவரை ஏற்று வண்ணார்பண்ணையில் ஒரு வீட்டில் தங்க வைத்தார். பின்னர் கைதடி ஊரில் ஆசிரியர் விசுவலிங்கம் வீட்டில் அமைந்திருந்த குடிசையில் 29.12.1950 ஆம் ஆண்டு மார்க்கண்டு சுவாமிகளைத் தங்க வைத்தார். மார்க்கண்டு சுவாமிகளும் அவ் ஆச்சிரமத்தில் தங்கியிருந்து உயர் ஞான சாதனையில் ஈடுபட்டார். சில வேளைகளில் யாழ்ப்பாணத்திலுள்ள சிவத்தொண்டன் நிலையத்திற்கும் சென்று வருவார்.

யோகர் சுவாமிகள் சோல்பரிப் பிரபுவின் மகன் இராம்ஸ போதத்தை (சாந்த சுவாமிகள்) சில காலம் மார்க்கண்டு சுவாமிகளுடன் தங்க வைத்து இராம்ஸ போதத்திற்கு அருளுரை வழங்குமாறு கூறினார். சோல்பரி பிரபுவின் மகனும் மார்க்கண்டு சுவாமிகளிடம் ஒரு மகனைப் போல அன்பு செலுத்தி எதுவித வசதிகளையும் எதிர்பாராது ஒரு தொண்டனாகவும் தோழனாகவும் இருந்து சாதனையில் ஈடுபட்டார்.

அமெரிக்கத் துறவு சுப்பிரமனிய சுவாமி, ஜேர்மன் சுவாமி, அவுஸ்திரேலிய பன்றிக்குட்டிச் சுவாமிகள் உட்பட பல சமயத்தைச் சேர்ந்தவர்கள் மார்க்கண்டு சுவாமிகளிடம் அருளாசி பெற்று வந்தார்கள். சில பௌத்த துறவிகள் கூட மார்க்கண்டு சுவாமிகளைத் தரிசிக்க அடிக்கடி வருவார்கள்.

மார்க்கண்டு சுவாமிகள் தமது அந்திம காலத்தை உணர்ந்து தம்முடன் இருந்த சோல்பரிப் பிரபுவின் மகன் இராம்ஸ போதத்திடம் உமது உறவினரைப் பார்க்க இங்கிலாந்து செல்லுமாறு கூறினார். அதன்படி அவரும் இங்கிலாந்து சென்றார். மார்க்கண்டு சுவாமிகள் தனது இறுதி நாட்களில் குளிப்பு, முழுக்கு முதலியவற்றை கைவிட்டதோடு உணவையும் பெரிதாகச் சுருக்கிக் கொண்டார். சுவாமிகள் தளர்ச்சி அடைந்திருந்த போது வைத்திய கலாநிதி யோகு பசுபதி அவர்கள் பார்வையிட வந்தபோது தமக்கு எவ்வித வருத்தமும் இல்லை எனக் கூறி பார்வையிட அனுமதிக்கவில்லை. மார்க்கண்டு சுவாமிகள் சும்மாயிருந்து இரத்தாசி வருடம் வைகாசி மாதம் 16ஆம் திகதி செவ்வாய்க்கிழமை (29.05.1984) நண்பகல் 12 மணிக்கு கார்த்திகை நட்சத்திரத்தில் சிவன் திருவடி சேர்ந்தார்.

மார்க்கண்டு சுவாமிகள் பிறந்த ஊரான பிரான்பற்றில் அவரது உடன்பிறந்த சகோதரியின் பேரன் நவரத்தினராசா சண்முகராசாவால் மார்க்கண்டு சுவாமிகள் சபை ஸ்தாபிக்கப்பட்டுள்ளது.

சபையால் மார்க்கண்டு சுவாமிகளுக்கு ஆலயம் அமைக்கப்பட்டுள்ளது. சபையால் மார்க்கண்டு சுவாமிகள் பாலர் பாடசாலை ஆரம்பிக்கப்பட்டு அதில் இலவசமாக மாணவர்கள் கல்வி கற்கிறார்கள். சபையால் மார்க்கண்டு சுவாமிகள் இந்து அறநெறிப் பாடசாலையும் சிறப்பாக நடத்தப்பட்டு வருகின்றது. மேலும் சமூகப்பணிகள், சமயப் பணிகள், கலாசாரப் பணிகள் போன்ற பல பணிகள் சபையால் சிறப்பாக முன்னெடுக்கப்படுகின்றது.

**ந.சண்முகராசா** ஸ்தாபகர்,
மார்க்கண்டு சுவாமிகள் சபை, பிரான்பற்று, பண்டத்தரிப்பு.

# 60,000 ஆசிரியர்களுக்கான வெற்றிடங்கள் நிலவுகின்றன

## கல்வி அமைச்சர் காரியவசம் தகவல்



ஆசிரியர் வெற்றிடத்திற்கு தீர்வு காண அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளதாக கல்வி அமைச்சர் . அகில விராஜ் காரியவசம் தெரிவித்துள்ளார்.

நாட்டில் 60 ஆயிரம் ஆசிரியர்களுக்கான வெற்றிடங்கள் நிலவுகின்றன. தோட்டப் பகுதிகளுக்கு அரசாங்கம் அதிகளவிலான ஆசிரியர்களை இணைத்துள்ளதாகவும் அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

இவ்வாறு இணைத்துக் கொள்ளப்பட்ட ஆசிரியர்கள் தோட்டப்பகுதியில் பணியாற்ற விருப்பம் தெரிவிக்காமையினால் ஆசிரியர் வெற்றிடங்கள் ஏற்பட்டுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

கல்வியியல் கல்லூரிகள் ஊடாக தோட்டப் பகுதிகளுக்கு கூடுதலாக ஆசிரியர்களை இணைத்துக்கொள்ள எதிர்பார்க்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் அகிலவிராஜ் காரியவசம் நேற்று முன்தினம் பாராளுமன்றத்தில் தெரிவித்தார். (இ-7)

# முன்னறிவிப்பின்றி பணிப்புறக்கணிப்பிற்கு அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் தயார்


சைட்டம் தனியார் மருத்துவக் கல்லூரி தொடர்பான பிரச்சினைக்கு ஏற்றுக்கொள்ளத்தக்க தீர்வொன்றை முன்வைக்க அரசாங்கம் தவறினால் முன்னறிவித்தல் இன்றி பணிப்புறக்கணிப்பில் ஈடுபடுவதற்குத் தீர்மானித்துள்ளதாக அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் அறிவித்துள்ளது.

அரசாங்கம் சைட்டம் பிரச்சினைக்கு உரிய தீர்வை விரைவில் முன்வைக்காவிடின் தொடர்ந்தும் பணிப்புறக்கணிப்பினை முன்னெடுக்கவுள்ளதாக அச்சங்கத்தின் செயலாளர் நவீன் டி சொய்சா தெரிவித்துள்ளார்.

மேற்படி பணிப்புறக்கணிப்பு தொடர்பில் தீர்மானம் எடுக்கும் அதிகாரத்தை அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் மத்திய செயற்குழுவிடம் ஒப்படைத்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

எதிர்வரும் ஜூன் மாதம் 30 ஆம் திகதி இலங்கை மருத்துவ சபையின் தலைவர் பதவியில் மாற்றம் இடம் பெறவுள்ளது. இதுவரையில் அரசாங்கம் இப்பிரச்சினைக்கு தீர்வை முன்வைக்காமல் இழுத்தடிப்பு செய்யும் என்பதும் அதனால் பெரிதும் பாதிக்கப்படப் போவது பொது மக்கள்தான் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# எமில் காந்தனுக்கு எதிரான வழக்கு ஆவணங்களை வழங்கத் தயார்



ராடா நிறுவனத்தில் இடம் பெற்ற மோசடி தொடர்பான வழக்கில், பிரதிவாதிகள் தரப்பால் கோரப்பட்ட ஆவணங்களை நீதிமன்றப் பதிவாளரூடாக வழங்கத் தயார் என, பிரதி சொலிசிட்டர் ஜெனரல் யசந்த கடகொட, கொழும்பு மேல் நீதிமன்றத்தில் நேற்று முன்தினம் அறிவித்தார்.

2006ஆம் ஆண்டு டிசெம்பர் 6ஆம் திகதி தொடக்கம் 2009ஆம் ஆண்டு பெப்ரவரி 8ஆம் திகதிவரை ராடா (புனரமைப்பு மற்றும் அபிவிருத்தி முகவரகம்) நிறுவனத்தில் அரச பணமான, 124 மில்லியன் ரூபாயை மோசடி செய்தமை தொடர்பில், கொழும்பு மேல் நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டது.

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரான டிரான் அலஸ், புலிகளின் நிதி சேகரிப்பாளரான எமில் காந்தன் மற்றும் ராடா நிறுவனத்தின் இரண்டு பணிப்பாளர்களான டாக்டர் ஷெஹான் சாலிய விக்கிரமசூரிய, ஜயந்த டயஸ் சமரசிங்க ஆகியோருக்கு எதிராகவே வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

இந்த வழக்கு, கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி விக்கும் களுஆராச்சி முன்னிலையில் நேற்று முன்தினம் எடுத்துக் கொள்ளப்பட்ட போது, தனது சேவை பெறுநருக்கு எதிரான ஆவணங்களின் அசல் பிரதியை வழக்குத் தொடுநர், தமக்கு வழங்கவில்லை என்றும் நகல் பிரதிகளே வழங்கப்பட்டுள்ளன எனவும் டிரான் அலஸ் சார்பில் ஆஜரான சட்டத்தரணி நளின் லதுவஹெட்டி கூறினார்.

அத்துடன், அட்டவணைப்படுத்தப்பட்ட கணனிச் சாட்சியத்தையும் பிரதிவாதிகள் தரப்பு பரிசீலனை செய்யச் சந்தர்ப்பம் தரவில்லை எனவும் சட்டத்தரணி கூறினார்.

இது தொடர்பில் பதிலளித்த பிரதி சொலிசிட்டர் ஜெனரல் யசந்த கடகொட, இந்த வழக்குடன் தொடர்புடைய அசல் ஆவணங்கள் தம்மிடம் இல்லை எனவும் நகல் ஆவணங்களே உள்ளனவெனவும் அதன் பிரதிகளே. பிரதிவாதிகள் தரப்புக்கு வழக்கப்பட்டுள்ளன என்றும் குறிப்பிட்டார். தம்மிடம் உள்ள நகல் ஆவணங்களை நீதிமன்றப் பதிவாளரூடாக வழங்கத் தயார் எனவும் கூறினார்.

திருமணம் ஒன்றுக்காக, 3ஆவது பிரதிவாதி லண்டனுக்குச் செல்ல வேண்டியுள்ளதாகவும் அதற்கு அனுமதிக்குமாறும், அவர் சார்பில் ஆஜரான சட்டத்தரணி சாலிய விக்கிரமசூரிய கோரியதுடன், திருமண அழைபபிதழையும் மன்றில் சமர்ப்பித்தார்.

அந்த அழைப்பிதழைப் பார்த்த பிரதி சொலிசிட்டர் ஜெனரல், வெளிநாடு செல்ல அனுமதிப்பதற்கு தமது ஆட்சேபனையைத் தெரிவித்ததுடன், விசா விண்ணப்பம் மற்றும் இதர ஆவணங்களை மன்றில் சமர்ப்பிக்குமாறு கட்டளையிடுமாறு, நீதிபதியிடம் கோரினார்.

இது தொடர்பான ஆவணங்களை, ஜூன் மாதம் 6ஆம் திகதி சமர்ப்பிக்குமாறும் உத்தரவிட்ட நீதிபதி, வழக்கை ஜூலை 31ஆம் திகதிக்கு ஒத்திவைத்தார். (இ-7)

## மான்செஸ்டர் நகரில் குண்டுவெடிப்பு


# காட்டுமிராண்டித்தனம் - எலிசபெத்

# தோற்றவர்களின் செயல் - ட்ரம்ப்

(லண்டன்)

**இங்கிலாந்து நாட்டின் மான்செஸ்டரில் நடைபெற்ற தற்கொலைப் படைத்தாக்குதல் காட்டுமிராண்டித்தனமானது என ராணி எலிசபெத் தெரிவித்துள்ளார். இதேவேளை வாழ்க்கையில் தோற்றவர்களின் செயல்தான் இது என அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் விமர்சித்துள்ளார்.**






இங்கிலாந்தின் மான்செஸ்டர் நகரத்தில் அமெரிக்காவின் பிரபல பொப் பாடகி ஏரியனா கிராண்ட்டின் இசை நிகழ்ச்சி நடைபெற்றது. சுமார் 10.30 மணியளவில் நிகழ்ச்சி நடை பெற்ற அரங்கில் பலத்த சத்தத்துடன் குண்டுகள் வெடித்தன. இதனால் அங்கு குழுமியிருந்த 25 பேர் உயிரிழந்தனர்.

சுமார் 58 இற்கும் மேற்பட்டவர்கள் படுகாயங்களுடன் வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

மான்செஸ்டர் தாக்குதலுக்கு தாங்கள் தான் காரணம் என டெலிகிராம் செயலி வழியாக ஐ.எஸ். இயக்கத்தினர் அறிவித்தபோதும் பொலிஸ் தரப்பில் உறுதியான தகவல்கள் வெளி யாகவில்லை.

இந்நிலையில், இத்தாக்குதலில் ஈடுபட்ட முக்கிய தற்கொலைப்படை தீவிரவாதியை பொலிஸார் அறிவித்துள்ளனர்.

லிபியாவில் இருந்து சிறுவயதில் அகதியாக இங்கிலாந்து வந்த 22 வயதான சல்மான் அபேதி என்பவர் இத்தாக்குதலில் ஈடுபட்டுள்ளதாகவும், இவர் மான்செஸ்டர் நகரின் பல்வேறு முகவரிகளில் வசித்து வந்துள்ளார் எனவும் பொலிஸார் தெரிவித்தனர். இதே தகவல்களை அமெரிக்க பாதுகாப்பு துறை அதிகாரிகளும் உறுதி செய்துள்ளனர்.

இந்நிலையில், மான்செஸ்டர் தாக்குதல் காட்டுமிராண்டித்தனமானது என பிரிட்டன் ராணி இரண்டாம் எலிசபெத் தெரிவித்துள்ளார். உயிரிழந்தவர்களுக்கு அஞ்சலி செலுத்தும் விதமாக பக்கிங்காம் அரண்மனையில் ஒரு நிமிடம் மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது. இதில், அரச குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் பங்கேற்றனர்.

அதேபோல, வளைகுடா நாடுகளில் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் தாக்குதல் நடத்தியவர்களை அசுரர்களாக நான் அழைக்கப்போவது இல்லை, அப்படி அழைப்பதைத்தான் அவர்கள் விரும்புகிறார்கள்.

எனவே, வாழ்க்கையில் தோல்வியடைந்தவர்கள் செய்யும் செயல் என கருத்து தெரிவித்துள்ளார். மான்செஸ்டர் தாக்குதலுக்கு உலக தலைவர்கள் கண்டனமும், பலியானவர்களுக்கு இரங்கலும் தெரிவித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (3)

## உலகின் மிகப்பெரிய விமானத்தின் சோதனை ஓட்டம் வெற்றி

உலகின் மிகப் பெரிய விமானம் சோதனை ஓட்டம் வெற்றிகரமாக முடிந்தது. இதை பயணிகள் பயன்பாட்டுக்கு பயன்படுத்துவது குறித்து ஆலோசிக்கப்படுகிறது.

உலகின் மிகப்பெரிய ஏர்லேண்டார் 10 என்ற விமானம் உருவாக்கப்பட்டது. இந்த விமானம், ஹெலிகொப்டர் மற்றும் விண்கலம் ஆகியற்றின் தொழில்நுட்பத்தை கலந்து தயாரிக்கப்பட்டது.

இது பயணிகள் பயன்பாட்டுக்கு பயன்படுத்துவதற்காக சோதனை ஓட்டம் நடத்தப்பட்டது.

இங்கிலாந்தில் கார்டிங்டன் விமானப்படை தளத்தில் இருந்து பறக்கவிடப்பட்டது. அப்போது இந்த விமானம் 6100 மீற்றர் அதாவது 20 ஆயிரம் அடி உயரத்தில் 5 நாட்கள் தொடர்ந்து பறந்தது. இதற்கு ஹீலியம் எரிபொருளாக பயன்படுத்தப்பட்டது.

தொடர்ந்து 5 நாட்கள் பறந்து சாதனை படைத்த இந்த விமானத்தின் சோதனை ஓட்டம் வெற்றிபெற்றதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இதை பயணிகள் பயன்பாட்டுக்கு பயன்படுத்துவது குறித்து ஆலோசிக்கப்படுகிறது. (3)

## ஏமனில் அமெரிக்கா தாக்குதல்; பயங்கரவாதிகள் 7 பேர் பலி!

(வோஷிங்டன்)

ஏமனில் நேற்று முன்தினம் காலை அமெரிக்க போர் விமானங்கள் வான்தாக்குதல் நடத்தியதில் 7 அல்கொய்தா பயங்கரவாதிகள் உயிரிழந்தனர்.

ஏமன் நாட்டில் அல்கொய்தா பயங்கரவாதிகள் ஆதிக்கம் செலுத்தி வருகின்றனர். அவர்கள்மீது அவ்வப்போது அமெரிக்கா வான்தாக்குதல் நடத்தி வருகிறது.

இந்த நிலையில், அங்கு குறிப்பிட்ட இடத்தில் அல்கொய்தா பயங்கரவாதிகள் பதுங்கி இருப்பதாக அமெரிக்காவுக்கு உளவுத்தகவல்கள் கிடைத்தன.

இதையடுத்து அந்த குறிப்பிட்ட இடத்தை குறி வைத்து நேற்று முன்தினம் காலை அமெரிக்க போர் விமானங்கள் வான்தாக்குதலில் ஈடுபட்டன. இந்த தாக்குதலில் 7 அல்கொய்தா பயங்கரவாதிகள் உயிரிழந்தனர்.

இதை அமெரிக்க இராணுவ மத்திய தலைமை உறுதி செய்தது. இது குறித்து அமெரிக்க இராணுவ மத்திய தலைமை விடுத்துள்ள அறிக்கையில், "ஏமன் அரசு ஆதரவுடன் மாரிப் மாகாணத்தில் ஒரே நேரத்தில் வான்தாக்குதலும், சிறிய ரக ஆயுத தாக்குதலும் நடத்தப்பட்டன.

இந்த தாக்குதலில் அல்கொய்தா பயங்கரவாதிகள் 7 பேர் கொல்லப்பட்டாலும், அமெரிக்க தரப்பில் சேதம் எதுவும் இல்லையென கூறப்பட்டுள்ளது. (3)

## 26 மணித்தியாலங்களில் எவரெஸ்டில் ஏறி சாதனை படைத்த ஸ்பெயின் வீரர்

(காத்மண்டு)

கயிறு, ஒட்சிசன் சிலிண்டர் இன்றி 26 மணி நேரத்தில் எவரெஸ்ட் சிகரத்தில் ஏறி ஸ்பெயின் வீரர் சாதனை படைத்துள்ளார்.

ஸ்பெயின் நாட்டை சேர்ந்த மலை ஏறும் வீரர் இலியன் ஜோர்னெட். சமீபத்தில் இமயமலையில் உள்ள எவரெஸ்ட் சிகரத்தில் ஏறினார்.

26 மணி நேரத்தில் ஏறி முடித்து சாதனை படைத்தார். அதுவும் கயிறு மற்றும் சிலிண்டர் போன்ற பாதுகாப்பு உபகரணங்கள் எதுவும் இன்றி ஏறினார்.

இவர் சீனாவின் ஆக்கிரமிப்பில் உள்ள திபெத் பகுதியில் இருந்து எவரெஸ்ட் சிகரம் மீது ஏறினார்.

இவர் மட்டும் பாறைகளை பிடித்து தனியாக ஏறினார். இதன் மூலம் எவரெஸ்ட் சிகரத்தில் அதிவேகமாக ஏறிய வீரர் என்ற பெருமை பெற்றுள்ளார்.

இதற்கு முன்பு பிளாங்க், தி மாட்டார்கார்ன், தெனாலி, அகான்காகுவா மற்றும் கிளிமரிஞ்சரோ உள்ளிட்ட மலைச் சிகரங்களில் அதிவேகமாக ஏறி பல சாதனைகள் படைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (3)

## இங்கிலாந்து குண்டு வெடிப்பில் இந்தியர்களுக்கு பாதிப்பில்லை

### சுஷ்மா சுவராஜ் தெரிவிப்பு

(டில்லி)

இங்கிலாந்து குண்டு வெடிப்பில் இந்தியர்கள் யாருக்கும் பாதிப்பில்லை என்று மத்திய அமைச்சர் சுஷ்மா சுவராஜ் தெரிவித்துள்ளார்.

இங்கிலாந்து நாட்டில் மான்செஸ்டர் நகரத்தில் நடந்த இசை நிகழ்ச்சியின்போது பயங்கரவாதிகள் பயங்கர குண்டு வெடிப்பை நடத்தி உலுக்கி விட்டனர்.

இந்தக் கொடூர தாக்குதலில் மாணவிகள் சபிரோஸ் ரூசோஸ் (வயது-8), ஜார்ஜினா கலண்டர் (வயது-18) உட்பட 25 பேர் உடல் சிதறி பரிதாபமாக உயிரிழந்தனர்.

இந்த தாக்குதலில் இந்தியர்கள் யாருக்கும் பாதிப்பு இருக்குமோ என்ற அச்சம் நிலவியது.

இதுகுறித்து மத்திய வெளியுறவு அமைச்சர் சுஷ்மா சுவராஜ் டுவிட்டரில், "மான் செஸ்டர் குண்டுவெடிப்பில் இந்தியர்கள் யாருக்கும் பாதிப்பு ஏற்பட்டதாக இதுவரை தகவலில்லை. நிலைமையை உன்னிப்பாக கண்காணித்து வருகிறோம் எனக் கூறினார்.

மான்செஸ்டர் தாக்குதலுக்கு யாரும் பொறுப்பு ஏற்கவில்லை என முதலில் தகவல்கள் வந்தன. ஆனால் இந்த தாக்குதலுக்கு உலகையே அச்சுறுத்தி வருகிற ஐ.எஸ். பயங்கரவாதிகள் பொறுப் பேற்றனர்.

இது தொடர்பாக அவர்கள் தரப்பில் வெளியிட்டுள்ள அறிக்கையில், "மான்செஸ்டரில் மக்கள் கூடியிருந்த இடத்தில், நமது போர்ப் படை வீரர்களில் ஒருவர் வெடிகுண்டை வைக்க முடிந்தது" என கூறப்பட்டுள்ளது.

இந்த குண்டுவெடிப்பு தொடர்பாக 23 வயதான வாலிபர் ஒருவரை தெற்கு மான் செஸ்டரில் பொலிஸார் நேற்று முன்தினம் கைது செய்தனர். அவருடன் தொடர்புடைய இடங்களில் சோதனையும் நடத்தினர். இது குறித்த கூடுதல் விபரங்கள் வெளியிடப்பட வில்லை. கைது செய்யப்பட்ட வாலிபரிடம் பொலிஸார் தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர். மான்செஸ்டர் குண்டு வெடி ப்புக்கு ஜனாதிபதி பிரணாப் முகர்ஜி கண்டனம் தெரிவித்துள்ளார். (இ-3)

## பாக். இராணுவ அதிகாரிகளுடன் இந்தியா பேச்சுவார்த்தை

(ஸ்ரீநகர்)

சமீப காலமாக எல்லைப் பகுதியில் அமைதியற்ற சூழல் நிலவி வரும் நிலையில், மீண்டும் அமைதியை ஏற்படுத்த இந்தியா மற்றும் பாகிஸ்தான் இராணுவத்தின் உயர் அதிகாரிகள் மட்டத்திலான பேச்சுவார்த்தை நடைபெற்றது.

காஷ்மீர் மாநிலம் எல்லைக்கட்டுப்பாடு கோடு அருகே கடந்த ஒரு வாரமாக பாகிஸ்தான் இராணுவத்தினர் அத்துமீறி துப்பாக்கிச் சூட்டில் ஈடுபட்டனர். இதனால், அப்பகுதி மக்கள் கடுமையாக பாதிக்கப்பட்டனர். இதற்கு பதிலடியாக இந்திய இராணுவமானது பாகிஸ்தான் இராணுவ நிலைகளை குறிவைத்து நேற்று முன்தினம் தாக்குதல் நடத்தினர்.

இந்தியாவின் இந்த தாக்குதலில் பாகிஸ்தான் இராணுவ நிலைகள் பலத்த சேதமடைந்துள்ளன. இதற்கு ஆதாரமாக சில வீடியோ காட்சிகளையும் இராணுவம் வெளியிட்டது. இருப்பினும், பாகிஸ்தான் இராணுவம் இதை மறுத்து வந்தது.

இந்நிலையில், எல்லைப் பகுதியில் அமைதியை ஏற்படுத்துவதற்காக இரு நாட்டு இராணுவத் தினரின் உயர் அதிகாரிகள் மட்டத்திலான பேச்சுவார்த்தை நேற்று முன்தினம் நடைபெற்றது.

பேச்சுவார்த்தையின் போது இரு தரப்பிலும் பல்வேறு விடயங்கள் குறித்து தீவிரமாக விவாதிக்கப்பட்டது.

அதோடு, எல்லையில் மீண்டும் அமைதியை ஏற்படுத்தவும், போர் நிறுத்த ஒப்பந்தத்தின்படி செயற்படவும் முடிவெடுக்கப்பட்டது. (3)

# கடந்த கால கருத்து வேறுபாடுகளை இஸ்ரேல் - பாலஸ்தீனம் களைய வேண்டும்

## ட்ரம்ப் வலியுறுத்தல்



(டெல் அவிவ்)

அரசுமுறை பயணமாக இஸ்ரேல் சென்றுள்ள அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப், இஸ்ரேல்மற்றும்பாலஸ்தீன் ஆகிய நாடுகள் கடந்த கால வலி மற்றும்வேறுபாடுகளை களைய வேண்டும் என தெரிவித்தார்.

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் அரசு முறை பயணமாக இஸ்ரேல் சென்றுள்ளார். அந்நாட்டு பிரதமர் பெஞ்சமின் நேதன் யாஹூவை சந்தித்து பேசிய பின்னர் ட்ரம்ப், யூதர்களின் புனித தலமான சாலமன் தேவாலயத்தில் பிரார்த்தனை நடத்தினார்.

பின்னர் நேற்று முன்தினம் பாலஸ்தீன ஜனாதிபதி முகமது அப்பாஸை பெத்தலகேமில் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தினார்.

பேச்சுவார்த்தை முடிந்த பின்னர் இரு தலைவர்களும் கூட்டாக செய்தியாளர்களை சந்தித்தனர். அப்போது ட்ரம்ப் பேசியதாவது,

எங்கே வன்முறை சகித்துக் கொள்ளப்படுகிறதோ அங்கு அமைதி நிலவ முடியாது.

வன்முறைக்கு நிதி கிடைப்பதும் அதற்கு வெகுமதி கிடைப்பதும் தொடரும் வரை அமைதி ஏற்படாது.

அமைதியாக வாழும்வழி முறையைத் தேர்ந்தெடுத்து, பாதுகாப்பான வளமான வருங்காலத்துக்குச் செல்ல வேண்டும்.

இந்தப் பிராந்தியத்தில் வாழும் யூத, கிறிஸ்தவ, முஸ்லிம் சிறுவர்களின் அமைதி என்னும் கனவு நிறைவேற அமெரிக்கா அனைத்து உதவிகளையும் ஒத்துழைப்பையும் தரும்.

இஸ்ரேலுக்கும் பாலஸ்தீனத்துக்கும்இடையே அமைதி நிலவச் செய்ய வேண்டும் என்பதுதான்எனது குறிக்கோள்.

அவர்கள் இருவரிடையே இதற்கான உடன்படிக்கை ஏற்பட வேண்டும். அமைதி ஏற்படுத்துவதற்காக என்னால் முடிந்த எந்த உதவியையும் செய்யத் தயாராக இருக்கிறேன் என ட்ரம்ப் தெரிவித்தார். அவருக்கு முன்னதாக உரையாற்றிய பாலஸ்தீன ஜனாதிபதி அப்பாஸ் பாலஸ்தீன நாட்டை இஸ்ரேல் அங்கீகரிக்கவில்லை.

இஸ்ரேலின் ஆக்கிரமிப்பும் பெரிய பிரச்சினையே. இது பாலஸ்தீனத்துக்கும் ஆக்கிரமிப்புக்கும் இடையேயான மோதலே தவிர எங்களுக்கும் யூத மதத்துக்கும் இடையேயான மோதல் அல்ல. 1967 ஆம் ஆண்டு எல்லை நிலவரப்படி, பாலஸ்தீனம் - இஸ்ரேல் என்னும் இரு நாடுகள். கிழக்கு ஜெருசலேம் பாலஸ்தீனத்தின் தலைநகர் என்பதில் உறுதியாக இருக்கிறோம் என அவர் மேலும் தெரிவித்தார். (3)

## சிரியாவில் கார்க்குண்டு வெடிப்பு; நான்கு பேர் உயிரிழப்பு!



(டமாஸ்கஸ்)

சிரியாவில் நேற்று முன்தினம் இடம்பெற்ற கார்க்குண்டு தாக்குதலில் 4 பேர் உயிரிழந்துள்ளனர். இதில் பலர் படுகாயம் அடைந்து வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

உள்நாட்டுப்போர் நடந்து வரும் சிரியாவில் ஹாம்ஸ் நகரம், கடந்த 2 தினங்களுக்கு முன் அரசின் முழுக் கட்டுப்பாட்டின் கீழ் வந்தது.

இந்த நிலையில், அந்த நகரத்தின் புறநகரான அல் ஜஹ்ரா நகரில் நேற்று முன்தினம் கார்க்குண்டு தாக்குதல் நடந்தது.

இந்த தாக்குதலில் 4 பேர் உடல் சிதறி உயிரிழந்தனர். பலர் படுகாயம் அடைந்தனர். அவர்கள் மீட்கப்பட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.


இந்த கார்க் குண்டுவெடிப்பு குறித்து அந்த நகர ஆளுநர் டலால் அல் பராஜி, சிரிய அரசு செய்தி நிறுவனத்துக்கு பேட்டி அளித்தார்.

அப்போது அவர், “அல் ஜஹ்ரா நகரத்தில் நடந்த கார்க்குண்டுவெடிப்பு அந்தப் பகுதியை அதிர வைத்தது. அந்த குண்டுவெடிப்பில் 4 பேர் உயிரிழந்தனர்.

சமீப காலத்தில் ஹாம்ஸ் நகர பகுதியில் சிரிய அரசு படைகள் முன்னேற்றம் கண்டதற்கு பதிலடியாக இந்த குண்டு வெடிப்பு நடத்தப்பட்டுள்ளது என தெரிவித்தார்.

இதற்கிடையே டமாஸ்கஸ் நகரத்துக்கு தெற்கே அமைந்துள்ள ஷியா பிரிவினரின் புனிதத்தலம் அருகே வெடி பொருட்கள் நிரப்பி நிறுத்தப்பட்டிருந்த வாகனம் ஒன்றை அதிகாரிகள் கண்டுபிடித்தனர். அந்த வாகனம் அழிக்கப்பட்டது. இதனால் பெருத்த சேதம் தவிர்க்கப்பட்டது. (3)

## “நான் இந்தியாவின் மைந்தன்” புத்த மதத்தலைவர் தலாய்லாமா



(பெங்களூர்)

நான் இந்தியாவின் மைந்தன் என்று கருத்தரங்கில் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட புத்தமத தலைவர் தலாய்லாமா தெரிவித்தார்.

அம்பேத்கரின் பிறந்த தினத்தையொட்டி மாநில அளவிலான கருத்தரங்கம் பெங்களூரில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

முதலமைச்சர் சித்தராமையா கருத்தரங்கை தொடங்கி வைத்து உரையாற்றுகையில்,

அம்பேத்கரின் பிறந்த நாளையொட்டி ஜூலை மாதம் சர்வதேச கருத்தரங்குக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இதில் 58 நாடுகளை சேர்ந்த பிரதிநிதிகள் கலந்துகொள்ளவுள்ளனர்.

ஆட்சி அதிகாரம் பணக்காரர்களின் கைகளில் இருக்கக்கூடாது, அது ஒரு முக்கியமான சாவி என்று அம்பேத்கர் கூறுவார்.

நாம் எல்லோரும் வாய்ப்புகள் கிடைக்காமல் வஞ்சிக்கப்பட்டவர்கள். அவர் ஒதுக்கி கொடுத்த வாய்ப்புகளை நாம் சரியாக பயன்படுத்திக்கொள்ள வேண்டும்.

வாய்ப்புகள் கிடைக்காதவர்களுக்கு உதவ வேண்டும். சாதி நடைமுறையை ஒழிக்கும்வரை சமத்துவத்தை ஏற்படுத்த முடியாது. இதற்காக போராடுபவர்களுக்கு அம்பேத்கரின் கொள்கைகள் வழிகாட்டியாக உள்ளன என சித்த ராமையா தெரிவித்தார்.

கருத்தரங்கில் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட புத்தமத தலைவர் தலாய்லாமா உரையாற்றுகையில்,

நான் இந்தியாவின் தொன்மையான ஞானத்தின் தூதர். இந்தியாவின்மைந்தன்என்றே என்னை கருதுகிறேன். சமுதாயத்தில் புரையோடியுள்ள நிலப்பிரபுத்துவ நடைமுறைகளால் மக்கள் சுரண்டப்படும் பிரச்சினை உள்ளது. இது ஒழிக்கப்பட வேண்டும்.

நாம் சகோதரர்களாகவும், சகோதரிகளாகவும் கருதி வாழ்ந்தால் சுரண்டல் என்பது இருக்காது. இன்றைய பிரச்சினைகளுக்கு மூல காரணம் ஒன்றே குலம் என்ற பார்வை இல்லாதது தான்.

பல்வேறு மதங்களின் கொள்கையில் வேற்றுமை இருக்கலாம். ஆனால் எல்லா மதங்களும், மனிதநேயம், கருணை, அகிம்சை ஆகியவற்றை போதிக்கிறது. எந்த மதமும் சாதி பேதங்கள், ஏற்றத்தாழ்வுகளை வலியுறுத்துவது இல்லை. அமைதி, அன்பை வலியுறுத்துகின்றன.

சமுதாயத்தில் வாய்ப்புகள் கிடைக்காமல் ஏமாற்றப்பட்ட மக்கள் தன்னம்பிக்கையுடன் செயலற்பட்டு உயர வேண்டும். வளர்ச்சிக்கு மூல காரணம் கல்வி. சமூக நீதியில் இருந்து ஏமாற்றப்படும் மக்கள் கல்வி பயின்று முன்னேற வேண்டுமென தலாய்லாமா மேலும் தெரிவித்தார். (3)

## சவுதி அரேபியாவை ஏமாற்றி 40 ஆயிரம் டொலர்களை ட்ரம்ப் கறந்துவிட்டார்

## ஈரான் அமைச்சர் குற்றச்சாட்டு

(டெஹ்ரான்)

அரசுமுறைப் பயணமாக சவுதி அரேபியா நாட்டுக்கு சென்ற அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் அந்நாட்டு அரசை ஏமாற்றி 48 ஆயிரம் கோடி அமெரிக்க டொலர்களை கறந்து விட்டதாக ஈரான் அமைச்சர் குற்றம்சாட்டியுள்ளார்.

அமெரிக்காவின் புதிய ஜனாதிபதியாக கடந்த ஜனவரி மாதம் டொனால்ட் ட்ரம்ப் பதவியேற்று கொண்டார். அவருக்கு பல நாடுகளை சேர்ந்த பிரதமர்களும், ஜனாதிபதிகளும் தொலைபேசி மூலம் வாழ்த்து தெரிவித்து இருந்தனர்.

அப்போது தங்கள் நாட்டுக்கு வருகை தருமாறு அழைப்பும் விடுத்திருந்தனர். இதனை ஏற்று முதன்முறை வெளிநாட்டு பயணமாக டொனால்ட் ட்ரம்ப் சவுதி அரேபியா நாட்டின் தலைநகரான றியாத்நகரை சென்றடைந்தார்.

சவுதி மன்னர், இளவரசர்கள் மற்றும் அந்நாட்டின் அமைச்சர்களை சந்தித்து அமெரிக்கா, சவுதி அரேபியா இடையிலான நல்லுறவுகளை பலப்படுத்துவது தொடர்பாக டொனால்ட் ட்ரம்ப் ஆலோசனை நடத்தினார்.

அப்போது இரு நாடுகளுக்கு இடையே பல்வேறு துறைகளில் மிகப்பெரிய ஒப்பந்தங்கள் கையெழுத்தாகின. குறிப்பாக அமெரிக்காவிடம் இருந்து சுமார் 70 ஆயிரம் கோடி ரூபாய் அளவுக்கு இராணுவ தளபாடங்களை வாங்க சவுதி அரேபியா ஒப்பந்தம் செய்துள்ளது.

பின்னர், அந்நாட்டின் பல்வேறு பகுதிகளில் நடைபெற்ற நிகழ்ச்சிகளில் பங்கேற்று பேசிய ட்ரம்ப் தீவிரவாதத்திற்கு எதிராக முஸ்லிம்கள் ஒன்றிணைய வேண்டும் என பேசினார்.

தீவிரவாதத்திற்கு எதிராக நடக்கும் போரில் அமெரிக்காவுக்கு ஆதரவாக அனைத்து இஸ்லாமிய நாடுகளும் கைகோர்க்க வேண்டுமெனவும் அவர் குறிப்பிட்டார்.

இந்நிலையில், அமெரிக்கா மற்றும் சவுதி அரேபியாவின் எதிரி நாடான ஈரான் அரசு அரசுமுறைப் பயணமாக சவுதி அரேபியா நாட்டுக்கு சென்ற அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் அந்நாட்டு அரசை ஏமாற்றி 48 ஆயிரம் கோடி அமெரிக்க டொலர்களை கறந்து விட்டதாக குற்றம் சாட்டியுள்ளது.

இதுதொடர்பாக, ஈரான் நாட்டு வெளியுறவுத்துறை அமைச்சர் முஹம்மது ஜாவெத் ஸரிப் தனது டுவிட்டர் பக்கத்தில் வெளியிட்டுள்ள பதிவில் ஜனநாயகம் மற்றும் நவீனமயம் என்ற பெயரில் சவுதி அரசை ஏமாற்றி 48 ஆயிரம் கோடி டாலர்களை அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் கறந்து விட்டார் என்று குற்றம்சாட்டியுள்ளார்.

ஈரான் ஜனாதிபதி பதவிக்கு சமீபத்தில் நடைபெற்ற தேர்தலில் அந்நாட்டின் முன்னாள் ஜனாதிபதி தொடர்ந்து இரண்டாவது முறை வெற்றிபெற்று ஆட்சியை பிடித்த பின்னர் டொனால்ட் ட்ரம்ப் சவுதி அரேபியாவுக்கு சென்றுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (3)

# கடந்தகால அசம்பாவிதங்கள் மீண்டும் ஏற்படக் கூடாது


## எதிர்க்கட்சித் தலைவர் சம்பந்தன் வலியுறுத்து

(கொழும்பு)

**இனவாதம் காரணமாக அதிகளவு மக்கள் பாதிக்கப்பட்டனர். எனவே கடந்த ஆட்சிக் காலத்தில் ஏற்பட்ட இத்தகைய அசம்பாவிதங்கள் மீண்டும் ஏற்படக்கூடாது என எதிர்க்கட்சித் தலைவர் இரா. சம்பந்தன் வலியுறுத்தினார்.**

எல்லா இனங்களையும், மதங்களையும் சேர்ந்தவர்கள் இந்த யதார்த்தத்தைப் புரிந்து கொள்ள வேண்டும் என்று பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு வலியுறுத்தினார்.

இனவாதம் மற்றும் சமயவாதம் காரணமாக மக்கள் பாதிக்கப்பட்டனர். மீண்டும் இவ்வாறான நிலையை ஏற்படுத்துவதற்கு முயற்சிக்கும் தரப்புக்கு எதிராக கடுமையாக சட்டம் நடைமுறைப் படுத்தப்பட வேண்டுமென்று எதிர்க்கட்சித்தலைவர் ஆர்.சம்பந்தன் வலியுறுத்தினார். (இ-7)



## அமைச்சரவை மாற்றம் முற்றுப்பெறவில்லை

### ஐ.தே.க. அமைச்சர் ஹாசிம் தெரிவிப்பு



(கொழும்பு)

அமைச்சரவை மாற்றம் தொடர்பில் பல்வேறு விமர்சனங்கள் முன்வைக்கப்படுகின்றன.

எனினும் இன்னும் அமைச்சரவை மாற்றம் முடிவு பெறவில்லை.

இன்னும் பல மாற்றங்கள் செய்யப்படும் என ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளரும் அமைச்சருமான கபீர் ஹாசிம் தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகமான சிறிகொத்தாவில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்து கொண்டு கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-7)

## மயானத்திற்கு அருகில் ஒருவர் வெட்டிக்கொலை

வெட்டப்பட்ட நிலையில் உயிருக்கு போராடிக் கொண் டிருந்த ஒருவர் மீட்கப்பட்டு, சிலாபம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் உயிரிழந்துள்ளதாக பல்லம பொலிஸார் தெரிவித்தார்.

ஆராச்சிக்கட்டு பகுதி யைச் சேர்ந்த 29 வயதான ஒருவரே சம்பவத்தில் பலியாகியுள்ளார்.

நேற்று முன்தினம் இரவு 10 மணியளவில் பல்லம பொலிஸ் பிரிவிலுள்ள மயானத்திற்கு அருகில் இருந்த பாழடைந்த இடம் ஒன்றிலேயே இவர் வெட்டப்பட்ட நிலையில் விட்டுச் செல்லப்பட்டுள்ளதாகவும் வெட்டுக் காயங்களுடன் கிடந்த இவரை கண்ட பிரதேச மக்கள் பொலிஸாருக்கு இது பற்றி தெரியப்படுத்தியுள்ளனர்.

இதனையடுத்து, சிலாபம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட அவர், நேற்று அதிகாலை 2 மணியளவில் மரணமடைந்துள்ளதாக தெரியவந்துள்ளது.

இதேவேளை, உயிரிழந்த நபர் கடந்த 23 ஆம் திகதி சிலருடன் மோதலில் ஈடுபட்டுள்ளதாகவும், குறித்த பிரச்சினை இந்தக் கொலைக்கு காரணமாக இருக்கலாமா என்ற கோணத்திலும் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் பல்லம பொலிஸார் சுட்டிக் காட்டியுள்ளனர். (இ-7)


**ஏல விற்பனை**

யா/நல்லூர் ஞானோதய வித்தியாலயத்தின் பாவனைக்கு உதவாத இருபத்து நான்கு (24) பாலர் கதிரைகளிற்கான ஏல விற்பனை 05.06.2017 அன்று முற்பகல் 10 மணிக்கு யா/கல்வியங்காடு இ.த.க.பாடசாலையில் நடைபெறும்.

அதிபர் (9010)

**மணமகள் தேவை**

யாழ். இந்து கௌரவ குடும்பம் 07.05.1981 பிறந்த கிரக பாவம் 32 1/2 சூரியன் செவ்வாய் 10 இல் மிருகசீரிடம் 3ஆம் பாதம் கனடா PR உள்ள மணமகனுக்கு மண மகள் தேவை. (9013)

T.P-077 370 3671

**பயானா பிளாஸ்ரிக் மீள்சுழற்சி**

அனைத்து வகையான வாகனங்கள், மோட்டார் சைக்கிள் மற்றும் உடைந்த பிளாஸ்ரிக் பொருட்கள் 1, 2, 3 வருட கால உத்தரவாதத்துடன் சிறந்த முறையில் ஒட்டித்தரப்படும்.

108, பலாலி வீதி, யாழ்ப்பாணம். (சி-8579) 0212228680, 0775925088

**நல்லூர் ஸ்ரீதேவி வில்லிசை**

**கலைமாமணி**

**Dr.S.S.சர்மா குருஜீ**

82/4 கலட்டி அம்மன் கோவிலடி, வண்ணார்பண்ணை.

077 784 1558 (8168)

**கல்யாணமாலை**


**சர்வதேச திருமண சேவை**

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
| --- | --- |
| பிறப்பு: 1983. இந்து<br>நட்சத்திரம்:ரோகினி<br>கி.பா:20சூரிசெவ் 11 இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை தொழில்:BFAஅரசதொழில்<br>தொ.இ: B/3005 | பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்:ஆயிலியம்<br>கி.பா: 70செவ் 8 இல்<br>உயரம்: 154cm<br>தகைமை/தொழில்: A/L/அரசதொழில்<br>தொ.இ: G/6217 |
| பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்:புனர்பூசம்<br>கி.பா: 56செவ் 8 இல்<br>உயரம்: 5'10"<br>தகைமை/தொழில்:A/L/வியாபாரம்<br>தொ.இ: B/4310 | பிறப்பு: 1990 இந்து<br>நட்சத்திரம்: திருவோணம்<br>கி.பா: 63<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: BSc IT/ பொறியியலாளர்<br>எதிர்பார்ப்பு: சைவபோசனம் அசைவமும் ஏற்கப்படும்<br>தொ.இ: G/6219 |
| பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்:அத்தம்<br>கி.பா: 8<br>உயரம்: 5'10"<br>தகைமை/தொழில்:A/Lலண்டன் PR<br>தொ.இ: B/5524 | பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்:அனுசம்<br>கி.பா: 16<br>தகைமை/தொழில்: பட்டதாரி/ விரிவுரையாளர்<br>தொ.இ: G/6233 |
| பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்:பூசம்<br>கி.பா:19 சூரிசெவ் 11 இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்:A/L/கடை<br>தொ.இ: B/6179 | பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: ஆயிலியம்<br>கி.பா: 59 சூரிசெவ் 10 இல்<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்: BSc, MSc<br>தொ.இ: G/6238 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.

# அரசாங்கம் மீது மக்கள் அதிருப்தி

## மனிதவுரிமை செயற்பாட்டாளர் சுட்டிக்காட்டு



(கொழும்பு)

**நல்லாட்சி என்று கூறும் இந்த அரசாங்கம் தொடர்பில் மக்கள் மத்தியில் அதிருப்தி ஏற்பட்டுள்ளதென மனித உரிமை செயற்பாட்டாளர் காமினி வியான்கொட சுட்டிக்காட்டியுள்ளார்.**


நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை கொழும்பில் நடந்த ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார். இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,


புதிய அரசியல் சாசனமொன்றை உருவாக்குவதற்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் காட்டி வரும் முனைப்பு வரவேற்கப்பட வேண்டியது.

எனினும் சிறுபான்மை சமூகத்தின் மீது இனவாத அடிப்படையில் அண்மைக் காலங்களில் ஏற்படுத்தப்படும் அச்சுறுத்தல்கள் நாட்டில் அமைதியின் மையைத் தோற்றுவிக்கும்.

இவ்வாறான இனவாத அமைப்புக்களின் செயற்பாடே முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ பதவியிழக்க பிரதான காரணமாக அமைந்ததுடன், அவரது இறுதிக் காலப் பகுதியில் முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ உள்ளிட்ட சில தலைவர்கள் சிறுபான்மை சமூகத்தின் மீது இனவாத அடிப்படையில் செயற்பட்டனர்" என்றும் காமினி வியான்கொட மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

## அரசியல் கைதிகளை விடுவிக்கக் கோரி கொழும்பு கோட்டையில் ஆர்ப்பாட்டம்






(கொழும்பு)

அரசியல் கைதிகளை விடுவிக்கக்கோரி கொழும்பு கோட்டை புகையிரத நிலையம் முன்பாக பாரிய ஆர்ப்பாட்டம் ஒன்று நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை முன்னெடுக்கப்பட்டிருந்தது. குறித்த ஆர்ப்பாட்டத்தினை அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய அமைப்பு ஏற்பாடு செய்திருந்தது. (இ-7)

## 'இந்திய ஆசிரியர்கள் தேவையில்லை' நாடாளுமன்றில் வாதப்பிரதிவாதங்கள்

மலையக தோட்டப்பகுதி பாடசாலைகளுக்கு, இந்தியாவிலிருந்து ஆசிரியர்களை அழைத்துவரும் விவகாரம் தொடர்பில் நாடாளுமன்றில் நேற்று முன்தினம் வாதப்பிரதிவாதங்கள் இடம்பெற்றன.

இந்தத் திட்டத்தை கல்வி அமைச்சு கைவிடவேண்டும் என்று, ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் கனக ஹேரத் கோரிக்கை விடுத்தார்.

எனினும், இலங்கைக்கு கிடைக்கும் வளங்களைப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும். அவ்வாறான வளமாகவே இந்த ஆசிரியர் திட்டமும் அமைந்துள்ளது என, கல்வியமைச்சர் அகிலவிராஜ் காரியவசம் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற வாய்மூல விடைக்கான வினாக்கள் நேரத்தின்போதே, மேற்கண்டவாறு வாதப்பிரதிவாதம் இடம்பெற்றது.

தோட்டப்பகுதிப்பாடசாலைகளுக்கு இந்தியாவிலிருந்து 100 ஆசிரியர்கள் வரவழைக்கப்படுவர் என்று, கல்வி இராஜாங்க அமைச்சர் கூறியுள்ளார். இது தோட்டப் பகுதியிலுள்ள கல்வி கற்றவர்களுக்கு இழைக்கப்படும் அநீதியாகும். மலையகத்தில் கல்வி கற்றவர்கள் நிறையப்பேர் உள்ளனர்.

தோட்டப்பகுதியிலுள்ள பட்டதாரிகளை இணைத்துக்கொள்ளலாம். அப்படி இல்லா விட்டால், உயர்தரம்கற்றவர்களுக்குப் பயிற்சி வழங்கப்பட்டு, அவர்களை ஆசிரியர் உதவியாளர்களாக உள்வாங்கலாம். இதனை விடுத்து, இந்திய ஆசிரியர்களை வரவழைப்பதை ஏற்றுக்கொள்ள முடியாது" என, கனக ஹேரத் எம்.பி சுட்டிக்காட்டினார்.

அத்துடன், இந்திய ஆசிரியர்களை அழைத்துவந்தால் அவர்களுக்கு தங்குமிட வசதி வழங்கவேண்டும். இதனால் செலவுகள் அதிகரிக்கும். சிலவேளை, கைச்சாத்திடப்படவுள்ள ,எட்கா உடன்படிக்கையின் ஓர் அம்சமாக இந்த திட்டம் உள்ளதா என்று சந்தேகமாகவுள்ளது" என்றும் அவர் குறிப்பிட்டார்.

இதற்கு பதிலளித்த கல்வியமைச்சர், "தோட்டப்பகுதியிலுள்ளவர்களை ஆசிரியர் உதவியாளர்களாக ஆட்சேர்ப்பு செய்தோம். ஆனாலும், ஆசிரியர் பற்றாக்குறை இன்னும் தீரவில்லை. இது பற்றி கவனம் செலுத்தியுள்ளோம். நாடளாவிய ரீதியில் 16 ஆயிரம் ஆசிரியர் வெற்றிடங்கள் காணப்படுகின்றன.

மேலும், விஞ்ஞான பாடத்துக்கு இங்கு ஆசிரியர்கள் பற்றாக்குறையாக உள்ளனர். எனவே, தோட்டப்புறத்தில் உள்ளவர்களை தெரிவுசெய்து அவர்களுக்கு பயிற்சிகள் வழங்க யோசனை செய்யப்பட்டுள்ளது.

அத்துடன், ஏனைய பிரதேசங்களில் உள்ளவர்கள் தோட்டப்புறங்களில் சென்று சேவையாற்ற விரும்புவது குறைவாக உள்ளது. இதனால்தான் இந்தியாவில் இருந்து ஆசிரியர்களை வரவழைப்பது பற்றி யோசனை செய்யப்பட்டுள்ளது.

அவ்வாறு ஆசிரியர்கள் வரவழைக்கப்பட்டால் அது, இந்திய அரசாங்கத்தால் வழங்கப்படும் உதவியாகவே காணப்படும். அவர்களுக்கான செலவீனங்களை இந்திய அரசாங்கம் பார்த்துக்கொள்ளும்.

இதனால் எமக்கு செலவுகள் ஏற்படப்போவதில்லை. சேவைக் காலம் முடிந்ததும் அவர்கள் திரும்பிச் சென்று விடுவர் என்றார். (இ-7)

## இன்று ஒரு தகவல்

### செய்வதையும் செய்துவிட்டு....

என்னை எதிரே வைத்துக் கொண்டு என் உறவினர் ஒருவர், ஒரு கல்லூரி மாணவனைப் பிடித்து வாங்கு வாங்கிக் கொண்டிருந்தார்.

விடயம் இது தான்; வாங்கிக் கட்டிக் கொண்ட மாணவன் என் நண்பருடைய உதவியால் தான் பட்டப்படிப்பு வரை படித்து முடித்திருக்கின்றான். அவன் ஏழைக் குடும்பத்தைச் சேர்ந்தவன். எனவே எல்லாக் கட்டணங்களையும் இவர் தான் கட்டிப் படிக்க வைத்திருக்கிறார். ஆனால் அவன் சில விடயங்களில் குறை சொல்லும்படி நடந்து கொண்டிருக்கிறான். மனிதருக்குப் பொறுக்கவில்லை . கத்தித் தீர்த்து விட்டார்.

அவர் அமைதியான பிறகு வெகு நேரம் கழித்து இந்தத் தலைப்பைப்பற்றி நானே பேச்செடுத்தேன்

மூன்று வருடம் காட்டிய பொறுமையை நீங்கள் ஏன் ஒரே நிமிடத்தில் இழந்து விட்டீர்கள்? என்று கேட்டேன். பதில் இல்லை தொடர்ந்து சொன்னேன். அந்தப் பையனுக்கு நன்றியுணர்வு இல்லை என்று தெரிந்து கொள்ள உங்களுக்கு மூன்று வருடம் ஆகியிருக்கிறது. சரி போகட்டும் . உங்களிடம் வெளிப்படுத்தாமல் அவனிடம் மீதமிருந்த கொஞ்ச நஞ்ச நன்றியுணர்வும் நீங்கள் கத்திய கத்தலில் பறந்திருக்கும். செய்வதையும் செய்து விட்டு இறுதியில் இப்படிக் கெட்ட பெயர் எடுத்துக் கொண்டு விட்டீர்களே! என்றேன்.

அவன் கெடக்கிறான். நீங்க வேற விடயம் இருந்தாப் பேசுங்க. தொடர்ந்து சூடானார். நானும் அதோடு விட்டு விட்டேன். மறந்தும் போனேன்.

வெகு நாட்களுக்குப் பிறகு என்னிடம் அது பற்றிப் பேசிய அவர், இப்போது நான் நிறைய மாறிவிட்டேன் தெரியுமா? என்றார். என்ன என்றேன். அன்று எனக்கு மனசே சரியில்லை, எனவே நீங்கள் சொன்னது எடுபடவில்லை. பிறகு நீங்கள் கொன்னது தான் சரி என்று பட்டது. அது தர்ன் மாற்றத்துக்குக் காரணம் என்றார்.

உங்கள் நன்மைக்காகவே சென்னேன் என்று அந்த விடயத்திற்கு முற்றுப்புள்ளி கொடுத்தேன்.

ஒருவருக்குப் புதுக் கார் வந்தது. பழைய காரை விற்க விரும்பினார். தம் நண்பர் ஒருவரிடம் கேட்டார். அவர் உதவும் நோக்கத்தில் அந்தப் பழைய காரை வாங்கிக் கொண்டார். நாட்கள் உருண்டன.

பேச்சு வாக்கில், பழைய காரை என் தலையில் கட்டிட்டான் என்று எவரிடமோ இவர் சொல்ல அது உடையவர் காதுகளைப் போய் எட்ட அவர் மீது வைத்திருந்த விசுவாசமும் மதிப்பும் நொடியில் பறந்து விட்டன.

செய்வதையும் செய்து விட்டு இப்படிப் சொல்லிக் காண்பித்ததும் அநாவசியப் பேச்சினாலும் (Loos talks) நாமே நமக்குக் கொடுக்கப்ட்ட உயரங்களை வெட்டி சாய்க்கிறோம். ப்டு பாதாளத்தில் நம்மைப் பற்றிய நல்லெண்ணம் வீழ நாமே காரணமாகி விடுகிறோம்.

அதாவது பிறரால் மறக்க முடியாத உதவிகளைளச் செய்து விட்டு நாம் அதை மறந்து விட வேண்டும். அது தான் நாம் செய்யும் உதவிகளுக்குப் பெருமை சேர்க்கும்.

வீண் பேச்சும் சொல்லிக் காண்பிக்கும் குணமும் வேண்டாம்.

நாம் எந்தப் பிரதிபலனையும் எதிர்பார்க்காமல் இந்த உதவியைச் செய்தேன் என்று தண்டோரா போட்டுக் கொண்டும், ஆனால் உள்ளுக்குள் ஏகப்பட்ட எதிர்பார்ப்பை வைத்துக் கொண்டும் பழகினால் நாம் செய்யும் எந்தப் பெரிய உதவிக்கும் எள்ளின் முனையளவு கூட மதிப்பில்லாமல் போய்விடும்!

**லேனா தமிழ்வாணன்**

# மான்செஸ்டர் தாக்குதலுக்கு இலங்கை கண்டனம்

# பயங்கரவாதத்தை அடியோடு ஒழிப்பதற்கு உலகநாடுகள் முன்னுரிமை வழங்க வேண்டும்

## பிரிட்டன் பிரதமருக்கு அனுப்பிய அனுதாபச் செய்தியில் ஜனாதிபதி சுட்டிக்காட்டு



(கொழும்பு)

ஐக்கிய இராச்சியத்தின் மான்செஸ்டர் நகரில் நடத்தப்பட்ட தற்கொலைத் தாக்குதலுக்கு, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தனது கடும் கண்டனத்தை தெரிவித்துள்ளதுடன், இச் சம்பவத்தில் உயிரிழந்தவர்களுக்கு தனது அனுதாபத்தையும் தெரிவித்துள்ளார்.

"அனைத்து வகையிலுமான பயங்கரவாதத்தை அடியோடு ஒழிப்பதற்கு, உலக நாடுகள் அனைத்தும் முன்னுரிமை வழங்க வேண்டும்" என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பிரித்தானிய பிரதமர் தெரேசா மேவுக்கு அனுப்பியுள்ள அனுதாபச் செய்தியில் மேலும் கூறியுள்ளார்.

இதில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது, "அரசியல் நோக்கங்களுக்காக, நிராயுதபாணிகளான அப்பாவி மக்களைக் கொலை செய்தல் கோழைத்தனமான செயற்பாடாகும். துன்பகரமான சம்பவத்தை எதிர்கொண்டுள்ள பிரித்தானிய அரசாங்கத்துக்கும் அந்நாட்டு மக்களுக்கும், இலங்கை அரசாங்கமும் மக்களும் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறது.

அத்துடன், தாக்குதலில் கொல்லப்பட்டவர்களின் குடும்பத்தவர்களுக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்து கொள்வதுடன், காயமடைந்தோர் விரைவில் குணமடைய வேண்டும்" என, பிரார்த்திப்பதாகவும் அவர் அச்செய்தியில் குறிப்பிட்டுள்ளார். (இ-7)

# முன்னாள் நிதியமைச்சர் ரவிக்கு இந்நாள் நிதியமைச்சர் பாராட்டு



நாம் ஆட்சிப் பொறுப்பேற்றுக் கொள்ளும் போது நாட்டின் பொருளாதார நிலைமை மிகவும் மோசமான நிலையில் காணப்பட்டிருந்தாலும் ரவி கருணாநாயக்கவின் கடின உழைப்பினால் பொருளாதாரத்தில் மாற்றம் ஏற்பட்டுள்ளதாக நிதி அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

அமைச்சுப் பதவிகளில் ஏற்பட்ட மாற்றங்கள் குறித்து ஊடகவியலாளர்களால் கேட்கப்பட்ட கேள்விகளுக்குப் பதிலளிக்கையிலேயே நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில், "புதிய அமைச்சுப் பொறுப்புக்களில் உள்ள அனைத்துச் சவால்களையும் எதிர்நோக்க நான் தயாராக இருக்கின்றேன். முன்னாள் நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க நாட்டின் பொருளாதாரத்தை கடந்த இரண்டு ஆண்டுகளில் வளர்ச்சிப் பாதைக்கு கொண்டு சென்றுள்ளார். எதிர்காலத்தில் எமது அமைச்சினது செயற்பாடுகளை முன்கொண்டு செல்வதற்கு மேலும் பல நடவடிக்கைகளை எடுக்கவுள்ளோம்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவை அமர்வுகளில் இலங்கைக்கு பெரும்பாலான நாடுகள் ஆதரவளித்ததுடன், தற்போது



ஜி.எஸ்.பி.பிளஸ் வரிச் சலுகையும் இலங்கைக்கு கிடைத்துள்ளதால் நாட்டின் அபிவிருத்திப் பணிகளை மேலும் திறனுடன் முன்னெடுத்துச் செல்ல முடியும்" என அமைச்சர் மங்கள சமரவீர மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

## களிமண் சிற்பக் கண்காட்சியும் சான்றிதழ் வழங்கும் வைபவமும்

திருமறைக் கலாமன்றத்தின் கலைத்தூது அழகியல் கல்லூரியினால் கடந்த ஓராண்டு காலமாக கலைத்தூது கலாமுற்றம் - ஓவியக் கூடத்தில் நடத்தப்பட்டுவந்த களிமண் சிற்பச் சான்றிதழ் கற்கை நெறியின் நிறைவு நிகழ்வுகள் எதிர்வரும் 27,28 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளன.

27ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு களிமண் சிற்பக் கற்கை நெறியை நிறைவு செய்யும் மாணவர் களின் சிற்பக் கண்காட்சி இல 15,றக்கா வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள ஓவியக்கூடத்தில் ஆரம்பித்து வைக்கப்படும். இந்நிகழ்வில் யாழ்.பல்கலைக் கழக கலைப்பீடாதிபதி கலா நிதி.கருணாகரன் சுதாகர் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு கண்காட்சியை திறந்து வைப்பார்.

தொடர்ந்து 28 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 5 மணிக்கு களிமண் சிற்பக் கற்கைநெறியை நிறைவு செய்யும் மாணவர்களுக்கான சான்றிதழ் வழங்கும்வைபவமும்கலைநிகழ்வுகளும் இல. 286, பிரதான வீதி, யாழ்ப்பாணத் தில் அமைந்துள்ள கலைத் தூது கலையகத்தில் இடம் பெறும்.

யாழ்.மறைமாவட்ட ஆயர் பேரருள் யஸ்ரின் பேனாட் ஞானப்பிரகாசம் ஆண்டகை தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.இந்தியத் துணைத்தூதர் ஸ்ரீமான்.ஆ.நடராஜனும் சிறப்பு விருந்தினராக யாழ். பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தரும் வாழ்நாள் பேராசிரியருமான பொ.பாலசுந்தரம்பிள்ளையும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.இந்நிகழ்வுகளில் ஆர்வம் உள்ள அனைவரையும் பங்கு பற்றி சிறப்பிக்குமாறு திருமறைக்கலாமன்றம்அழைப்பு விடுத்துள்ளது. (இ-3)

# முஸ்லிம் மக்கள் பொறுமை இழந்தால் கடும் விளைவு

## ஷிப்லி பாரூக் எச்சரிக்கை

(கொழும்பு)

முஸ்லிம்மக்கள் பொறுமை இழந்தால், இலங்கை கடுமையான பிரதிபலன்களை எதிர்நோக்க நேரிடும் என கிழக்கு மாகாண சபை உறுப்பினர் ஷிப்லி பாரூக் தெரிவித்துள்ளார்.

மாகாண சபையின் மாதாந்த கூட்டத்தில் பேசும் போதே அவர் இதனை கூறியுள்ளார்.

நாட்டில் நடக்கும் இனவாத செயல்கள், நாட்டில் மீண்டும் இரத்தம் சிந்தலுக்கு வழிவகுக்கும். பெரும்பான்மையான சிங்கள மக்கள் இனவாதத்தை ஏற்றுக் கொள்வதில்லை.

நாட்டில் வாழும் சிங்கள மற்றும் தமிழ் மக்கள் மீண்டும் பல பிரச்சினைகளை எதிர்நோக்கி வருகின்றனர்.

நிலவும் அரசியல் மற்றும் சர்வதேச அழுத்தங்களே இதற்குக் காரணம். மகிந்த ராஜபக்ஷவின் தோல்விக்கு பின்னர் இதனை காணக்கூடியதாக இருக்கின்றது.

இரத்தம் சிந்தல் மற்றும் போரின் காயம் இன்னும் குணமடையாத சந்தர்ப்பத்திலேயே மீண்டும் இனவாத செயற்பாடுகள் ஏற்பட்டுள்ளன.

நல்லாட்சி அரசாங்கம் தொடர்பில் பெரிய நம்பிக்கை உருவாகியுள்ள சூழ்நிலையில், அரசாங்கம் இனவாத சக்திகள் தலை தூக்க இடமளிக்காது அவற்றை அடக்க வேண்டும்.

இந்நிலையில், நாட்டில் சட்டத்தையும் அமைதியையும் பாதுகாக்க வேண்டும் எனவும் ஷிப்லி பாரூக் மேலும் வலியுறுத்தினார். (இ-7)

# வல்லப்பட்டையுடன் சிக்கிய சீனப்பெண்

(கொழும்பு)


சட்டவிரோதமாக ஒரு தொகை வல்லப்பட்டைகளை நாட்டுக்கு கொண்டுவர முற்பட்ட வெளிநாட்டுப் பெண் ஒருவர் நேற்றுக்காலை கைது செய்யப்பட்டுள்ளார்.

கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து கைதான இவர், சீனாவைச் சேர்ந்தவர்.

சந்தேகநபர் வசம் இருந்து 12 இலட்சம் ரூபா பெறுமதியான வல்லப்பட்டைகள் மீட்கப்பட்டுள்ளதாக பிரதி சுங்கப் பணிப்பாளர் பராகிரம பஸ்நாயக்க தெரிவித்தார். (இ-7)

# யாழ். நகரம் மூலோபாய நகரமாக மாற்றமடையும்

## அமைச்சர் சம்பிக்க தெரிவிப்பு



(கொழும்பு)

யாழ்ப்பாணத்தினை இவ்வருட இறுதிக்குள் வவுனியா மற்றும் மன்னார் மாவட்டங்களை இணைத்து மூலோபாய நகரமாக மாற்றுவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என பெரு நகர அபிவிருத்தி அமைச்சர் சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

நகர அபிவிருத்திகள் தொடர்பாக நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார். இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

யாழ்ப்பாணத்தினை மூலோபாய நகரமாக மாற்றி அபிவிருத்தியடையச் செய்வதே எமது இலக்காகும். இதற்கு பொதுமக்களின் பிரதிநிதிகள் மற்றும் புத்திஜீவிகளின் கருத்துக்களை அறியும் நடவடிக்கைகளை எமது அமைச்சினது பிரதிநிதிகள் ஆரம்பித்துள்ளனர்.

"யுத்தகாலத்தில் பெருமளவான மக்கள் யாழ்ப்பாணத்தினை விட்டு வெளியேறிச் சென்றதால் யாழ்ப்பாணம் பொருளாதார ரீதியில் பாரிய பின்னடைவைச் சந்தித்தது. எனினும் தற்போது வடக்கின் அபிவிருத்திச் செயற்பாடுகளில் முன்னேற்ற நிலைமைகள் காணப்படுவதால் விவசாயம், சிறுகைத்தொழில் போன்ற துறைகளில் முன்னேற்றம் காணப்படுகின்றன" என அமைச்சர் சம்பிக்க ரணவக்க மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

# கால் நடைகளை கட்டி வளர்க்கவும் இல்லையேல் கைப்பற்றப்படும்

(யாழ்ப்பாணம்)

ஊர்காவற்றுறை பிரதேச சபையானது 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 66 ஆம் பிரிவுக்கு அமைவாக நடப்பாண்டிலும் பிரதேச சபையின் எல்லைக்குள் கட்டாக்காலிகளாக திரியும் மாடுகள், ஆடுகளை கைப்பற்றுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் எனவே மாடுகள்,ஆடுகள் வளர்ப்போர் அவற்றை கட்டி வளர்க்குமாறும் தவறும் பட்சத்தில் அவை பிரதேச சபையினால் கைப்பற்றப்படும் எனவும் அறியத்தரப்பட்டுள்ளது. (இ-3)

# நல்லிணக்கத்தை சீர்குலைக்க முயற்சிக்கும் சக்திகளுக்கு எதிராக கடும் நடவடிக்கை

## அமைச்சரவை முக்கிய தீர்மானம்

இனங்களுக்கிடையில் பதற்றத்தை ஏற்படுத்தி நாட்டில் நல்லிணக்கத்தைச் சீர்குலைப்பதற்கு முயற்சி செய்யும் சக்திகளுக்கு எதிராக சட்ட ரீதியாக கடும் நடவடிக்கைகளை எடுப்பதற்கு அமைச்சரவை தீர்மானித்துள்ளது.

நேற்று முன்தினம் காலை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் நடந்த அமைச்சரவைக் கூட்டத்திலேயே இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய சமூகங்களுக்கிடையில் பதற்றத்தை ஏற்படுத்த முனையும் சக்திகள் குறித்து விழிப்பாக இருக்கும் படியும், அவர்களுக்கு எதிராக சட்டத்தை கடுமையாக நடைமுறைப்படுத்தும் படியும் அனைத்து பொலிஸ் நிலையங்களுக்கும் அரசாங்கம் உத்தரவிட்டுள்ளது.

இதுகுறித்து இணை அமைச்சரவைப் பேச்சாளர் கயந்த கருணாதிலக ஊடகங்களுக்கு தகவல் வெளியிடுகையில்,

"இனரீதியான பதற்றத்தை ஏற்படுத்துவதற்கான வாய்ப்புக்காக நாட்டின் அனைத்துப் பகுதிகளிலும் உள்ள அனைத்து இனங்களிலும் உள்ள கடும்போக்காளர்கள் காத்துக் கொண் டிருக்கின்றனர். இந்த அரசாங்கத்தினால் வழங்கப்பட்டுள்ள சுதந்திரத்தை அவர்கள் தமது மறைமுக நோக்கங்களுக்காக பயன்படுத்துகின்றனர்.

ஆனால், எந்தவொரு கட்சி அல்லது குழுவினதும் தடையுமின்றி ஒவ்வொரு குடிமகனினதும் புதிய சுதந்திரத்தை உறுதிப்படுத்துவதில் அரசாங்கம் உறுதியாக இருக்கிறது. இன நல்லிணக்கத்தையும் சட்டம் ஒழுங்கையும் பாதுகாப்பதற்காக, சட்டத்தை நடைமுறைப்படுத்தும் அதிகாரிகள் இன்னும் தீவிரமாக செயற்படுவார்கள் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (இ-7)

# இரட்டை அர்த்தப் புகழ்ச்சி எனக்கு அச்சமளிக்கின்றது

## மங்கள தெரிவிப்பு



உங்களுடைய இரட்டை அர்த்தப் புகழ்ச்சியானது எனக்கு அச்சமளிப்பதாக உள்ளது என மாத்தறை மாவட்ட எம்.பி. டலஸ் அழகப் பெருமவை பார்த்து நிதி மற்றும் ஊடகத் துறை அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்தார்.


பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை வாய்மூல விடைக்கான கேள்வி நேரத்தின் போது நிதி அமைச்சரிடத்தில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் மாத்தறை மாவட்ட கூட்டு எதிரணி ஆதரவு பாராளுமன்ற உறுப்பினர் டலஸ் அழகப்பெரும வினாவொன்றைத் தொடுத்திருந்தார்.

இச்சமயத்தில், நிதி மற்றும் ஊடக அமைச்சராக புதிதாக பதவிப்பிரமாணம் செய்துகொண்டுள்ள அமைச்சர் மங்கள சமரவீர தனது ஆசனத்திலிருந்து எழுந்து, நான் நிதி அமைச்சைப் பொறுப்பெடுத்த பின்னர் மாத்தறை மாவட்டத்தைச் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் என்னிடத்தில் முதலாவதாக கேள்வி கேட்பது எனக்கு மகிழ்ச்சியளிக்கின்றது என்றாலும் இரட்டை அர்த்தப் புகழ்ச்சி எனக்கு அச்சமளிக்கின்றது என்றார். (இ-7)

# அமைச்சரவை மாற்றம் குறித்து விமர்சிக்க வேண்டியதில்லை

(கொழும்பு)

மைத்திரி - ரணில் தலைமையிலான நல்லாட்சி அரசாங்கத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ள புதிய அமைச்சரவை மாற்றம் குறித்து விமர்சிப்பதற்கு எந்தவொரு அடிப்படையும் இல்லை என நவசம சமாஜ கட்சி தெரிவித்துள்ளது.




அமைச்சுப் பொறுப்புக்கள் தகுதியானவர்களின் கைகளிலேயே வழங்கப்பட்டுள்ளதாக நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடக சந்திப்பில் கட்சியின் தலைவர் விக்கிரமபாகு கருணாரத்ன மேற்கண்டவாறு சுட்டிக் காட்டியுள்ளார். இதேவேளை கொழும்பில் நடைபெற்ற வழக்கு விசாரணையொன்றின் பின்னர் கருத்து வெளியிட்ட கூட்டு எதிர்க்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் பிரசன்ன ரணதுங்க, புதிய அமைச்சரவை மறுசீரமைப்பு மக்களுக்கு சார்பானது அல்லவென குறிப்பிட்டார். (இ-7)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1083

கேமா




கண்ணன்





வசந்தா




சரண்யா




நீருஜா




சந்துரு




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# முக்கியமான ஆவணங்களை

# புலி அழித்தது; சுனாமி சுருட்டியது

## அமைச்சர் சாகல சமாளிப்பு




திருகோணமலை மற்றும் புத்தளம் மாவட்டங்களில் உள்ள பொலிஸ் நிலையங்கள் மீது மேற்கொள்ளப்பட்ட பயங்கரவாதத் தாக்குதல் காரணமாக ஏற்பட்ட சேத விபரங்களை, சரியான முறையில் அடையாளம் காண முடியவில்லை. அதற்கான ஆவணங்கள் சுனாமி மற்றும் விடுதலை புலிகளின் தாக்குதலினால் அழிவடைந்துவிட்டன" என்று, சட்டமும் ஒழுங்கும் மற்றும் தென் மாகாண அபிவிருத்தி அமைச்சர் சாகல ரத்நாயக்க தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று முன் தினம் இடம் பெற்ற வாய்மூல விடைக்கான வினாக்கள் நேரத்தின் போது, நாடாளுமன்ற உறுப்பினர் பத்ம உதயசாந்த எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அவர் இதனைக் கூறினார்.

திருகோணமலை, புத்தளம் ஆகிய மாவட்டங்களில், 1983ஆம் ஆண்டு முதல், 2009ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில், தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பினால் அழிக்கப்பட்ட பொலிஸ் நிலையங்கள், கொல்லப்பட்ட பொலிஸ் உத்தியோகத்தர் மற்றும் அழிவுக்குள்ளாக்கப்பட்ட சொத்துகளின் விபரங்கள் தொடர்பில் சபைக்குத் தெரிவிக்குமாறு உதயசாந்த எம்.பி கேள்வியெழுப்பினார்.

அதற்கு பதிலளித்த அமைச்சர் சாகல ரத்நாயக்க, "குறித்த காலப்பகுதி தொடர்பான தகவல்கள் அடங்கிய ஆவணங்கள், 2004ஆம் ஆண்டு ஏற்பட்ட சுனாமி அனர்த்தம் மற்றும் பயங்கரவாதத் தாக்குதல் காரணமாக அழிந்துவிட்டன. அதனால் முழுமையான விபரங்களைப் பெற்றுக்கொள்ள முடியவில்லை. இது குறித்து மேலும் ஆராய்ந்து மேலதிக விபரங்களை தெரிவிக்கின்றேன்" என்றார்.

இதன்போது, குறுக்கிட்ட பத்ம உதயசாந்த எம்.பி, "அமைச்சரே நீங்கள் வழமையாக இதனைத்தான் சொல்கின்றீர்கள். 30 வருடங்களாக இந்த நாட்டை ஆட்டுவித்த பயங்கரவாத நடவடிக்கையின்போது, நாட்டில் ஏற்பட்ட இழப்புகள் குறித்து சரியான தகவல்களைப் பெற்று வைத்திருப்பது அவசியம். இதற்கு ஏதாவதொரு நடைமுறையை நீங்கள் பின் பற்றி விபரங்களைப்பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுப்பீர்களா?" என்றார். அதற்கு பதிலளித்த சட்ட அமைச்சர், "இது குறித்து எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்க முடியும்" என்றார். (இ-7)



யாழ்.நல்லூர் மங்கையர்க்கரசி வித்தியாலயத்தின் வருடாந்த பரிசளிப்புவிழாவின் போது இராஜலிங்கம் என்பவர் 50 இடைநிலை மாணவருக்கான 'THE BABY ENGLISH GRAMMER' ஆங்கில நூல்களை அன்பளிப்புச் செய்தமையைப் படத்தில் காணலாம் இவற்றின் பெறுமதி இரண்டு இலட்சம் ரூபா என்பது குறிப்பிடத்தக்கது.

## கண்காட்சியும் நூல் வெளியீடும்




(லண்டன்)

தமிழர் இனவழிப்பின் வரலாற்றை ஓவியங்களாக்கி பாதுகாக்கும் நோக்கில் ஓவிய கண்காட்சி ஒன்று கடந்த 13 ஆம் திகதியில் இருந்து 21 ஆம் திகதி வரை பிரித்தானியாவில் உள்ள உலகத் தமிழர் வரலாற்று மைய வளாக மண்டபத்தில் நடைபெற்றது.

தமிழர் கல்வி கலை பண்பாட்டு நடுவத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்த கண்காட்சியில் புகழ்பெற்ற ஓவியரான புகழேந்தியின் ஓவியங்கள் உட்பட 200 க்கு மேற்பட்ட ஓவியங்கள் காட்சிப்படுத்தப்பட்டன.

கண்காட்சியின் இறுதி நாள் நிகழ்வில் ஓவியக் கண்காட்சியில் பங்குபற்றிய அனைவருக்கும், புகழ்பெற்ற ஓவியரான புகழேந்தியால் சான்றிதழ்களும், நினைவுப்பரிசில்களும் வழங்கி கௌரவிக்கப்பட்டதுடன் ஓவியர் புகழேந்தியின் இரு நூல்களான "நானும் எனது நிறமும்", "தமிழீழம்" எனும் ஆங்கில நூலும் வெளியிட்டு வைக்கப்பட்டது.

இதில் ஓவியரான புகழேந்தி நூலினை வெளியிட்டு வைக்க புலம்பெயர் சட்டத்தரணியான குலசேகரம் கீதர்த்தனன் சிறப்பு பிரதியை பெற்றுக்கொண்டார். (இ-9)

## ஜனாதிபதியைப் புகழ்ந்த ஹர்ஷ



ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் விமான பயணம் தொடர்பான புகைப்படம் ஒன்று சமூக வலைத்தளங்களில் வெளியாகி பிரபல்யம் அடைந்துள்ளது.

ஜனாதிபதி மைத்திரி, சிங்கப்பூரில் இருந்து அவுஸ்திரேலியா செல்லும் போது எடுக்கப்பட்ட புகைப்படம் ஒன்றே பேஸ்புக் பக்கத்தில் பதிவிடப்பட்டுள்ளது.

பிரதியமைச்சர் ஹர்ஷ டி சில்வாவினால் இந்த புகைப்படம் எடுக்கப்பட்டுள்ள நிலையில் அவர் தனது பேஸ்புக் பக்கத்தில் பதிவொன்றை யிட்டு இந்த புகைப்படத்தை வெளியிட்டிருந்தார்.

அந்த பதிவில், "நான் சிங்கப்பூரில் இருந்து அவுஸ்திரேலியா செல்லும் வர்த்தக விமானத்தில் இந்த புகைப் படத்தை எடுத்தேன்.

இதற்கு முன்னர் அறியாத பயணிக்கு அடுத்தபடியாக, வியாபார வகுப்பில் இலங்கை ஜனாதிபதி அமர்ந்துள்ளார். நான் உண்மையாக நல்ல விடயத்தை உணர்ந்தேன். நான் பிரதமருடன் பலமுறை பயணம் செய்துள்ளேன். அவரும் அவரது மனைவி மைத்திரியும் இதே போன்ற எளிய முறையில் பயணித்துள்ளனர்.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தனது வெளிநாட்டு பயணங்களை மேற்கொண்ட போது, இலங்கை விமானப்படையின் கட்டளைத் தளபதிகள் ஈடுபடுத்தப்பட்டார்கள் என்பதை நினைவுபடுத்துகிறேன்.

பல முறையில் மகிந்தவின் பயணங்களுக்கு அவரது மைத்துனரினால் முழுமையான விமானங்கள் வழங்கப்பட்டதனை காண முடிந்தன என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

## அமைச்சரவை மாற்றத்தை வரவேற்கும் அமைச்சர்கள்

புதிய அமைச்சரவை மாற்றத்திற்கு அமைய அமைச்சரவை அந்தஸ்துள்ள ஒன்பது அமைச்சுப் பதவிகளையும் ஒரு இராஜாங்க அமைச்சுப் பதவியையும் பொறுப்பேற்ற அமைச்சர்கள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார்கள்.

புதிய எதிர்பார்ப்புக்களுடன் நாட்டை முன்னேற்றிச் செல்லும் நோக்கில் அமைச்சரவையில் மாற்றங்களை மேற்கொண்டதாக ஜனாதிப்தி இந்த நிகழ்வின் போது தெரிவித்தார். நாட்டின் அபிவிருத்திக்காக திடசங்கற்பம் பூணுமாறு அமைச்சுப் பதவிகளைப் பொறுப்பேற்ற சகலரிடமும் அவர் இதன்போது கோரிக்கை விடுத்தார். மக்களின் கருத்தையும் நாட்டின் தேவைகளையும் கருத்திற் கொண்டு அமைச்சரவையை மாற்றியமை குறித்து அமைச்சர்கள் வரவேற்றுப் பேசினார்கள்.


**அமைச்சர் டபிள்யூ.டீ. ஜே.செனவரத்ன கருத்து வெளியிடுகையில்,**




சப்ரகமுவ மாகாண அபிவிருத்தியை முன்னெடுக்க தமக்கு வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது என்றார். இதுவரை கிடைக்காத இத்தகைய வாய்ப்பின் மூலம் தாம் மகிழ்ச்சியடைவதாக அமைச்சர் கூறினார்.

**அமைச்சர் கயந்த கருணாதிலக தெரிவிக்கையில்,**

நாட்டுக்கும் மக்களுக்கும் சிறப்பாக சேவையாற்றக் கூடிய காணி அமைச்சு தமக்குக் கிடைத்துள்ளது. தேர்தல் கால உறுதி மொழிகளை நிறைவேற்றும் வகையில் காணி வசதிகள் இல்லாத மக்களுக்கு காணி உறுதிகளைப் பெற்றுக் கொடுக்கப் போவதாக அவர் உறுதியளித்தார்.



**அமைச்சர் ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய கருத்து வெளியிடுகையில்,**



ஜனாதிபதி, பிரதமர் ஆகியோரின் புதிய தொலை நோக்கிற்கு அமைவாக நாட்டை வழிநடத்திச் செல்ல அமைச்சரவை மாற்றம் வாய்ப்பளிக்கிறது என்றார்.



**அமைச்சர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா கருத்து வெளியிடுகையில்,**

இந்த அமைச்சரவை மாற்றம் எதிர்கால அபிவிருத்திக்கு அடித்தளம் இடும் என அமைச்சர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா குறிப்பிட்டார்.



**பிரதியமைச்சர் கருணரத்ன பரண விதாரண கூறுகையில்,**

இந்த மாற்றங்கள் அபிவிருத்தி வேலைத்திட்டத்தை வலுவாக முன்னெடுத்துச் செல்ல உதவும் என்று தெரிவித்தார்.

அமைச்சரவை மாற்றங்களுக்கு அமைவாக புதிய அமைச்சுப் பதவிகள் பற்றிய விபரங்கள் அடுத்து வரும் ஐந்து நாட்களுக்குள் வர்த்தமானி அறிவித்தலாக வெளியிடப்படும். இதற்கு அமைய பல அமைச்சுப்பதவிகளில் மாற்றங்கள் இடம்பெறவுள்ளன.

அமைச்சரவையில் ஏற்பட்ட மாற்றங்களைத் தொடர்ந்து தமது இராஜாங்க மற்றும் பிரதி அமைச்சுப் பதவிகளில் மாற்றத்தை எதிர்பார்க்கும் பாராளுமன்ற உறுப்பினர்கள் ஐந்து நாட்களுக்குள் தமது கோரிக்கைகளைச் சமர்ப்பிக்க முடியும்.

இவர்கள் பிரதமர் அலுவலகத்தில் தகவல்களைக் கூற வாய்ப்பளிக்கப்பட்டுள்ளதாக அரசாங்கம் அறிவித்துள்ளது. செயற்றிறனை அதிகரிப்பதும் இராஜாங்க அமைச்சர்கள் மற்றும் பிரதியமைச்சர்கள் விரும்பும் அமைச்சுப் பதவிகளுக்கு அவர்களை நியமிப்பதும் இதன் நோக்கமாகும் என்றார். (இ-7)

## போர்த்தளபாடங்களை வாங்கும் திட்டமில்லை

### இலங்கை இராணுவம் நிராகரிப்பு

பெலாரஸ் நாட்டில் இருந்து இராணுவம் ஆயு தங்களை வாங்குவதற்கு முடிவு எடுக்கப்படவில்லை என்று இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் ரொஷான் செனவிரத்ன தெரிவித்துள்ளார்.

பெலாரஸ் நாட்டில் நடந்த MILEX 2017 என்ற இராணுவ தளபாடக் கண்காட்சியில், பங்கேற்ற இராணுவ அதிகாரியான மேஜர் ஜெனரல் ருவான் குலதுங்க, பெலாரஸ் நாட்டில் இருந்து ஆயுத தளபாடங்களை வாங்குவதில் ஆர்வம் கொண்டுள்ளதாக கூறியிருந்தார்.

"நாங்கள் பிரதானமாக, எமது கவசவாகனங்களை திருத்தியமைத்து, ஆயுத தளபாடங்களை நவீன மயப்படுத்துவதில் ஆர்வம் கொண்டுள்ளோம்.

அத்துடன் புதிய வகையான கருவிகள் மற்றும் தொழில் நுட்பங்களையும்



வாங்குவது குறித்தும் கவனம் செலுத்தியுள்ளோம்" என்றும் அவர் குறிப்பிட்டிருந்தார்.

இதுகுறித்து கருத்து வெளியிட்டுள்ள இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் ரொஷான் செனவிரத்ன,

பெலாரஸ் நாட்டில் இருந்து ஆயுத தளபாடங்களை வாங்கும்திட்டம்ஏதும்இல்லை என்று கூறியுள்ளார். (இ-7)

# கலைத் தரிசனம்



1958.07.02 ஆம் திகதி கற்சிலைமடுவில் பிறந்த இவர் ஒரு சிறந்த நடிகராக, சிறந்த இசை நாடகக் கலைஞராக, சிறந்த வில்லிசைக் கலைஞராக, பேச்சாளராக, அறிவிப்பாளராக, நிகழ்ச்சித் தொகுப்பாளர் எனப் பல்துறைகளில் சிறந்து விளங்குகின்றார்.

கலைக்குடும்பத்தில் பிறந்த இவர் கற்சிலைமடு அ.த.க. பாடசாலையில் கல்வி கற்ற போது பாவோதல், பேச்சு, சொல்வதெழுதல்,கட்டுரை ஆகிய போட்டிகளில் பங்குபற்றி வெற்றியீட்டியிருந்தார். அக் காலப்பகுதியில் இவரின் வெற்றிகளைப் பாராட்டியும் ஊக்கப்படுத்தியும் இவரின் கலைத்துறைக்கு ஓய்வு நிலை கோட்டக் கல்விப் பணிப்பாளர் சதாசிவம் தில்லையம்பலம் அவர்கள் அத்திபாரம் இட்டுக் கொடுத்தார்.

இவரின் கலை வரலாற்றில் பண்டாரவன்னியன் நாடகம் இவருக்கு பெரும் புகழை ஈட்டிக் கொடுத்தது. 2016 இல் பண்டாரவன்னியன் விருதினையும் இதே ஆண்டில் முல்லை கலைக்கோ விருதினையும் பெற்றார். முல்லை. மாவட்டக் கூட்டுறவு நிறுவனத்தின் பொது முகாமையாளராக விளங்கும் கலைஞர் சி.வேதவனம் அவர்கள் தன்னைப் பற்றியும் தன் கலைப்பணி பற்றியும் வலம்புரிக்கு வழங்கிய கருத்துக்களை இங்கு தருகின்றோம்.



## மூத்த கலைஞர் சின்னத்துரை வேதவனம்

### அவர்களுடனான சந்திப்பு

◆ **தாங்கள் எவ்வாறு கலைத் துறையில் கால் பதித்தீர்கள்?**

எனது பெற்றோர் கலைத் துறையில் அதிக ஈடுபாடு கொண்டவர்கள். எனது தந்தையார் சிறந்த நாட்டுக் கூத்துக் கலைஞர். எனது தாயாரின் தந்தையாரை பாட்டுக்கார தம்பு என்றே அழைப்பார்கள்.

சிறந்த பாடகர் அதேபோன்று எனது தாய் மாமனார் த.கதிரவேலு அவர்களும் சிறந்த ஓர் இசை நாடகக் கலைஞர். இவ்வாறு குடும்பத்தில் கலைத் துறைக்கான ஆற்றல்கள் இருந்து வந்த தன் காரணத்தினால் நானும் சிறு வயதிலிருந்தே பாடசாலைக் காலத்தில் பாவோதல், பேச்சு, சொல்வதெழுதல், கட்டுரை ஆகிய போட்டிகளில் பங்குகொள்ளும் வாய்ப்புக் கிடைத்தது.

அக் காலப்பகுதியில் எனக்கு கல்வி கற்பித்த அதிபரும், ஓய்வு நிலை கோட்டக் கல்விப் பணிப்பாளருமான திரு.ச.தில்லையம்பலம் அவர்களே எனது கலைத் துறைக்கு அத்திபாரமிட்டார்.

இவ்வாறான ஒருவரின் சிறந்த வழிநடத்தலின் காரணமா கவே நான் இன்று ஒரு சிறந்த நடிகராக, சிறந்த இசை நாடகக் கலைஞராக, சிறந்த வில்லிசைக் கலைஞனாக, ஒரு பேச்சாளனாக, அறிவிப்பாளராக, நிகழ்ச்சித் தொகுப்பாளராக கலைத்துறையில் கால் பதித்த தற்கு காரணமாக இருந்தது.

◆ **ஆரம்பகாலத்தில் தாங்கள் நடித்த நாடகங்கள் பற்றி?**

பாடசாலையில் கல்வி கற்ற காலத்திலிருந்தே நாடகத்தில் நடிக்க ஆரம்பித்துவிட்டேன். பாடசாலையில் அரங்கேற்றிய நாடகங்களில் நடித் துள்ளேன்.

ஓய்வுபெற்ற அதிபர் வலைஞர் மடம் யோ.தாவீது அவர்களின் எழுத்துருவாக்கத்தில் உருவான "ஒடியற்கூழ்" என்ற நாடகம் எனது மூத்த ஆசானாகிய மதிப்பிற்குரிய க.தில்லையம்பலம் அவர்களால் நெறியாள்கை செய்யப்பட்டு மேடையேற்றப்பட்டு நல்ல வரவேற்பை பெற்றிருந்தது.

சிறுவயதிலிருந்தே காத்தவராயன் சிந்துநடைக்கூத்தில் அமரத்துவம் அடைந்த அண்ணாவியார் அமரர் செல்லையா அவர்களின் நெறியாள்கையில் ஆதிகாத்தான் பாத்திரத்தில் பல தடவை பாத்திரமேற்று நடித்துள்ளேன்.

அதேபோன்று அமரத்துவம் அடைந்த சிலாவத்தை கோவலன் கூத்து அண்ணாவியார் அமரர் வைத்திலிங்கம் அவர்களின் நெறியாள்கையில் தட்டான் பாத்திரத்தில் நடித்துள்ளேன்.

1989 காலப்பகுதி யில் அமரத்துவம் அடைந்த மூத்த கலைஞர் அமரர் இ.ரா.விஜயரட்ணம் அவர்களின் நெறியாள்கையில் தங்கப் பதக்கம் சமூக நாடகத்தில் பிரதான பாத்திரமான வைத்தியர் பாத்திரமேற்றும் அரிச்சந்திர மயான காண்டத்தில் சத்தியகீர்த்தியாகவும் நடித்துள்ளேன்.

அத்துடன் பாடசாலைக் காலத்தில் கற்சிலைமடு அ.த.க.பாடசாலையிலும் தொடர்ந்து ஒட்டுசுட்டான் மகா வித்தியாலயத்திலும் கல்வி கற்கும் போது பல வகையான நாடகங்களில் பங்கேற்று நடித்துள்ளேன்.

◆ **உங்களுடைய கலையுலக வாழ்க்கையில் மறக்க முடியாதவை?**

எனது கலையுலக வாழ்வில் மறக்க முடியாத நிகழ்வுகள் நிறையவே உண்டு. எல்லாவற்றையும் குறிப்பிட்டுச் சொல்ல இவ்விடம் போதாது. இருப்பினும் ஒரு விடயத்தை சுருக்கமாகச் சொல்கிறேன்.

நான் சிறுவயதில் கல்வி கற்கும் போதே எனது இலட்சியமாக வானொலி அறிவிப்பாளராக வர வேண்டும் என்பதாகவே இருந்தது.

இந்நிலையில் படிப்பை முடித்து விட்டு வீட்டில் இருந்த போது இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் பகுதிநேர அறிவிப்பாளருக்கு விளம்பரம் கோரப்பட்டிருந்தது.

அப்போது இன்று மூத்த ஊடகவியலாளராகவும் புகழ்பூத்த வரலாற்று ஆய்வாளராகவும் திகழும் மதிப்பிற்குரிய அருணா செல்லத்துரை அவர்கள் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் அறிவிப்பாளராகவும் நிகழ்ச்சி தயாரிப்பாளராகவும் பணியாற்றிக் கொண்டிருந்தார்.

இப்பதவி வெற்றிடத்திற்கு நானும் விண்ணப்பித்திருந்தேன். கொழும்பு செல்லக்கூடிய நிலையில் நான் இல்லை. கொழும்பே தெரியாது. இந்நிலையில் எனக்கு கல்வி கற்பித்த எனது மூத்த ஆசானாகிய மதிப்பிற்குரிய திரு.சதாசிவம் தில்லையம்பலம் அவர்களே நேர்முகத் தேர்வுக்காக என்னை கொழும்புக்கு அழைத்துச் சென்றார்.

மூத்த அறிவிப்பாளர் அருணா செல்லத்துரை அவர்களுடைய தொடர்பும் கிடைக்கப்பெற்றது. நேர்முகத் தேர்வுக்கு சமுகமளித்து நேர்முக அறையில் நேரடியாக அறி வுப்புச் செய்து காட்டி, நடித்துக் காட்டி, பேசிக்காட்டி, பாடிக்காட்டி நேர்முகத் தேர்வில் கணிசமான புள்ளிகளையும் பெற்றிருந்தேன். இருப்பினும் எதிர்பார்த்த வேலை கிடைக்கவில்லை.

அப்பதவி வாழையடி வாழை வம்ச பரம்பரையாகவே அங்கு வேலை செய்து கொண்டிருக்கும் குடும்பத்தினரே அவ்வேலை வாய்ப்புக்களை பெற்றுக்கொள்ளக்கூடிய நிலை இருப்பதை புரிந்துகொள்ள முடிந்தது.

வன்னியில் இருந்து சென்றாலும் நிரந்தரமாக கொழும்பில் வசிக்க முடியாமையாலும் இப்பதவி பகுதிநேர அறிவிப்பாளர் என்ற காரணத்தினாலும் இப்பதவியைப் பெறும் வாய்ப்புக் கிடைக்கவில்லை.

பெரும் எதிர்பார்ப்போடு கொழும்பு சென்ற எனக்கு பெரும் ஏமாற்றமாகவே இருந்தது. இது எனது கலையுலக வாழ்வில் மறக்க முடியாத நிகழ்வாகவே இருந்து வருகிறது.

◆ **பண்டார வன்னியன் வரலாற்று நாடகத்தில் பிராதான பாத்திரமாகிய பண்டார வன்னியன் பாத்திரமேற்று பல மேடைகள் நடித்துள்ளீர்கள் அப்பாத்திரம் பற்றிய உணர்வு எப்படியிருந்தது?**

வரலாற்று ஆசிரியையும் முள்ளியவளையை சொந்த இடமாகக் கொண்ட அமரர் முல்லை மணி வே.சுப்பிரமணியம் அவர்கள் இந் நாடகத்தை எழுதியிருந்தார்கள்.

நான் சிறுவயதிலிருக்கும் போது கற்சிலை பகுதியில் அமைந்திருக்கும் பண்டாரவன்னியன் ஞாபகார்த்த கற்பொறி வளாகத்திலே (கற்சிலையடி) பெருமெடுப்பிலான ஒரு விழாவை அப்போதைய வவுனியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினராகவிருந்த மதிப்பிற்குரிய தா. சிவசிதம்பரம் அவர்கள் தலைமையிலே சிலையடி புனரமைக்கப்பட்டு, அழகாக்கப்பட்டு தொடக்க விழா சிலையடியிலும், தொடர்விழா கற்சிலைமடு அ.த.க. பாடசாலை யிலும் 1964 காலப்பகுதியில் நடை பெற்றது.

அன்றைய விழாவில் பெருமளவு மக்கள் கலந்து கொண்டனர். அன்றைய சிறப்புக் கலை நிகழ் வான பண்டாரவன்னியன் வர லாற்று நாடகத்தை முள்ளிய வளை கலைத்தாய் நாடக மன் றத்தினர் ஆற்றுகை செய்திருந் தனர்.

அந்த நாடகத்தைப் பார்த்ததிலிருந்து பண்டாரவன்னியன் பாத் திரமேற்று நடிக்க வேண்டுமென்ற உணர்வு எனது மனதில் ஏற்பட்டது.

அதற்கமைவாக பண்டார வன்னியன் பிரதான பாத்திரத்தை ஏற்று நடிக்கும் வாய்ப்பு பாடசாலையில் கல்வி கற்கும் போதும் பாடசாலையை விட்டு வெளியேறியதன் பின்பும் இன்று வரை அப்பாத்திரத்தை ஏற்று நடித்து வருகிறேன்.

இந் நாடகத்தில் பண்டார வன்னியன் பாத்திரமென்பது மிக உச்சமான சுதந்திர உணர்வை வெளிக்காட்டும் பாத் திரமேயாகும். இவ் வன்னி மண் ணுக்கு புகழ் தேடித்தந்த வன்னி மண் ணின் இறுதி மன்னன்.

ஆங்கில ஏகாதிபத்தியத்திற்கு சிம்மசொப்பனமாக திகழ்ந்த ஒரு வரலாற்று மன்னனாவான்.

இப் பாத்திரத்தை ஏற்று நடிக்கும் போது பல விதமான உணர்வுகள் வெளிக் கொணரும் சந்தர்ப்பம் நிறையவே உண்டு.

குறிப்பாக தர்பாரிலே ஆங்கிலேய- ஒல்லாந்த தேசாதிபதிகளை சந்திக்கும் போது ஏற்படுகின்ற உணர்ச்சிக் கொந்தளிப்பும் காக்கை வன்னியனால் காட்டிக் கொடுக்கும் போது எதிர்பாராத உணர்ச்சிக் குமுறலின் வெளிப்பாடும் இறுதியாக நீதி மன்றத்தில் விசாரணை முடிந்து நீதி வழங்கும் போது இரும்புச் சங்கிலி அறுத்து ஆங்கிலத் தளபதியின் வாளைப்பிடுங்கி வாள் சமர் புரியும் போது துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி மடியுந்தறுவாயில் பேசுகின்ற வசனங்கள் மிகவும் உணர்வு பூர்வமாகவே இருக்கும்.


அந்தக் கட்டம் என்னை மறந்து நடிக்கின்ற நிலைமையும் ஒரு உச்சமான உணர்வு வெளிப் பாட்டை வெளிப்படுத்த வேண்டுமென்ற உணர்வு மேலோங்கி நிற்கும்.

நேர்காணல்:
**ஜெயம் ஜெகன்**



# சிறுவர் அரங்கம்

## புதையல்



திருவெண்ணெய் நல்லூரில் பேராசைக்காரன் ஒருவன் வாழ்ந்து வந்தான். அவன் எந்த பொருளை பார்த்தாலும் அதைத் தான் அடைய வேண்டும் என நினைப்பான். எனவே, நாளடைவில் பார்த்தசாரதி என்ற அவனுடைய பெயரே மறைந்து போய் பேராசைக்காரனாயிற்று.

ஒரு நாள் வெளியூருக்கு வியாபார நிமித்தமாக வண்டியில் சரக்குகளை ஏற்றிக் கொண்டு சென்றான்.

வியாபாரம் முடிந்து காட்டு வழியாக வந்து கொண்டிருந்தான். தண்ணீர் வேட்கை கொண்ட அவன் கண்களுக்கு கிணறு ஒன்று தெரிந்தது. வண்டியை விட்டு இறங்கிய அவன் அந்தக் கிணற்றருகே சென்றான். ஒரு பாத்திரத்தில் கயிற்றைக் கட்டி அதைக் கிணற்றுக்குள் விட்டுத் தண்ணீர் எடுக்கத் தொடங்கினான்.

கிணற்றுக்குள் இருந்து "யார் இங்கே தண்ணீர் எடுப்பது?" என்ற பயங்கரமான குரல் கேட்டது.

அஞ்சி நடுங்கிய அவன் கிணற்றுக்குள் எட்டிப் பார்த்தான். உள்ளே யாரும் இருப்பதாகத் தெரியவில்லை. நடுங்கும் குரலில் "ஐயா! நான் ஒரு ஏழை. தண்ணீர் குடிப்பதற்காக இங்கு வந்தேன். நீங்கள் யார்?" என்று கேட்டான்.

"விரும்பியதை எல்லாம் கொடுக்கும் மந்திரக் கிணறு இது. இதைப் பாதுகாக்கும் பூதம் நான். யார் கண்ணுக்கும் நான் தெரியமாட்டேன்" என்றது அந்தக் குரல்.

"மந்திரக்கிணறா! விரும்பியதை எல்லாம் தருமா?" என்றுவியப்புடன் கேட்டான் அவன்.

"உன்னிடம் பொற்காசுகள் உள்ளதா? ஒரு பொற்காசை இந்தக் கிணற்றுக்குள் போடு உன் விருப்பம் எதுவானாலும் கேள். உடனே அது நிறைவேறும். நன்றாக நினைவு வைத்துக் கொள். இரண்டு முறை தான் இந்தக் கிணறு உன் எண்ணத்தை நிறைவேற்றும்" என்றது அந்தக் குரல்.

"என்னதான் நடக்கிறது பார்ப்போமே" என்ற எண்ணத்தில் ஒரு பொற்காசை கிணற்றுக்குள் போட்டான். "விலை உயர்ந்த நகைகளாலும் பொற்காசுகளாலும் என் வண்டி நிரம்ப வேண்டும்..." என்றான் அவன்.

ஒரு நொடிக்குள் அவன் வண்டி பொற்காசுகளாலும் நகைகளாலும் நிரம்பி இருந்தது. இதைப் பார்த்து வியப்படைந்தான் அவன்.

"ஆ! ஏராளமான செல்வம் கிடைத்துவிட்டது. இந்த நாட்டிலேயே பெருஞ்செல்வன் நான் தான்" என்று மகிழ்ச்சியுடன் சொல்லிக் கொண்டே வண்டியில் அமர்ந்தான்.

"ஐயோ! காட்டு வழியாகச் செல்ல வேண்டுமே! வழியில் திருடர்கள் இருப்பார்களே... அவர்கள் இந்த நகைகளையும் பொற்காசுகளையும் கைப்பற்றிக் கொள்வார்களே! என்ன செய்வது?" என்று சிந்தித்தான்.

நல்ல வழி ஒன்று அவனுக்குத் தோன்றியது. கிணற்றருகே வந்த அவன் தன்னிடம் இருந்த இரண்டாவது பொற்காசையும் அதற்குள் போட்டான்.

"உனக்கு என்ன வேண்டும்?" என்று உள்ளிருந்து குரல் கேட்டது.

"வண்டியில் இருக்கும் நகைகளும் பொற்காசுகளும் என் கண்களுக்கு மட்டும் தெரிய் வேண்டும். பிறர் கண்களுக்குத் தெரியக் கூடாது" என்று கேட்டான்.

"அப்படியே ஆகட்டும்." என்று குரல் வந்தது.வண்டியை ஓட்டிக் கொண்டு புறப்பட்டான். எதிரில் திருடர்கள் சிலர் வந்தனர். அவர்கள் கண்களுக்கு வண்டியில் இருந்த நகைகளும் பொற்காசுகளும் தெரியவில்லை. தன் அறிவுக் கூர்மையை மெச்சிக் கொண்டான் பேராசைக்காரன். மகிழ்ச்சியுடன் தன் வீட்டை அடைந்தான்.

வீட்டுக்குள் ஓடினான். "இனி நாமோ நம் பரம்பரையோ வறுமையில் வாட வேண்டாம். அரசனைப் போலச் செல்வச் செழிப்புடன் வாழலாம். வண்டியில் விலை உயர்ந்த பொருள்கள் என்னென்ன கொண்டு வந்துள்ளேன் பார்!" என்று மகிழ்ச்சியுடன் சொன்னான்.

வண்டி காலியாக இருப்பதைப் பார்த்து அவன் மனைவி திகைத்தாள். "என்னங்க! வண்டியில் விலை உயர்ந்த பொருள்கள் இருப்பதாகச் சொன்னீர்கள். எந்தப் பொருளும் இல்லையே" என்றாள்.

அவன் கண்களுக்கு வண்டியில் ஏராளமான பொற்காசுகளும் நகைகளும் இருப்பது தெரிந்தது. மனைவியைப் பார்த்து, "வண்டியை நன்றாகப் பார்" என்றான்.

நன்றாகப் பார்த்து விட்டுத் தான் சொல்கிறேன் என்றாள்.

அப்பொழுது தான் அவனுக்குத் தான் கேட்ட இரண்டாம் வரம் எவ்வளவு தவறானது என்று புரிந்தது. தன் மனைவியிடம் நடந்ததைக் கூறினான். கிடைத்த விலை மதிப்பற்ற பொருள்களைப் பயன்படுத்த முடியாத நிலையை எண்ணி வருத்தம் அடைந்த அவன் வண்டியை ஓட்டிக் கொண்டு மீண்டும் காட்டிற்குச் சென்றான்.

அந்த இடத்தில் மந்திரக் கிணறும் இல்லை ஒன்றும் இல்லை. பைத்தியம் பிடித்தவனைப் போல் வண்டியை எட்டி உதைத்தான். அதிலிருந்து நகைகளும், பொருட்களும் கீழே கொட்டிச் சிதறின.

என்ன பிரயோஜனம். அவை இவன் கண்களுக்கு மட்டுமே தெரிந்தன. தன்னுடைய பேராசை குணத்திற்கு கிடைத்த பரிசு என நினைத்து மிகவும் வருந்தினான் பார்த்தசாரதி.

05.2017
25

## இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 1659 - ரிச்சார்ட் குரொம்வெல் இங்கிலாந்தின் "ஆட்சிக் காவலர் பெருமகன்" (Lord Protector) பதவியைத் துறந்தார். பொதுநலவாய இங்கிலாந்தின் இரண்டாவது குறுகிய கால அரசு ஆரம்பமானது.
- 1810 - ஆர்ஜெண்டீனாவில் இடம்பெற்ற புரட்சியின் போது ஆயுதம் தரித்த பியூனஸ் அயரஸ் மக்கள் ஸ்பெயின் ஆளுநரை வெளியேற்றினார்கள்.
- 1812 - இங்கிலாந்தில் ஜரோ என்ற இடத்தில் இடம்பெற்ற சுரங்க வெடி விபத்தில் 96 பேர் கொல்லப்பட்டனர்.
- 1837 - கியூபெக்கில் பிரித்தானியாவின் ஆட்சிக்கெதிராக நாட்டுப்பற்றாளர்கள் கிளர்ச்சியில் ஈடுபட்டார்கள்.
- 1865 - அலபாமாவில் "மொபைல்" என்ற இடத்தில் தொழிற்சாலையில் இடம்பெற்ற வெடிப்பில் 300 பேர் கொல்லப்பட்டனர்.
- 1953 - நெவாடாவில் ஐக்கிய அமெரிக்கா தனது முதலாவதும் கடைசியுமான அணு ஆற்றலினாலான பீரங்கியைச் சோதித்தது.
- 1955 - ஐக்கிய அமெரிக்காவில் கன்சாஸ் மாநிலத்தில் "உடால்" என்ற சிறு நகரை இரவு நேர சூறாவளி தாக்கியதில் 80 பேர் கொல்லப்பட்டனர்.
- 1961 - அப்பல்லோ திட்டம்: பத்தாண்டுகளின் இறுதிக்குள் சந்திரனுக்கு மனிதனை அனுப்பும் ஐக்கிய அமெரிக்காவின் திட்டத்தை அதிபர் ஜோன் எஃப் கென்னடி அமெரிக்கக் காங்கிரசில் அறிவித்தார்.
- 1963 - அடிஸ் அபாபாவில் ஆபிரிக்க ஒன்றியம் உருவானது.
- 1966 - எக்ஸ்புளோரர் 32 விண்வெளிக்கு ஏவப்பட்டது.
- 1982 - போக்லாந்து போரில் கவெண்ட்ரி என்ற ஆங்கிலக் கப்பல் மூழ்கியது.
- 1985 - வங்காள தேசத்தில் இடம்பெற்ற சூறாவளியில்10,000 பேர் வரையில் கொல்லப்பட்டனர்.
- 1997 - சியேரா லியோனியில் இடம்பெற்ற இராணுவப் புரட்சியில் அதிபர் அகமது கப்பா பதவியில் இருந்து அகற்றப்பட்டார்.
- 2000 - லெபனானில் 22 ஆண்டுகளாக நிலை கொண்டிருந்த இஸ்ரேல் இராணுவத்தினர் அங்கிருந்து வெளியேறினர்.
- 2001 - அமெரிக்காவைச் சேர்ந்த 32 வயது எரிக் வைஹென்மாயர் எவரெஸ்ட் சிகரத்தை அடைந்த முதலாவது கண் பார்வை இழந்த மனிதர் என்ற பெருமையைப் பெற்றார்.
- 2002 - சீன விமானம் ஒன்று தாய்வானில் நடுவானில் வெடித்துச் சிதறியதில் 225 பேர் கொல்லப்பட்டனர்.
- 2002 - மொசாம்பிக்கில் தொடருந்து ஒன்று விபத்துக்குள்ளாகியதில் 197 பேர் கொல்லப்பட்டனர்.

### பிறப்புகள்

- 1458 - மஹ்மூத் பேகடா, குஜராத் சுல்தான் (இ. 1511)
- 1865 - பீட்டர் சீமன், நோபல் பரிசு பெற்ற டச்சு இயற்பியலாளர் (இ. 1943)
- 1866 - மு. சி. பூரணலிங்கம் பிள்ளை, தமிழறிஞர் (இ. 1947)
- 1878 - சோமசுந்தரப் புலவர், ஈழத்துப் புலவர் (இ. 1953)
- 1918 - நா. முத்தையா, ஆத்மஜோதி இதழாசிரியர் (இ. 1995)
- 1933 - அநு. வை. நாகராஜன், ஈழத்து எழுத்தாளர்
- 1954 - முரளி, மலையாள நடிகர் (இ. 2009)

### இறப்புகள்

- 1988 - ஏர்ணஸ்ட் ருஸ்கா, ஜெர்மனிய இயற்பியலாளர் (பி. 1906)
- 2013 - டி. எம். சௌந்தரராஜன் தமிழ்த் திரைப்படப் பாடகர், (பி. 1923)

### சிறப்பு நாள்

- சர்வதேச காணாமல் போன குழந்தைகள் தினம்.
- ஆர்ஜென்டீனா - மே புரட்சி நாள்
- சாட், லைபீரியா, மாலி, மவ்ரித்தானியா, நமீபியா, சாம்பியா, சிம்பாப்வே - ஆபிரிக்க விடுதலை நாள்
- லெபனான் - விடுதலை நாள் (2000)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | கொடிகாமம் | சுன்னாகம் | சாவகச்சேரி | கிளிநொச்சி | மருதனார் மடம் |
|---|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 150 | 200 | 80 | 140 | 120 | 160 | 160 |
| உருளைக்கிழங்கு | 120 | 140 | 80 | 120 | 120 | 120 | 110 |
| பச்சைமிளகாய் | 250 | 300 | 250 | 220 | 280 | 400 | 200 |
| தக்காளி | 140 | 120 | 80 | 120 | 200 | 120 | 140 |
| மரவள்ளிக்கிழங்கு | 70 | 100 | 60 | 70 | 80 | 80 | 60 |
| கோவா | 150 | 200 | 140 | 150 | 150 | 160 | 150 |
| கரட் | 230 | 400 | 200 | 180-350 | 240 | 400 | 200 |
| பூசணி | 50 | 60 | 40 | 60 | 60 | 80 | 60 |
| புடோல் | 100 | 100 | 50 | 80 | 80 | 80 | 140 |
| வாழைக்காய் | 50 | 30 | 40 | 50 | 40 | 60 | 50 |
| சின்ன வெங்காயம் | 300 | 300 | 280 | 240 | 280 | 300 | 200 |
| பெரிய வெங்காயம் | 90 | 120 | 90 | 100 | 100 | 100 | 100 |
| பாகற்காய் | 200 | 200 | 140 | 240 | 280 | 160 | 180 |
| வெண்டிக்காய் | 70 | 100 | 80 | 80 | 80 | 120 | 120 |
| கருணைக்கிழங்கு | 100 | 100 | 70 | 100 | 100 | 120 | 100 |
| பயற்றங்காய் | 140 | 100 | 50 | 80 | 60 | 80 | 130 |
| லீக்ஸ் | 80 | 100 | 70 | 80 | 80 | 120 | 120 |
| பீற்றூட் | 120 | 100 | 100 | 120 | 120 | 160 | 140 |
| கறிமிளகாய் | 130 | 200 | 100 | 200 | 140 | 200 | 160 |
| முருங்கைக்காய் | 150 | 140 | 120 | 100 | 100 | 160 | 100 |
| போஞ்சி | 160 | 250 | 140 | 240 | 160 | 200 | 200 |
| கத்தரிதம்புள்ள | 120 | 60 | 50 | 100 | — | 120 | 140 |
| கீரை - 1பிடி | 20 | 20 | 20 | 30 | 40 | 40 | 25 |
| தேசிக்காய் | 50 | 80 | 50 | 70 | 60 | 60 | 70 |
| தேங்காய் (ஒன்று) | 70 | 50 | 60 | 70 | 65 | 40-60 | 70 |
| இராசவள்ளி | 200 | 400 | — | 200 | 220 | 200 | 200 |
| வெங்காயப்பூ | 300 | 200 | — | 240 | — | 300 | — |
| முள்ளங்கி | 60 | 100 | 60 | 80 | 80 | 160 | 70 |
| பொன்னாங்காணி | 30 | 50 | 10 | 30 | 40 | 40 | 25 |
| வல்லாரை | 10 | 20 | 10 | 10 | 20 | 20 | 20 |
| ஈரப்பலா | 100 | 60 | — | 100 | 80 | — | 100 |

துறந்தார் பெருமை துணைக்கூறின் வையத்து
இறந்தாரை எண்ணிக் கொண் டற்று
~ திருவள்ளுவர்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## ஞான தேரரே! உங்கள் துறவு ஒரு துறவோ!

துறவு என்ற சொற்பதத்தின் பொருள் பந்த பாசங்களைத் துறத்தல் என்பதாகும்.

பந்த பாசங்களைத் துறப்பதற்கு ஆணவம், கன்மம், மாயை எனும் மும்மலங்களில் இருந்து விடுபட வேண்டும். இதுவே உண்மைத் துறவு.

உண்மையான துறவு நெறி நின்றவர்கள் பலர். அதில் கௌதம புத்தபிரான் முதன்மை யானவர். எல்லாப்பற்றும் துறந்த அவர் துறவுக்கான ஓர் எடுத்துக்காட்டு எனலாம்.

உண்மையில் துறவு என்ற அறத்தில் உச்சமாக ஓங்கி நின்றவர்கள் சமணர்கள். எனினும் அவர்களின் துறவு மிகவும் கடுமையானது.

நடைமுறையில், யதார்த்தத்தில் சமணத் துறவைப் பின்பற்றுவது முடியாத காரியம் என்பதால்தான் பௌத்தம் தோன்றியது.

சமணத் துறவில் இருந்து சற்று நெகிழ்வுத் தன்மை கொண்டதாக பௌத்த துறவு அமைந்திருந்தது.

கௌதம புத்தபிரான் இந்த உலகுக்கு துறவின் மகிமையை எடுத்தியம்பினார்.

புத்த பிக்குகளும் புத்த பிக்குணிகளுமாக இருபாலாருக்குரிய துறவை கௌதம புத்தபிரான் போதித்தார்.

பந்த பாசத்தை அறுத்து; மும்மலங்களை விடுத்து; ஞான நிலையில் நின்று; அன்பு மயப்பட்டு; அறத்தைக் காப்பாற்றுவதே துறவு என்பதாக அவரின் போதனைகள் இருந்தன.

எனினும் இங்கு இருக்கக்கூடிய பௌத்த பிக்குகளில் சிலர் துறவிகள் என்று சொல்ல முடியாத அளவில் வக்கிரம் பிடித்தவர்களாக வன்மம் நிறைந்தவர்களாக இருப்பதைக் காண முடிகின்றது.

காலத்துக்கு காலம் இத்தகையவர்கள் தலைதூக்கி நாட்டின் ஒற்றுமைக்கும் சமாதானத்துக்கும் பங்கம் செய்கின்றனர்.

இதில் இப்போது ஞானசார தேரர் துறவின் அடிப்படைகளைக் கைவிட்டு ஒரு பயங்கரவாதி போல தன்னைக் காட்டிக் கொள்கிறார்.

ஒரு பௌத்த துறவி இவ்வாறு செய்வதென்பது கௌதம புத்தபிரானின் போதனைகளை அடியோடு மீறுவதாகும்.

எனினும் இலங்கையில் பௌத்த பீடங்கள் தமது புத்த பிக்குகளுக்கு சில அடிப்படைத் தன்மைகளை போதித்து விடவில்லை என்றோ அல்லது புத்தபிரானின் போதனைக்கு எதிராகச் செயற்படும் புத்த பிக்குகள் அடிப்படைத் துறவுக் கோலத்தை துறக்க வேண்டும் என்ற கட்டுப்பாடுகளையோ விதிக்கவில்லை என்றே கூற வேண்டும்.

அவ்வாறான கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டிருக்குமாயின் ஞானசார தேரர்கள் இன்னமும் வாழ்ந்து கொண்டிருக்க மாட்டார்கள்.

ஞானசார தேரர் சிறுபான்மை இனத்துக்கு எதிராக அல்லது நாட்டின் அமைதிக்கு பாதகமாக கருத்துரைத்து வருகின்ற போதிலும் அவரைக் கைது செய்வதற்கு இலங்கையின் சட்டம் இடம்கொடுப்பதாக இல்லை.

ஞானசார தேரரைக் கைது செய்தாலும் பிரச்சினை கைது செய்யாவிட்டாலும் பிரச்சினை என்ற இரண்டும் கெட்டான் நிலையில் அரசாங்கம் இருக்கும் போது,

இந்த நாட்டில் இன ஒற்றுமை எங்ஙனம் சாத்தியமாக முடியும்? என்பது நியாயமான கேள்வியாக இருக்கும்.

எது எவ்வாறாயினும் என்னைக் கைது செய்வதை விடுத்து முதலில் சிறுபான்மை மக்களின் பிரதிநிதிகளைக் கைது செய்யுங்கள் என்று ஞானசாரர் கூறுகிறார் எனில், அவர் துறக்க வேண்டியதைக் துறக்காமல் துறக்கக் கூடியதை துறந்து விட்டார் என்று சொல்வதே பொருத்துடையதாகும்.

## எல்லாவற்றிலும் குறை காணாதீர்கள்

# ஐ.நா.அறிக்கையை நிராகரித்த வடகொரியா

அமெரிக்காவும் அதை பின்பற்றும் நாடுகளும் தான் தங்களை எதிர்க்கின்றன எனவும், ஐ.நா விதித்துள்ள பொருளாதார தடை உள்ளிட்ட அறிக்கையை ஏற்கமுடியாது எனவும் வடகொரியா தெரிவித்துள்ளது.

சர்வதேச அமைப்புகள்மற்றும் அமெரிக்கா உள் ளிட்ட உலக நாடுகளின் எதிர்ப்புகளையும் மீறி வட கொரியா தொடர்ச்சியாக பல்வேறு கட்ட ஏவுகணைச் சோதனைகளை மேற்கொண்டு வருகிறது. அமெரிக்கா, ஐ.நா., ஐரோப்பிய யூனியன் உள்ளிட்டவை வடகொரியா மீது பொருளாதார தடைகளை விதிக்கும் முயற்சியில் தொடர்ந்து வருகின்றன.

இந்நிலையில், வடகொரியா அடையாளம் தெரியாத குறைந்த அளவில் செல்லும் ஏவுகணையை நேற்று முன்தினம் சோதனை செய்ததாக தகவல்கள் வெளியாகின. தெற்கு பியாங்கன் மாகாணத்தில் உள்ள புக்சங் பகுதியிலிருந்து ஏவப்பட்ட இந்த ஏவுகணை 500 கிலோமீற்றர் தூரம் வரை பாய்ந்து, தங்கள் நாட்டின் கிழக்கு பகுதியில் உள்ள கடலில் விழுந்ததாக தென் கொரிய பாதுகாப்பு துறை அதிகாரிகள் கூறினர்.

கடந்த ஒரு வார இடைவெளியில் வட கொரியா இரு ஏவுகணை சோதனைகளை நிகழ்த்தியது. இவற்றின் வெற்றியைத் தொடர்ந்து, அதிகளவில் அவ்வகை ஏவுகணைகளை உருவாக்கி இராணுவத்தில் ஈடுபடுத்த வேண்டும் என்று அந்நாட்டு ஜனாதிபதி கிம் ஜாங் உன் அறிவுறுத்தியதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வடகொரியாவின் ஏவுகணை சோதனைகளுக்கு ஐ.நா. பாதுகாப்பு சபை கடும் கண்டனத்தை தெரிவித்தது. மேலும், வட கொரியா மீது புதிய பொருளாதாரத் தடைகளைப் பரிந்துரைக்குமாறு ஐ.நா. பொருளாதாரத் தடை ஆலோசனைக் குழுவைக் கேட்டுக் கொண்டது.

பிராந்திய மற்றும் சர்வதேச பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் விளைவிக்கும் வட கொரியா மீது, பொருளாதாரத் தடைகள் உள்ளிட்ட நடவடிக்கை எடுககப்பட வேண்டியது அவசியம் என்று ஐ.நா. பாது காப்புக் குழு தெரிவித்தது. இது தொடரபான அறிக் கையை பாதுகாப்புக் குழு வெளியிட்டது.

இந்நிலையில், ஐ.நா அறிக்கையை நிராகரித்துள்ள வடகொரிய வெளியுறவு செய்தித் தொடர்பாளர் ,"வட கொரியா தனது நாட்டுக்காக எடுக்கும் ஒவ்வொரு தற்காப்பு நடவடிக்கையிலும் குறை காண்பது வேடிக்கையாக இருக்கிறது. வடகொரியா மீது வெறுப்புணர்வும் விரோத உணர்ச்சியும் கொணடவர்கள் எதிர்ப்பு தெரிவிக்கின்றனர். அமெரிக்காவும் அந்த நாட்டைப் பின்பற்றுபவர்களும் தான் தற்போதைய அறிக்கைக்கு காரணமாக உள்ளனர் என்று தெரிவித்தார். (இ-3)

## கட்டாக்காலி கால்நடைகள் குறித்து யாழ்.மாநகரசபை பகிரங்க அறிவித்தல்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகர ஆளுகைக்குட்பட்ட மாநகர கட்டளைச் சட்டத்தின் அத்தியாயம் 252 இன் பிரிவுகள் 84 (1), (2), (3), (4) இல் குறிப்பிடப்பட்டுள்ள படி உரிமையாளரின் பராமரிப்பின்றி கட்டாக்காலியாக வீதிக்கு இடையூறாக அலைந்து திரியும் கால்நடைகளைக் கட்டுப்படுத்துவது சம்பந்தமாக பொது மக்களுக்கு யாழ். மாநகர சபை ஆணையாளர் பகிரங்க அறிவித்தல் விடுத்துள்ளார்.

01.06.2017 முதல் கட்டாக்காலியாக வீதிக்கு இடையூறாக அலைந்து திரியும் கால்நடைகளை மாநகர சபை பிடித்து பொறுப்பேற்று அக்கால்நடைகளுக்கு தேவையான கட்டிவைக்கும் வசதி ஏற்படுத்தப்பட்டு நீர் மற்றும் தீவனம் வழங்கப்படும்.

மாநகர சபை கட்டளைச் சட்டம் 84 இல் குறிப்பிடப் பட்டுள்ள படி உரிமையாளர் 10 நாட்களுக்குள் மாநகர சபையுடன் தொடர்பு கொண்டு மீளப் பெற்றுக் கொள்வதாயின் உரிய தண்டப்பணம் நாளொன்றுக்கு வரிகள் உள்ளடங்கலாக ரூபா 2000 வீதமும் மற்றும் அதுவரையாக தீவனத்துக்கான பணமும் அறவிடப்படும்.

கால்நடை பிடிக்கப்பட்டு பத்து (10) நாட்களின் பின்னரான பதினொராம் (11) நாள் பத்திரிகைகளில் அதற்கு அடுத்த நாள் (பிடிக்கப்பட்ட 12 ஆவது நாள்) பகிரங்க ஏலம் நடைபெறவுள்ளமை தொடர்பான விடயம் பிரசுரிக்கப்பட்டு ஏல விற்பனை நடத்துவதாகவும் குறித்த ஏலநாள் மற்றும் குறித்த நேரத்திற்கு முன்ராக உரிமையாளர் கால்நடையைப் பொறுப்பேற்றால் தண்டப்பணம், தீவனத்திற்கான பணம் மற்றும் பத்திரிகை விளம்பரம் ஆகியவற்றை உரிமையாளர் செலுத்தும் பட்சத்தில் குறித்த கால்நடையை உரிமையாளரிடம் ஒப்படைப்பதாகவும் தவறின் ஏலத்தில் விடப்பட்டு சித்திகர ஏலம் பெற்றவருக்கு குறித்த கால்நடை வழங்கப்பட்டு ஏலத்தொகை மாநகரசபையின் வருமானக் கணக்கில் வரவு வைக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (இ)

## விளையாட்டுவிழா

வடமராட்சி கிழக்கு வத்திராயன் விக்னேஸ்வரா முன்பள்ளி மாணவர்களின் வருடாந்த விளையாட்டு விழா இன்று வியாழக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு முன்பள்ளி மைதானத்தில் இடம்பெறும்.

இந் நிகழ்விற்குப் பிரதம விருந்தினராக யா/மருதங் கேணி இந்து தமிழ் கலவன் பாடசாலை அதிபர் எஸ். ஸ்ரீராமச்சந்திரன், சிறப்பு விருந்தினர் களாக ஜே/428 கிராம அலுவலர் கே. சிவகுமார், ஜே/429 கிராம அலுவலர் கேரவிச்சந்திரன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளதுடன் கௌரவ விருந்தினர்களாக மருதங்கேணி முன்பள்ளி இணைப்பாளர் திருமதி. சிவஞானம் மற்றும் மருதங்கேணி JRSS இணைப்பாளர் ஏ.ஜீனஸ் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (இ-3-64)

## வெளிநாட்டில் இன்னல்களை எதிர்நோக்கிய 52 இலங்கைப் பெண்கள் நாடு திரும்பினர்!

மத்திய கிழக்கு நாடுகளுக்கு பணிப்பெண்களாகச் சென்று பல்வேறு இன்னல்களுக்கு முகம்கொடுத்த 52 இலங்கைப் பெண்கள் நேற்று நாடு திரும்பியுள்ளனர்.

வெளிநாட்டு வேலை வாய்ப்பு அமைச்சின் தலையீட்டில் குறித்த இலங்கைப் பணிப்பெண்கள் நாடு திரும்பியுள்ளனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

மத்திய கிழக்கு நாடுகளில் பல்வேறு இன்னல்களுக்கு முகங்கொடுக்கும் இலங்கைப் பணிப் பெண்களை, நாட்டிற்கு அழைத்து வருவது தொடர்பில் வெளிநாடுவேலை வாய்ப்பு அமைச்சு நடவடிக்கை எடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## சத்திய தரிசனம்



### அன்பு ஒளி பரவட்டும்!

❖ நாம் நம் கடமையைச் செய்கிறோம் என்பதை மட்டுமே எப்போதும் நினைவில் கொள்ள வேண்டும். அதில் வெற்றி கிடைக்குமா அல்லது தோல்வியில் முடியுமா என்று சிந்தித்துக் கொண்டே கடமையைத் தள்ளிப் போடக் கூடாது. அப்பொறுப்பினை ஆண்டவனிடம் ஒப்படைத்து விட வேண்டும். இந்த மனப்பான்மையை வளர்த்துக் கொண்டால் வெற்றி தோல்விகள் எவ்விதமான பாதிப்புகளையும் ஏற்படுத்துவதில்லை.

❖ இருண்ட அறையில் அசுத்தமும், தூசியும் நிறைந்து இருக்கும். நாளடைவில் தேள், பாம்பு போன்ற விஷஜந்துக்களும் ஒளிந்து கொள்ள ஏதுவாகும். அதே அறையை சுத்தமாக்கி, கதவு ஜன்னல்களைத் திறந்து வைத்தால் வெளிச்சமும், நல்லகாற்றும் வர வழியுண்டாகும். அதுபோல, மனம் என்னும் வீட்டில் காமம், கர்வம், பொறாமை போன்ற விஷஜந்துக்களை நுழைய விடாமல் அன்பு என்னும் ஒளியை பரப்புங்கள். தூய்மை என்னும் காற்றையும் நிரப்புங்கள்.

❖ கண்ணிமையில் பூசிய கருநிற மை கண்ணுக்குள் படிவதில்லை. நீரில் இருக்கும் தாமரை மலர் சேற்றினைத் தீண்டுவதில்லை. கடவுளை முற்றிலுமாக உணர்ந்த மனிதர்கள் உலகவாழ்வில் ஈடுபட்டாலும், அவர்கள் மனம் அதில் ஈடுபடுவதில்லை. எப்போதும் இறைவனையே எண்ணிக் கொண்டு இருப்பர்.

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை வெள்ளிக்கிழமை 8 மணியிலிருந்து மாலை 5.30 மணிவரை **கிளிநொச்சி பிரதேசத்தில்** வேராவில், கிராஞ்சி, வலைப்பாடு ஆகிய இடங்களிலும் **வவுனியா பிரதேசத்தில** தந்தசாமி நகர், நித்திக்குளம், சண்முகபுரம், கங்கன்குளம், இலுப்பைகுளம், அழகாபுரி, துட்டுவாகை, செட்டிகுளம் நகரம், சின்னசிப்பிகுளம், முதலியார்குளம், கப்பாச்சி, முகத்தாங்குளம, அரசடிகுளம், காந்திநகர், அரசன்குளம், வலயம் 06, இலங்கை தொலைத் தொடர்பு நிலையம், கஜசிங்க புர இராணுவ முகாம், செட்டிகுளம் வைத்தியசாலை ஆகிய பிரதேசங்களிலும், மின் தடைப்படும். (இ-9)

## நீர் வெறுப்பு நோயை தவிர்ப்போம்!

நாய்க்கு கோபமூட்டும் வகையில் அதற்கு அடிக்கவோ, உதைக்கவோ கூடாது.

**விலங்கு விசர் நோய் ஏற்படின் இறப்பு நிச்சயம்**

தகவல்: சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை, யாழ். மாநகரசபை.

# தாய்லாந்தில் நடைபெறவுள்ள

# சர்வதேச மெய்வல்லுநர் போட்டியில் யாழ். வீராங்கனை அனித்தா பங்கேற்பு




யாழ்ப்பாணத்தை சேர்ந்த யுவதி ஒருவருக்கு தாய்லாந்தில் இடம்பெறவுள்ள சர்வதேச மெய்வல்லுநர் விளையாட்டுப் போட்டிகளில் பங்குபற்ற வாய்ப்பு கிடைத்துள்ளது.

பெண்களுக்கான கோலூன்றிப் பாய்தலில் சாதனைப் படைத்த அனித்தா ஜெகதீஸ்வரனே குறித்த போட்டிக்கு தெரிவாகியுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த போட்டியில் கலந்து கொள்வதற்காக மேலும் இருவர் தெரிவாகியுள்ளனர்.

குறித்த மூவரும் முதல் தடவையாக சர்வதேச மெய்வல்லுநர் போட்டி ஒன்றில் கலந்துகொள்ள தெரிவாகியுள்ளனர். இவர்கள் மூவரும் வெளிநாடு செல்லவிருப்பதும் இதுவே முதல் தடவையாகும்.

தாய்லாந்தில் ஜூன் மாதம் 12ஆம் திகதி முதல் 15ஆம் திகதி வரை நடைபெறவுள்ள தாய்லாந்து பகிரங்க மெய்வல்லுநர் போட்டிகளில் இம் மூவருடன் மேலும் ஐவர் பங்குபற்றவுள்ளனர்.

தியகம மகிந்த ராஜபக்ஷ விளையாட்டரங்கில் கடந்த மாதம் நடைபெற்ற கனிஷ்ட தேசிய மெய்வல்லுநர் போட்டிகளில் பெண்களுக்கான கோலூன்றிப் பாய்தலில் அனித்தா, 3.45 மீற்றர் உயரம்பாய்ந்து இலங்கையில் சாதனையை நிலை நாட்டினார்.

சம்மட்டி எறிதல் வீராங்கனைகளான அயேஷா மதுவந்தி, பத்தம்ச ஆகியோரும் முதல் தடவையாக சர்வதேச ரீதியான போட்டிகளில் பங்குபற்றவுள்ளனர்.

இதேவேளை, காலிங்க குமாரகே, தனுக்க லியனபத்திரண (நீளம், பாய்தல்), டி.எஸ்.ரணசிங்க (ஈட்டி எறிதல்), விதூஷா லக்ஷானி (முப்பாய்ச்சல்), நிலானி ரத்நாயக்க (3,000 மீ. தடைதாண்டி ஓட்டம்) ஆகியோரும் தாய்லாந்து பகிரங்க மெய்வல்லுநர் போட்டிகளில் பங்குபற்றவுள்ளனர். (க)

# கிரிக்கெட் போட்டிக்கு விண்ணப்பிக்குக



புலோலி இளைஞர் விளையாட்டுக்கழகம் நடத்தும் மாபெரும் மென்பந்து கிரிக்கெட் போட்டிக்கு விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது.

அணிக்கு 8 பேர் கொண்ட 6 ஓவர்கள் சுற்றுப்போட்டி சனிக்கிழமை (2017.05.27), ஞாயிற்றுக்கிழமை (2017.05.28) கழக மைதானத்தில் ஆரம்பமாகவுள்ளது.

பங்குபற்ற விரும்பிய கழகங்கள் தமது வரவை உறுதிப்படுத்துமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். வெற்றிபெறும் அணிக்கு வெற்றிக்கிண்ணங்களுடன் பெறுமதியான பணப்பரிசிலும் வழங்கப்படும்.

போட்டியில் 4 பந்து வீச்சாளர்கள் பந்துவீச முடியும். போட்டிக் கட்டணமாக ஆயிரம்ரூபாய் அறவிடப்படும்.. தொடர்புகளுக்கு : 077 233 6318, 077 678 7242, 077 518 3141. (க)

# மண்ணின் மைந்தர்கள் கிரிக்கெட் தொடர் ஆரம்பம்

மண்ணின் மைந்தர்கள் நினைவாக மாலுசந்தி மைக்கல் விளையாட்டுக்கழகம் நடத்தும் மாபெரும் விளையாட்டு விழா எதிர்வரும் 27.05.2017 சனிக்கிழமை காலை 8.30 மணியளவில் நடைபெறவுள்ளது.

யுத்தகாலங்களில் படுகொலை செய்யப்படும் விபத்து மற்றும் அகால மரணங்களினால், இளம் வயதில் எம்மை விட்டு பிரிந்த மண்ணின் மைந்தர்களை கௌரவப்படுத்தவும் நினைவு கூரவும் இவ் விளையாட்டு விழா இடம்பெறவுள்ளது.

வடமாகாண ரீதியாக அணிக்கு 10 ஓவர் 11 பேர் கொண்ட கிரிக்கெட் சுற்றுப்போட்டி நடைபெறவுள்ளது.

தொடர்ந்து 28.05.2017 ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணியளவில் போட்டிகள் இடம்பெறவுள்ளன.

தொடர்புகளுக்கு : ம.ரகுவரன் - 077 112 9329, ச.தர்சன் - 077 224 7578, ச.பிரசாந் - 077 933 3068, தி.தினோஜன் - 077 247 4483, த-வேணுகான்ன் - 077 788 5307. (க)

# மரண அறிவித்தல்



## ஐயன் மார்க்கண்டன்

(SLPS I) (ஓய்வுபெற்ற அதிபர் யாழ்/அளவெட்டி றோ.க.த.க.பாடசாலை, சமாதான நீதவான், முன்னாள் செயலர் – சண்டிலிப்பாய் பிரதேச செயலகம் – ஓய்வூதிய சங்கம், முன்னாள் தலைவர், மாகியப்பிட்டி கிராம அபிவிருத்திச் சங்கம், முன்னாள் செயலர், ஆதீனப் பிரதிநிதி அபிவிருத்தி சங்கம் தென்னிந்திய திருச்சபை அளவெட்டி, முன்னாள் உப தவிசாளர் – சண்டிலிப்பாய் பிரதேச இணைக்க சபை)

மாகியப்பிட்டி சண்டிலிப்பாயை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட ஐயன் மார்க்கண்டன் (SLPS I) (ஓய்வுபெற்ற அதிபர் யாழ்/அளவெட்டி றோ.க.த.க.பாடசாலை, சமாதான நீதவான், முன்னாள் செயலர் - சண்டிலிப்பாய் பிரதேச செயலகம் - ஓய்வூதிய சங்கம், முன்னாள் தலைவர், மாகியப்பிட்டி கிராம அபிவிருத்திச் சங்கம், முன்னாள் செயலர், ஆதீனப் பிரதிநிதி அபிவிருத்தி சங்கம் தென்னிந்திய திருச்சபை அளவெட்டி, முன்னாள் உப தவிசாளர் - சண்டிலிப்பாய் பிரதேச இணைக்க சபை) நேற்று (24.05.2017) காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற ஐயன் - குஞ்சி தம்பதிகளின் கனிஷ்ட புதல்வனும் காலஞ்சென்ற இன்னாசி - அன்னம்மாவின் அன்பு மருமகனும் ஞானம்மாவின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான கைராசி, தாமு, கந்தையா, கிருஷ்ணன் ஆகியோரின் அன்புச் சகோதரனும் சுபேந்திரனி (ஆசிரியை - யா/மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை, பருத்தித்துறை), மதிவதனன் (கனடா), ஞானவதனன் (கனடா), ஜெயவதனன் (காரைநகர் ஆதார வைத்தியசாலை), கிருபாகினி (ஆசிரியை-யா/யூனியன் கல்லூரி தெல்லிப்பழை), அருள்வதனன் (ஆசிரியர் - வாழைச்சேனை அந்நூர் தேசிய பாடசாலை), ரூபவதனன் (சிரேஷ்ட விரிவுரையாளர் - ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகம்) ஆகியோரின் அன்புத் தந்தையும், அருட்பணி பஞ்சரட்ணம் (அல்வாய் மெதடிஸ்த திருச்சபை), பாமா (கனடா), பியூலா (கனடா), உதயகுமாரி, அன்ரனி பெனடிக்ற் (உரிமையாளர் - கிருபாகனி புத்தக நிலையம்), பிறின்சி அனித்தா (ஆசிரியை - வாழைச்சேனை), பனோஜா (தாதிய உத்தியோகத்தர்-யாழ்/போதனா வைத்தியசாலை) ஆகியோரின் அன்பு மாமனும் பொனோ்பர் (கிழக்கு பல்கலைக்கழகம்), கிறிஸ்டோபர், பிரியங்கா (ரொரன்டோ பல்கலைக்கழகம்-கனடா), சோபியா, ஆசிகா, காயத்திரி (யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம்), சூரியகங்கேரி, ஜெயராஜ் (பல்கலைக்கழக புதுமுக மாணவர்), சூரியராஜ் (மகாஜன கல்லூரி), ஆசியா (அளவெட்டி றோ.க.த.க.பாடசாலை), அபிசன் (மகாஜன கல்லூரி), அபிமா (வாழைச்சேனை இந்துக் கல்லூரி), ரமோனா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதி நல்லடக்க ஆராதனை பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும். இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

மதிபதி
மாகியப்பிட்டி, சண்டிலிப்பாய்.
021 300 8620, 077 742 2217

தகவல்:-
குடும்பத்தினர்

## 62,500 ஏக்கர்...

ஒன்றுக்கு வழங்கவுள்ளது.

மேலும் அத்திட்டத்திற்கான அடிக்கல்லை எதிர்வரும் யூன் மாதம் ஐந்தாம் திகதி நாட்டுவதற்கும் அரசாங்கம் திட்டமிட்டுள்ளது.

இந்நிலையில் இத்திட்டத்தை அரசாங்கம் கைவிட வேண்டும். அல்லாதுபோனால் அதற்கெதிராக பரந்துபட்ட போராட்டங்களை நடத்தவுள்ளதாக கூட்டு எதிர்க்கட்சியில் அங்கம் வகிக்கும் பாராளுமன்ற உறுப்பினர் உதயஷாந்த தெரிவித்தார்.

கூட்டு எதிர்க்கட்சி ஏற்பாடுசெய்த ஊடகவியலாளர் சந்திப்பு நேற்று பொரளையிலுள்ள என்.எம்.பெரேரா நிலையத்தில் நடைபெற்றபோது அதில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்த தார், (செ-11)

## வடக்கு சபையில்...

யின் 93ஆவது அமர்வு இன்று 25ஆம் திகதி கைதடியில் உள்ள பேரவைக் கட்டடத்தில் அவைத்தலைவர் சீ.வீ.கே.சிவஞானம் தலைமையில் நடைபெறவுள்ளது,

அந்த அமர்வில் அவைத்தலைவரினால் 2009.05.18ஆம் திகதி முள்ளிவாய்க்காலில் கொத்துக்கொத்தாக கொன்று குவிக்கப்பட்ட எமது உறவுகளை நினைவுகூரும் முகமாக கடந்த 2017.05.18ஆம் திகதி வடக்கு மாகாண சபையின் ஏற்பாட்டில் இடம்பெற்ற முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும், எதிர்க்கட்சித் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தன் அவர்களின் உரையை குறுக்கீடு செய்து குழப்பிய அநாகரிக செயலை இச் சபை வன்மையாக கண்டிப்பதுடன் இந்தச் செயல் தொடர்பாக பொது மக்களிடம் எமது கவலையையும் மன்னிப்பையும் கோருவதுடன் இதனால் இரா.சம்பந்தன் அவர்களுக்கு ஏற்பட்ட அசௌகரியங்களுக்காக வருந்துவதுடன் மன்னிப்பையும் இச் சபை கோருகின்றது என அவசர பிரேரணையை முன் வைக்கவுள்ளார். (செ-11)

## அரசை வீழ்த்த ...

அதன்மூலம் அரசாங்கத்தை வீழ்த்தும் மிகப் பெரிய சூழ்ச்சி இடம்பெற்று வருகின்றது. மக்களை தூண்டிவிடும் அடிப்படைவாதிகள் எவராக இருந்தாலும் அவர்களை கைதுசெய்ய தீர மானித்துள்ளதாக ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பின் பொதுச் செயலாளர் மகிந்த அமரவீர தெரிவித்தார்.

ஶ்ரீலங்கா சுதந்திர கட்சியின் செய்தியாளர் சந்திப்பு நேற்று கொழும்பில் கட்சித் தலைமை அலுவலகத்தில் இடம்பெற்ற போதே அவர் இதனைக் குறிப்பிட்டார். (செ-11)

## அவு.இல்...

அவுஸ்திரேலிய பிரதமர் மெல்கம் டேர்ன்புலின் அழைப்பின் பேரில் அவுஸ்திரேலியாவுக்கு மூன்று நாள் உத்தியோகபூர்வ விஜயத்தில் ஈடுபட்டுள்ள ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நேற்று முற்பகல் கென்பரா நகரில் நடைபெற்ற பல நிகழ்வுகளில் கலந்து கொண்டதுடன் கென்பரா நகரில் உள்ள சூரிய மின் சக்தி நிலையத்துக்கு விஜயத்தை மேற்கொண்டார்.

பின்னர் கென்பரா நகரில் உள்ள கம்பா விகாரைக்குச் சென்ற ஜனாதிபதி, வழிபாடுகளில் ஈடுபட்டு அவுஸ்திரேலிய தூதரகத்தில் இடம்பெற்ற இலங்கை மக்களுடனான நட்புறவு கலந்துரையாடலில் ஈடுபட்டார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கும் அவுஸ்திரேலிய பிரதமர் மெல்கம் டேர்ன்புலுக்கும் இடையிலான உத்தியோகபூர்வ சந்திப்பு இன்று முற்பகல் அவுஸ்திரேலிய பாராளுமன்ற கட்டடத் தொகுதியில் இடம்பெறவுள்ளது.

சுற்றுலா மற்றும் கிறிஸ்தவ மத அலுவல்கள் அமைச்சர் ஜோன் அமரதுங்க, மின்சக்தி மற்றும் புதுப்பிக்கத்தக்க சக்தி வளங்கள் பிரதி அமைச்சர் அஜித் பீ பெரேரா, வெளிநாட்டலுவல்கள் பிரதி அமைச்சர் ஹர்ஷ டீ சில்வா, பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷன ராஜகருணா, ஶ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் இளைஞர் முன்னணி தலைவர் உள்ளிட்ட இலங்கை தூதுக் குழுவினரும் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர். (செ-11)

## நாடு தழுவிய ...

லிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளதாக குறித்த ஹர்த்தாலுக்கு அழைப்பு விடுத்திருந்த முஸ்லிம் உரிமைகளுக்கான அமைப்பு (MRO) அறிவித்துள்ளது.

முன்னதாக, அந்த அமைப்பு விடுத்திருந்த பகிரங்க அழைப்பில், நாட்டில் சிறுபான்மையினரான முஸ்லிம்கள் மீது நாளுக்கு நாள் அதிகரித்து வரும் இனவாதத் தாக்குதல்களைக் கண்டித்து இன்று 25ஆம் திகதி வியாழக் கிழமை நாடளாவிய ரீதியில் ஹர்த்தாலை மேற்கொள்ளுமாறு கேட்டிருந்தது.

அந்த அமைப்பு விடுத்திருந்த வேண்டுகோளில், ஜனநாயக ரீதியில் எமக்குள்ள உரிமையைப் பயன்படுத்தி நாடளாவிய ரீதியில் இந்த ஹர்த்தாலை வெற்றிகரமாக நடத்துவதற்கு உதவுமாறு சகல தரப்பினரிடமும் வினயமாக வேண்டிக்கொள்கிறோம் என்றும் அரச தனியார் நிறுவனங்களும், அரச தனியார் பாடசாலை நிர்வாகங்களும், வர்த்தக நிறுவனங்களும் தமது கடமையிலிருந்து விலகி இந்த ஹர்த்தாலுக்கு பூரண ஒத்துழைப்பை வழங்க வேண்டும் என்றும் கேட்டிருந்தது.

இந்நிலையில் முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்கள், சிவில் அமைப்புக்கள் உலமா சபையை நேற்று முன்தினம் இரவு சந்தித்த பின்னர் ஹர்த்தால் ரத்துச் செய்யப்பட்டுள்ளது.

எனினும் நாளை வெள்ளிக்கிழமை வரை இப்பிரச்சினைகளுக்கு தீர்வின்றேல் மீண்டும ஹர்த்தாலுக்கு செல்ல வேண்டி ஏற்படும் என முஸ்லிம் உரிமைகளுக்கான அமைப்பு அரசாங்கத்திற்கு காலக்கெடு விதித்துள்ளது. (செ-11)

## நிதி ஒதுக்கீட்டில்...

ளுக்கான உதவிகள், திட்டங்களுக்கான ஒதுக்கீடுகள் கணிசமாக குறைக்கப்பட்டுள்ளன.

இந்த நிலையில், 2018ஆம் ஆண்டுக்கான வரவுசெலவுத் திட்டத்தில், 37.6 பில்லியன் டொலரை ஒதுக்கீடு செய்யுமாறு அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம் மற்றும் யு.எஸ். எய்ட் என்பன கோரியுள்ளன.

ஒபாமா அரசாங்கத்தின் காலத்தில் 2017 ஆம் ஆண்டுக்காக அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம் மற்றும் யு.எஸ்.எய்ட் என்பன 440.7 பில்லியன் டொலரைக் கோரியிருந்தன. இது 2018ஆம் ஆண்டுக்காக கோரப்பட்டுள்ள தொகையை விட 11 மடங்கு அதிகமாகும்.

அமெரிக்கர்களுக்கு முதலிடம் கொடுக்கும், அமெரிக்காவின் தேசிய பாதுகாப்பு, எல்லைகளைப் பாதுகாக்கும், அமெரிக்காவின் பொருளாதார நலன்களுக்கு முன்னுரிமை கொடுக்கும் அதிபர் ட்ரம்பின் கொள்கைக்கு அமையவே இந்த வரவு செலவுத் திட்ட கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது என்று அமெரிக்க இராஜாங்கச் செயலர் ரெக்ஸ் ரில்லர்சன் தெரிவித்துள்ளார்.

2018ஆம் ஆண்டுக்கான வரவுசெலவுத் திட்டத்தில், ஏற்றுமதி கட்டுப்பாடு மற்றும் எல்லை பாதுகாப்பு திட்டத்தின் கீழ் இலங்கைக்காக 380,000 டொலர்களுக்கான கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.

அச்சுறுத்தலை எதிர்கொள்வதற்கும், பிராந்திய கடல்சார் தலைமைத்துவத்தைப் பெறும் வகையிலும், இலங்கை கடலோரக் காவல்படையின் ஆற்றலை ஏற்றுமதி கட்டுப்பாடு மற்றும் எல்லை பாதுகாப்பு திட்டம் தொடர்ந்து கட்டியெழுப்பும் என்றும் இந்த வரவு செலவுத்திட்டக் கோரிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இலங்கை உள்ளிட்ட மோதல்களினால் பாதிக்கப்பட்ட நாடுகளை, மீண்டும் பின்நோக்கித் திரும்பாமல் தடுத்து மீட்டெடுப்பதற்கான வரையறுக்கப்பட்ட உதவிகளை வழங்குவதற்கான பூகோளத் திட்டங்களுக்கு அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம் 18.6 மில்லியன் டொலரை கோரியுள்ளது.

மரபுவழி ஆயுதங்களை அழிப்பதற்கான திட்டத்தின் கீழ், இலங்கைக்கு அதிகபட்ச மாக 2.5 மில்லியன் டொலர் கோரப்பட்டுள்ளது.

இந்த திட்டத்தின் கீழ், இலங்கையின் வடக்கு, கிழக்கில் கண்ணிவெடிகள், வெடிபொருள்களை அகற்றும் செயற்பாடுகளுக்கு உதவிகள் மற்றும் ஆதரவு அளிக்கப்படும்.


2018ஆம் ஆண்டுக்கான நிதியாண்டில், தெற்காசியாவுக்கான உதவித் திட்டங்களுக்காக 94.4 மில்லியன் டொலர் ஒதுக்கீடு கோரப்பட்டுள்ளது.

இந்தியாவில் உள்ள இலங்கை அகதிகள், நாடு திரும்பும் அகதிகள், மற்றும் உள்நாட்டில் இடம்பெயர்ந்தவர்கள், புகலிடம் கோரி திருப்பி அனுப்பப்பட்டவர்களின் மனிதாபிமான நிலையை முன்னேற்றுவதில் இணைந்து பணியாற்றுவதற்கும் இந்த நிதி பயன்படுத்தப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

அதேவேளை, மிலேனியம் சவால் திட்டத்தின் கீழ், 2018ஆம் ஆண்டில் இலங்கை, செனகல், மொங்கோலியா ஆகிய நாடுகளுக்காக 800 மில்லியன் டொலர் நிதி ஒதுக்கீடு கோரப்பட்டுள்ளது.

ஒபாமா நிர்வாகத்தின் போது, 2017ஆம் ஆண்டு இலங்கைக்கு 31 மில்லியன் டொலர் நிதி உதவியை அப்போதைய இராஜாங்கச் செயலர் ஜோன் கெரி முன்மொழிந்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (செ-11)

## வாகன விபத்தில் மாணவன் காயம்



வடலியடைப்பில் நேற்று மாலை 4.00 மணியளவில் இடம்பெற்ற வடி ரக வாகனம் துவிச்சக்கர வண்டி விபத்தில் துவிச்சக்கர வண்டியில் பயணித்த பதின்னான்கு வயது மாணவன் காயமுற்று யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

வேகக்கட்டுப்பாட்டை இழந்த வடி வாகனம் துவிச்சக்கர வண்டியில் பயணித்த மாணவனை மோதித்தள்ளி அருகில் இருந்த மதிலையும் உடைத்துக் கொண்டு மதிலுடன் மோதி விபத்தை ஏற்படுத்தியிருந்தது. விபத்தையடுத்து வடி வாகன சாரதி இளவாலை பொலிஸாரால் கைது செய்யப்பட்டதுடன் மேலதிக விசாரணைகளும் இடம்பெற்று வருகின்றது. (செ-82)

## முதலமைச்சரின் ஆலோசனையின்றி பொதுச் சேவை ஆணைக்குழுவுக்கு புதிதாக திடீர் நியமனங்கள்

(யாழ்ப்பாணம்)

வடமாகாண முதலமைச்சரின் ஆலோசனை இன்றி மாகாண பொது சேவை ஆணைக்குழுவுக்கு புதிய தலைவர் மற்றும் அங்கத்தவர்களை நேற்றைய தினம் வடமாகாண ஆளுநர் திடீரென நியமித்துள்ளார்.

அரச துறையில் இருந்து ஓய்வுபெற்ற துறைசார்ந்தவர்கள் தான் அப் பதவியில் இதுவரை பணியாற்றி வந்த நிலையில் முன்னர் இருந்த உறுப்பினர்கள் அனைவரையும் நீக்கிவிட்டு புதிய தலைவர், மற்றும் உறுப்பினர்களை வடமாகாண ஆளுநர் நியமித்துள்ளார்.

அத்துடன் கட்சியின் சிபாரிசின் அடிப்படையிலும் மேற்படி நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளது எனவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இந்த நியமனங்கள் அனைத்துமே வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனின் ஆலோசனைகள் எதையும் கேட்காது வடமாகாண ஆளுநரின் ஒருங்கிணைப்பு செயலாளர் சுமணபாலர்வினால் நேற்றைய தினம் வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (செ-9)

## வாள்வெட்டு...

டனர்.

சாவகச்சேரி மந்துவில் பகுதியில் இடம்பெற்ற வாள்வெட்டுடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தில் கடந்த 15-ம் திகதி கொடிகாமம் பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் முச்சக்கர வண்டியுடன் 5 சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் முற்படுத்தி விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தனர்.

அதன் பின்னரான மோதலில் பிரதான சந்தேகநபரை கடந்த 19ஆம் திகதி பொலிஸார் கைது செய்திருந்தனர்.

இந்நிலையில்கைது செய்யப்பட்ட ஆறு பேரில் நான்கு சந்தேகநபர்கள் நேற்று சாவகச்சேரி நீதிமன்றில் அடையாள அணிவகுப்புக்கு உட்படுத்தப்பட்டு இனங்காட்டப்பட்டனர்.

இதையடுத்து குறித்த நால்வர் உட்பட்ட 6 பேரையும் அடுத்த மாதம் 2-ம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு சாவகச்சேரி நீதிவான் திருமதி ஶ்ரீநிதி நந்தசேகரன் உத்தரவிட்டுள்ளார்.

அண்மைக்காலமாக தென்மராட்சியின் மந்துவில், மட்டுவில், கச்சாய், சாவகச்சேரி போன்ற பகுதிகளில் தொடர்ச்சியாக வாள் வெட்டுச் சம்பவங்கள் இடம்பெற்றிருந்தமை மக்கள் மத்தியில் அச்சத்தை தோற்று வித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (செ-89)

## கிறீஸ்...

நிலையில், கிறீஸ் மனிதன் தொடர்பான தகவல் ஒன்று மீண்டும் பதிவானது.

உடல் முழுதும் கிறீஸினைப் பூசிக்கொண்டு நிர்வாணமாக நடமாடும் குறித்த நபரை மக்கள் கிறீஸ் மனிதன் என அழைக்கின்றனர்.

இந்நபர் அண்மையில் நிர்வாணமாக பத்தரமுல்லையில் பல வீடுகளை சுற்றிவரும் காட்சி வீடொன்றில் பொருத்தப்பட்டிருந்த சி.சி.ரிவி கமராவில் பதிவாகியுள்ளது.

சி.சி.ரிவி காட்சிகளைப் பயன்படுத்தி மேற்கொண்ட விசாரணைகளின் மூலம் குறித்த நபரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

வீடுகளில் பொருட்களைத் திருடியுள்ள இவர், பெண்களை துஷ்பிரயோகம் செய்ய பல தடவை முயற்சி செய்துள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டனர்.

29 வயதான இவர் மித்தெனிய பிரதேசத்தைச் சேர்ந்தவர் என தெரியவந்துள்ளது.

சந்தேகநபரிடம் இருந்து தங்க ஆபரணங்களையும், சில பற்றுச்சீட்டுக்களையும், உள்ளாடைகள் சிலவற்றையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

தொடர் விசாரணையின் தடயப்பொருட்களுடன் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட சந்தேக நபர் தற்போது விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். (செ-11)

## வெடி பொருட்கள்...

பாதுகாப்பு வலயமாக இருந்து அண்மையில் மக்கள் பாவனைக்காக அனுமதிக்கப்பட்ட வலி.வடக்கு தையிட்டி ஜே 247 கிராம சேவகர் பிரிவில் உள்ள வீடு ஒன்றில் இருந்த கிணற்றை வீட்டின் உரிமையாளர் கடந்த 15 ஆம் திகதி துப்புரவு செய்துள்ளார்

அப்போது கிணற்றில் வெடிபொருட்கள் இருப்பதை கண்டு ஹலோரெஸ் நிறுவன பணியாளர்களுக்கு தகவல் தெரிவித்துள்ளனர். இதனையடுத்து அவர்களால் ஒரு தொகுதி வெடிபொருட்களை மீட்டிருந்த போதும் அவர்களால் மேலும் மீட்க முடியாத நிலையில் வீட்டு உரிமையாளரால் பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டது.

இதனையடுத்து அங்கு சென்ற பொலிஸார் மீட்புப் பணியை உறுதிப்படுத்தியதுடன் மல்லாகம் நீதவான் நீதிமன்றின் உத்தரவில் அவற்றை மீட்பதற்கான அனுமதி பெற்று விசேட அதிரடிப்படையின் உதவியுடன் நேற்றைய தினம் மீட்பு பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன, இரண்டாவது நாளாக இன்றைய தினமும் மீட்பு பணி நடைபெறவுள்ளது. (செ-9)

## 1700 பட்டதாரிகளு...

ளுக்கான நியமனங்கள் கட்டம் கட்டமாக வழங்குவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாகவும் அதற்கான நடவடிக்கைகளும் தற்போது இடம்பெற்றுவருவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதனடிப்படையில் ஏனைய 3ஆயிரத்து 80 பட்டதாரிகளுக்கான நியமனங்களுக்கான போட்டிப் பரீட்சைகள் அடுத்த மாதம் முதலாம் வாரமளவில் இடம்பெறலாம் எனவும் கூறப்பட்டுள்ளது.

கிழக்கின் 4ஆயிரத்து 784 ஆசிரியர் வெற்றிடங்களுக்கு பட்டதாரிகளை நியமிப்பதற்கு அண்மையில் தேசிய முகாமைத்துவ திண்ணக்களம் அனுமதி வழங்கியமை குறிப்பிடத்தக்கது.

பட்டதாரிகளை ஆசிரியர் நியமனத்துக்குள் உள்ளீர்ப்பது தொடர்பில் நேற்று புதன் கிழமை மாகாண கல்வியமைச்சில் கல்வியமைச்சர், கல்வியமைச்சின் செயலாளர், பிரதம செயலாளர், மாகாண கல்விப் பணிப்பாளர்கள் மற்றும் பொதுச் சேவை ஆணைக்குழுவின் செயலாளர் ஆகியோரின் பங்குபற்றுதலுடன் கூட்டமொன்று இடம்பெற்றது.

இதில் பட்டதாரிகளை உள்வாங்குவதற்கான பொறிமுறை குறித்து ஆராய்ந்து விடயதானங்களின் அடிப்படையில் பட்டதாரிகளை இணைத்துக் கொள்வது தொடர்பிலும் மற்றும் பிற விடயங்கள் தொடர்பிலும் கவனம் செலுத்தப்பட்டதாக கல்வி அமைச்சின் உயரதிகாரி தெரிவித்தார்.

இவர்களுக்கான நியமனங்கள் எதிர்வரும் வாரங்களில் வழங்கப்படும் எனவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (செ)

## 51 கிலோ கஞ்சா...

கடல் மார்க்கமாக வல்வெட்டித்துறைக்கு கடத்தி வரப்பட்ட 51.725 கிலோ கிராம் கேரள கஞ்சாவினை மீட்ட நிலையில் அதனைக் கடத்தி வந்தவர்கள் தப்பிச் சென்றுவிட்டதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று அதிகாலை 4.15 மணியளவில் வல்வெட்டித்துறை ரேவடி கடற்கரையூடாக கஞ்சா கடத்தப்படுவதாக வல்வெட்டித்துறைப் பொலிஸாருக்கு இரகசியத் தகவல் ஒன்று கிடைக்கப்பெற்றது.

இதனையடுத்து பொலிஸார் கடற்கரைப் பகுதியில் கண்காணிப்பில் ஈடுபட்டிருந்த போது படகு ஒன்றில் வந்தவர்கள் பொதி ஒன்றினை கரையை நோக்கி வீசிவிட்டு தப்பிச் சென்றுள்ளனர்.

அப்பொதியினை பொலிஸார் பரிசோதித்த போது அதற்குள் கஞ்சா இருப்பது தெரியவந்ததுடன் அதன் பெறுமதி ஒரு கோடி ரூபாய் எனவும் மதிப்பிடப்பட்டுள்ளது.

இது தொடர்பில் வல்வெட்டித்துறை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (செ-9-60)

## வவு.வில் மழையுட...





பொலிஸ் நிலையத்தில் அமைந்திருந்த பொலிஸார் விடுதி ஒன்றும் சேதமடைந்துள்ளது.

வவுனியா நகரில் நேற்று நண்பகல் தொடக்கம் பிற்பகல் 3 மணிநேரம் மழையுடன் கூடிய மினிசூறாவளி ஏற்பட்டிருந்தது. இதன் காரணமாக நகரின் பல் பகுதிகளில் மரங்கள் முறிந்து விழுந்ததுடன் பல்வேறு கட்டடங்களும், வாகனங்களும் சேதமடைந்துள்ளன.

வவுனியா பொலிஸ் நிலையத்தில் நின்ற மரம் ஒன்று முறிந்து விழுந்தமையால் 5 மோட்டார் சைக்கிள்கள் சேதமடைந்ததுடன், பொலிஸ் நிலையத்தில் இருந்த விடுதி கட்டடம் ஒன்றின் பகுதியும் இடிந்து விழுந்து சேதமடைந்துள்ளது.

குடியிருப்பு பகுதியில் வீதியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த கார் ஒன்றின் மீது மரம் முறிந்து விழுந்தமையால் அவ்வாகனமும் பகுதியளவில் சேதமடைந்துள்ளது. குருமன் காடு பகுதியில் பாரிய மரம் ஒன்று பாறி விழுந்தமையால் சில மணிநேரம் மன்னார் வீதி ஊடான போக்குவரத்தும் தடைப்பட்டிருந்தது.

இது தவிர, வவுனியா மாவட்ட செயலகம், வைத்தியசாலை மற்றும் நகரின் பல பகுதிகளிலும் உள்ள மரங்கள், விளம்பர பலகைகள் முறிந்து விழுந்தமையால் வீடுகள், கட்டடங்கள், வீட்டு மதில்கள் என்பனவும் சிறுசிறு சேதங்களுக்கு உள்ளாகியுள்ளன. இவ் அனர்த்தம் காரணமாக வவுனியா நகரப்பகுதியின் பல இடங்களில் மின்சாரத்தடையும்ஏற்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (செ-15-250)

## வித்தியா கொலை...

ட்டுள்ள முதல் ஒன்பது எதிரிகளுக்கும் எதிராக சட்டமா அதிபர் உத்தியோகபூர்வமாக யாழ்.மேல் நீதிமன்ற ரயல் அட்பார் நீதிமன்றில் குற்றப்பத்திரத்தை தாக்கல் செய்யவுள்ளார்.

மேற்படி மாணவியின் கூட்டு பாலியல் வல்லுறவு படுகொலை தொடர்பான நீதவான் நீதிமன்ற வழக்கு விசாரணைகள் முடிவுறுத்தப்பட்டு சட்டமா அதிபரால் குறித்த ஒன்பது சந்தேகநபர்களுக்கும் எதிரான 41 குற்றச்சாட்டுக்கள் அடங்கிய குற்றப்பத்திரமானது யாழ். மேல் நீதிமன்றுக்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்தது.

இவ்வாறு சட்டமா அதிபரால் அனுப்பி வைக்கப்பட்டிருந்த குற்றப் பகிர்வு பத்திரமானது, இவ்வழக்கினை கொழும்பு மேல் நீதிமன்றிற்கு மாற்றி அங்கு வைத்து ரயல் அட்பார் நீதி விசாரணையை மேற்கொள்வதற்கு உயர்மட்டத்தில் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டதால் யாழ்.மேல் நீதிமன்ற இரும்பு பெட்டகத்தில் பாதுகாக்கப்பட்டு வருகின்றது.

இந்நிலையில் நேற்றுமுன்தினம் குறித்த மாணவியின் கூட்டு பாலியல் வன்புணர்வு படுகொலை வழக்கை யாழ்.மேல் நீதிமன்றிலேயே நடத்துவதற்கு அனுமதி வழங்கப்பட்டிருந்ததுடன் அதற்காக பிரதம நீதியரசர் மூன்று தமிழ் மேல் நீதிமன்ற நீதிபதிகளை நியமித்திருந்தார். இந்நிலையிலேயே குறித்த வழக்கானது யாழ்.மேல் நீதிமன்றில் அவ் மூன்று தமிழ் நீதிபதிகளின் முன்னிலையிலான ரயல் அட்பார் நீதி விசாரணை முறையில் விசாரிக்கப்படவுள்ளது.

ஏற்கெனவே யாழ்.மேல் நீதிமன்றம் குறித்த ஒன்பது சந்தேகநபர்களது விளக்கமறியல் காலத்தை யூன் 12-ம் திகதி வரை நீடித்துள்ள நிலையில் பிரதம நீதியரசரால் நியமிக்கப்பட்ட மூன்று தமிழ் நீதிபதிகளும் யாழ்.மேல் நீதிமன்றில் அன்றைய தினம் கூடவுள்ளனர். இதன்போது சட்டமா அதிபர் சார்பில் பிரதி சொலிஸ்ரர் ஜெனரல் குமார்ரட்ணம் குற்றப் பகிர்வு பத்திரத்தை உத்தியோகபூர்வமாக ரயல் அட்பார் நீதிமன்றில் தாக்கல் செய்வார்.

இதனை தொடர்ந்து குறித்த குற்றப்பகிர்வு பத்திரமானது சந்தேகநபர்களுக்கு அவர்களுக்கு விளங்கும் மொழியில் வாசித்து காண்பிக்கப்பட்டு அவ் குற்றப்பகிர்வு பத்திரமும் அதனூடான ஆவணங்களும் எதிரிகளுக்கு வழங்கப்படவுள்ளது.

இதன்பின்னர் குறித்த வழக்கின் சாட்சிப் பதிவுகள் உள்ளிட்ட வழக்கு நடவடிக்கைகள் யூலை மாதத்தில் ஆரம்பிக்கப்படுவது தொடர்பான தகவல்கள் அன்றைய தினம் யாழ்.மேல் நீதிமன்ற ரயல் அட்பார் நீதிமன்ற மூன்று நீதிபதிகளாலும் தெரிவிக்கப்படும் என்பது குறிப்பிடத்தக்கது. (செ-4)

## தடையுத்தரவு பிறப்...

வாத பூஜை நிகழ்வுகள் இன்று இடம்பெறவுள்ளன. வடக்கு கிழக்கு ஆகிய தமிழ் மற்றும் முஸ்லிம் மக்களது பூர்வீக காணிகளில் அத்துமீறிய வகையில் பௌத்த விகாரைகள் அமைக்கப்பட்டு வருவதாக தமிழ், முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்களும் மக்களும் குற்றச்சாட்டுக்களை தொடர்ச்சியாக முன்வைத்து வருகின்றனர்.

இத்தகைய நிலையில் குறித்த நாவற்குழி பிரதேசத்தில் உள்ள பௌத்த விகாரைக்கு புதிதாக பல கோடி ரூபாய் செலவில் தாது கோபுரம் (தூபி) ஒன்றை அமைப்பதற்கான அடிக்கல்லானது அண்மையில் இராணுவ பிரிகேடியர் ஒருவரால் நட்டப்பட்டிருந்தது. எனினும் குறித்த விகாரையில் புதிய கோபுரம் அமைப்பதற்கான அனுமதியை சாவகச்சேரி நகரசபை வழங்கியிருக்காத நிலையில் அது தொடர்பாக குறித்த நாவற்குழி பௌத்த விகாரையின் விகாராதிபதிக்கு தடை உத்தரவு கடிதமொன்றையும் பிரதேச சபை அனுப்பியுள்ளது.

இவ்வாறு குறித்த நாவற்குழி விகாரை தொடர்பாக தொடர்ச்சியாக சர்ச்சைகள் ஏற்பட்டுள்ள நிலையிலும், தென்னிலங்கை பகுதிகளில் பௌத்த அமைப்புக்களால் இனவாத ரீதியான செயற்பாடுகளும், முஸ்லிம், தமிழ் வழிபாட்டு தலங்கள் மற்றும் உடமைகள் மீதான தாக்குதல்களும் மேற்கொள்ளப்பட்டு வரும் நிலையில் குறித்த பௌத்த துறவிகள் குழு யாழ்ப்பாணத்திற்கு வரவுள்ளது. இச்செயற்பாடானது மக்கள் மத்தியில் மேலும் குழப்பத்தை ஏற்படுத்தியுள்ளதுடன் முரண்பாடுகளையும் தோன்றுவிக்கலாம் எனவும் அறிய முடிகின்றது.

இதேவேளை இன்றைய தினம் வடக்கு மாகாண சபையின் அமர்வானது கைதடியில் இடம்பெறவுள்ளதுடன் அங்கு நாவற்குழி விகாரை தொடர்பிலும் அமைக்கப்படவுள்ள தாது கோபுரம் குறித்தும் பிரஸ்தாபிக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

ராவண பலய பௌத்த அமைப்பு கடந்த சில காலங்களுக்கு முன்பு வவுனியாவில் பாரிய கண்டன போராட்டங்களை ந[illegible] குழப்பங்கள் பலவற்றையும் உருவாக்கியிருந்த நிலையில், தற்போதைய நிலைமை தொடர்பாக குறித்த விகாரையின் விகாராதிபதி ரத்னஸ்ரீ தேரரை தொடர்பு கொண்டு தகவல் கேட்டறியப்பட்டுள்ளது.

விகாராதிபதி கூறுகையில், பௌத்த துறவிகள் அடங்கிய குழுவினர் யாழிற்கு வருகை தரவுள்ளனர் என்பது உண்மை. ஆனால் அவர்கள் நாகவிகாரைக்கு தான் செல்லவுள்ளார்கள்.

மேலும் வெளிமாவட்டங்களில் உள்ள விகாரைகளின் காணிகளுக்குள் கட்டடம் அமைப்பதென்றால் அனுமதி எடுப்பதில்லை அதே போன்று தான் எமது விகாரை காணியினுள்ளும் தாது கோபுரம் அமைப்பதற்கு அடிக்கல் நாட்டினோம். அதற்கு தற்போது அனுமதி எடுக்குமாறு சாவகச்சேரி நகரசபையால் அறிவிக்கப்பட்டுள்ளது.

நகரசபையில் அனுமதி எடுப்பதற்[illegible] ஒழுங்குகளை மேற்கொள்ளவுள்ளேன். அத்துடன் இன்றைய தினம் எந்த இடங்களிலும் ஆர்ப்பாட்டங்கள் மேற்கொள்ளப்பட்டால் அதற்கும் எனக்கும் தொடர்பில்லை நான் தமிழ் மக்களுடன் ஒற்றுமையாக வாழ விரும்புகிறேன் என விகாராதிபதி தனது பதிலைத் தெரிவித்தார். (செ-4-9)


விரைவு பொதிகள் சேவை, விமான பயணச்சீட்டுகள் விசா சேவைகள்
● அனைத்து சேவைகளும் மிக குறைந்த கட்டணத்தில்
● மேலதிக கட்டணமின்றி பொதிகள் வீடுகளில் வந்தே பெற்றுக்கொள்ளப்படும்.
● விடுமுறை நாட்களிலும் ஞாயிற்றுக்கிழமைகளிலும் அலுவலகங்கள் உண்டு.
● எம்மிடம் சேவைகளை பெற்றுக்கொள்பவர்களுக்கு தங்கப்பவுண், மோட்டார் சைக்கிள்கள் வெல்லும் வாய்ப்பு

UK-550*/=Kg
மற்றும் அனைத்து நாடுகளுக்கும் குறைந்த விலையில்
DELIVERY IN 3 - 5 DAYS
V2 TRAVELS-0768226240
● யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ● நெல்லியடி ● பருத்தித்துறை ● வல்வெட்டித்துறை



வெளிநாடுகளுக்கான பொதிகள் சேவை
மிகக்குறைந்த கட்டணத்தில்
UK - 5Kg மேற்பட்ட பொதி 800/=
UK - 11 Kg மேற்பட்ட பொதி 500/=
மற்றைய நாடுகளுக்கும் விசேட சலுகைகள்
திருமுருகன் கொம்நெற் Pvt (Ltd)
T.P:- 077 755 4528
யாழ்ப்பாணம், திருநெல்வேலி, நெல்லியடி பருத்தித்துறை, சங்கானை, கிளிநொச்சி



கோணேஸ்வரனின் ஜேர்மன் கல்லூரி
ஜேர்மன், சுவிஸ், ஒஸ்றியா ஆகிய நாடுகளுக்கான டொச் வகுப்புக்கள் இங்கு நடைபெறுகின்றது.
மற்றும் இத்தாலி செல்வதற்கான பாட நெறிகளும் கற்பிக்கப்படும்
ஆரியகுளம் சந்தி, (புத்த விகாரைக்கு எதிரில்) யாழ்ப்பாணம். 2-ம் மாடி.
077 970 7322



முகாமைத்துவ உதவியாளர்
போட்டிப் பரீட்சை இறுதிக் கருத்தரங்கு
வெள்ளி (26.05)
காலை
9.30 - 3.30
சனி (27.05)
பி.ப 12.30-4.30
மொத்தக்கட்டணம் 500/=
D.M.I
ஆரியகுளம் சந்தி



போட்டிப் பரீட்சை வகுப்புக்கள்
SLAS
சனி (27.05) வகுப்பு நடைபெறாது.
ஞாயிறு 9.00 வழமை போல் (28.05) நடைபெறும்.
முகாமைத்துவ உதவியாளர்
வெள்ளி(26.05)
சனி(27.05)
காலை 9.00 - 3.30மணிவரை
வடமாகாண அபிவிருத்தி உத்தியோகத்தர்
சனி - 10 மணி
முன்பள்ளி ஆசிரியர் தெரிவு வகுப்புக்களும் நடைபெறுகின்றன
ஞாயிறு 1 மணி
076 688 3394
யாழ்ப்பாணக் கல்லூரி பட்டப் படிப்புகள் பிரிவு
(யாழ்.ஆஸ்பத்திரி வீதி, கொமர்ஷல் வங்கி அருகில்)



உடனடி வேலைவாய்ப்பு
உலகளாவிய ரீதியில் விஸ்தரிக்கப்பட்டுள்ள எமது Dynamic நிறுவனமானது இலங்கையில் வவுனியா, மட்டக்களப்பு, யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, கிளிநொச்சி, மன்னார் ஆகிய மாவட்டங்களில் பல கிளைகளை நிறுவ உள்ளதால் அதற்கான சிறந்த பணியாளர்கள், களஞ்சிய பாதுகாவலர் மற்றும் உதவி முகாமையாளர்கள் போன்றோரை தெரிவு செய்யவுள்ளதால் உடனடியாக கீழ்க்காணும் தொலைபேசி எண்களுடன் தொடர்பு கொள்ளவும். தொடர்பு:
0766668385, 0772302795



Certificate in Computer Network Engineering
+

இலவச PC HARDWARE பயிற்சி நெறி
Next Batch : 27.05.2017
Duration: 2 Months
iCS EDUCATION
77, மணிக்கூட்டு கோபுர வீதி, யாழ்ப்பாணம்.
021-7306000, 076-7013060



O/L உடன் மாதம் 25,000/- சம்பாதிக்க!
100க்கும் மேற்பட்ட வெற்றிடங்கள்
நூற்றுக்கணக்கான மாணவர்களுக்கு பயிற்சியுடன் வேலைவாய்ப்பை வழங்கி வெற்றிநடை போடும்
Diploma in Tourism & Hotel Management 9ம் அணி
3 மாத இலவச ஆங்கில வகுப்புடன்
புதிய பிரிவு ஆரம்பம் ஜூன் 6 செவ்வாய் காலை 10மணி
பயிற்சிக் காலத்திலேயே பணம் சம்பாதிக்கலாம்
யாழ் - கொழும்பு முன்னணி ஹொட்டேல்களில் வேலைவாய்ப்பு
வெளிநாடு செல்ல விரும்புவோருக்கு விசா ஏற்பாடு
அனுமதிகளுக்கு:
077 3616 798 021 222 0011
SIKARAM ACADEMY
Business · Hospitality · English
SCHOOL of HOSPITALITY
175,முதலாம் குறுக்குத்தெரு (வேம்படி வீதி),யாழ்ப்பாணம்.


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 25.05.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.